மாதப் பத்திரிகை

ஆசிரியர்:

கா. வே. ராமசந்திரன்

மூன்ருவது வால்யூம் விக்கிரம வருஷம் ஆனிப் பகுதி

15—6—1940.

விஷய ஸூசிகை.

விஷயம்: பக்கம்

கவிதா விமர்சம்

1. சௌசீல்யம் ... வே. திருப்பதி நாயுடு ... 321
2. இராம பரிஷ்வாங்கம் ... "மாயக்கூத்தன்" ... 323
3. சொல்லாக்கச் சரிதம் ... வே. நாராயணன், M.A., M.L., ... 325

புதுக் கற்பனைகள்

1. கும்பராணு ... "அஜந்தா" ... 329
2. கடவுளை வென்ற கருமி ... "பழகு வெட்டி" ... 338
3. உமர் கைய்யூமின் ருபையத்து ... "பாரத்வாஜன்" ... 342
4. மானஸீ (நாடகம்) ... K. வரதாச்சாரி, B.A., B.L., ... 345
5. ஊருபங்கம் ... வ. வேணுகோபாலன் ... 354

கீதப் பகுதி

1. சங்கீதம் எனக்கு பிடிப்பதேன்? ... R. ஸ்ரீநிவாஸன், M. A., ... 361
2. வாத்யேச்வரீ வீணை ... டாக்டர் வே. ராகவன் ... 365

மொழிபெயர்ப்புப் பகுதி

1. கதைக் கடல் ... டாக்டர் வே. ராகவன் 369

பெண்டிர் பகுதி

1. வாள்விழியார் வெற்றி ... "கை. சு. வே." ... 382

அநுஷ்டானப் பகுதி.

1. சங்கரர் திருமொழி ... "சங்கராடிப் பொடி" ... 383

அறிவிப்பு.

'சில்பஸ்ரீ'க்குக் கட்டுரை எழுத விரும்புவோர் முதல் வால்ம்யூதைப்பகுதியில் 2, 3-வது பக்கங்களில் உள்ள 'சில்பஸ்ரீ மாதப் பத்திரிகையின் நோக்கங்கள்' 'சில்பஸ்ரீயில் எழுதப்படும் விஷயங்கள்' என்னும் குறிப்புகளைக் காண்க. அனுப்பப்படும் கட்டுரைகளைத் தாளின் ஒரு பக்கத்திலே மட்டும் எழுதுமாறு பிரார்த்திக்கிறோம். பிரசுரிக்கப்படாத கட்டுரைகளைத் திரும்பப் பெறவிரும்புவோர் தபால் தலையும் உடன் அனுப்புமாறு பிரார்த்திக்கிறோம்.

இப் பத்திரிகையில் வெளிவரும் புனைந்துரைகளிலுள்ள பெயர்கள் யாரையும் குறிப்பன அல்ல; எல்லாம் கற்பனைப் பெயர்களே அவை. கட்டுரைகளிலே கூறப்படும் அபிப்பிராயங்கள் அவற்றை எழுதியவர்கள் அபிப்பிராயங்களே; அவைகளுக்கு பத்திரிகாசிரியர் ஜவாப்தாரி யல்ல.

சில்பஸ்ரீ

தமிழ் மொழியையும் கலைகளையும் வளர்ப்பதற்காகவே அமைந்ததொரு பத்திரிகை. டபிள் க்ரௌன் (Double Crown) அளவில் 64 பக்கங்கள் கொண்டு, மாதந்தோறும் வெளிவரும்.

தனிப்பிரதி	விலை அணா 4.
வருஷ சந்தா (உள்நாட்டுத் தபால் சார்ஜு உள்பட)	ரூ. 3.



கவிதா விமர்சம்.

சௌசீல்யம்.

(வே. திருப்பதி நாயுடு.)

விஷயப்பிராவண்யமும் சாஸ்திரஞானமும் உத்கிருஷ்ட ஜன்மமும் சீலம் ஒழுக்கம் முதலிய ஒன்றும் இன்றிக்கே அன்பு ஒன்றே காரணமாகவுள்ளவர்களை எப்போதும் சன்மானிப்பதே சௌசீல்யம் எனப்படும். இத் தகைய சௌசீல்யத்திற்குப் பாத்திர மானவர்கள் ராமாவதாரத்தில் குகன் சபரி போன்றவரும் கிருஷ்ணவதாரத்தில் வக்கிரை ததிபாண்டன் முதலியோரும். பாணாழ்வார் மாறனேர்நம்பி ஆகிய வைணவ பக்தர்களும் நந்தன் கண்ணப்பர் போன்ற சைவ பக்தர்களும் இவ்வகுப்பிற் சார்ந்தவர்களேயாவர். இதனை திருமங்கை யாழ்வார் பெரிய திருமொழியில்

> ஏழையேதலன் கீழ்மகன் என்னாது
> இரங்கி மற்றவர்க்கின்னருள் சுரந்து
> மாழைமான் மடநோக்கியுன் தோழி
> யும்பியெம்பியென்றொழிந்திலை உகந்து
> தோழன் நீ யெனக்கிங்கொழியென்ற
> சொற்கள் வந்தடியேன் மனத்திருந்திட
> ஆழிவண்ண நின்னடியிணை அடைந்தேன்
> அணிபொழில் திருவரங்கத்தம்மானே.

இப்பாசுரத்தின் கருத்துப்பற்றியே கம்பநாடர் சுந்தரகாண்டம் காட்சிப்படலத்தில் சீதாப் பிராட்டியின் மனக்கருத்தைக்கொண்டு ஸ்ரீராமபிரானின் சௌசீல்யத்தை சித்திரிக்கிறார்.

> ஆழநீர்க் கங்கை மம்பிகடாவிய
> யேழை வேடனுக் கெம்பியன்றம்பி நீ
> தோழன் மங்கை கொழுந்தியெனச் சொன்ன
> வாழிநண்பினையுன்னி மயங்குவாள்.

மேலும்,சௌசீல்யத்தைப்பற்றி உதாரணமாக ஸ்ரீராமபட்டாபிஷேக சமயம், அயோத்திமாநகரில் பொன்மயமான மண்டபத்து நவமணிகளால் இழைக்கப்பட்ட அரியாசனத்திடையே யமர்ந்து ஐம்பத்தாறு தேயத்தரசர்களும் போற்ற வீற்றிருக்கும் சமயம், அதாவது

> அரியணை யனுமன்றாங்க வங்கதனுடைவாள் ஏந்த
> பரதன் வெண்குடை கவிக்க மற்றிருவரும் கவரி வீச
> விரை செறிகுழலி யோங்க வெண்ணெயூர் சடையன் றங்கள்
> மரபுளோர் கொடுக்க வாங்கி வசிட்டனே புனைந்தான் மௌலி.

இத்தகைய வைபவம் நடக்கும் சமயத்தில் பரம ஏழையும் அழுக்குப் படிந்த ஆடையும் நரைத்தலையும் எலும்புக்கூடு போன்ற தேகமும் கேளாத செவிகளும் தூரப்பார்வையில்லாத கண்களுமுடைய வயோதிகன் ஒருவன், "அடே ராமா! இத்தனை காலமென்னை விட்டு எங்கடா போனாய்" என்று அழுதுகொண்டு ஆசாரவாசற் காவலும் கடந்து அரியணைப் பக்கத்து தள்ளாடிக்கொண்டு வர, ஸ்ரீராகவன் ஆசனத்திலிருந்தும் இறங்கியோடி அவரை தனது நீண்ட கரங்களால் கட்டியணைத்துக் கொண்டு சமாதானப்படுத்தி தனது பீதாம்பரமாகிய உத்தரீயத்தால் அவரது கண்களினின்றும் பீளையோடு ஒழுகும் கண்ணீரைத் துடைத்தார். அப்பொழுது சபையிலிருந்தோர் யாவரும் "இவன் யாதோ ஒரு பைத்தியக்காரன் போலிருக்கிறது. இவனை ஸ்ரீராமர் ஏன் இப்படி தேற்றுகிறார்" என்று பிரமிக்கவே, ஒருவரும் பேசாமல் சபை நிசப்தமாயிருந்தது. அப்பொழுது ஸ்ரீராகவன் சபையோரை நோக்கி, "இப்பெரியார் யார் என்று உங்களுக்குத் தெரியுமா? இவர்தான் எனக்குத் தாத்தா. என் பிதாவை பெற்ற அஜ மகாராஜா. எப்படி என்றால், இம்மஹானுபாவரை தவிர வேறொருவராலும் நான் 'அட ராமா!' என்று கூப்பிடும் பாக்கியம் பெறவில்லை. என் தகப்பன் தாய்மார்கள் எல்லோரும் என்னை ரகுபதி என்று கூப்பிடுவார்கள். ஏனெனில், ரகுவம்சம் நின்று போவதாயிருந்து வெகு காலத்துக்கப்புறம் அதிகப்பிரயத்தனத்தால் நான் முதலில் பிறந்ததினால் அப்படி கூப்பிடுவதாக என் தாய்மார் எனக்குச் சொன்னார்கள். மற்ற பிரஜைகளெல்லாரும் இளவரசன் என்பர். ரிஷிகள் முனிவர் ஆகியோர் 'தசரத புத்ரா' என்பர். மிதிலை நகரத்தார் 'ஸீதாபதி' என்பர். ஆனால் 'அடே' என்ற விசேஷபதத்தைக்கொண்டு அழைப்பதற்கு இப்பெரியாருக்கு மட்டும் பாத்தியம் உண்டு. மேலும் நான் சிறு குழந்தையாய் இருக்கும்பொழுது முதற்கொண்டு ஒருநாள் தவிராது வந்து என்னை எடுத்து விளையாடுவார். நான் சாப்பிடும் பக்ஷணங்களை நாங்கள் இருவரும் பகிர்ந்தே சாப்பிடுவோம். என் மணநிமித்தம் நான் அயோத்தியைவிட்டு போய் சிலநாள் கழித்து வரும்வரை இவர் பசி தாகம் நித்திரை முதலானது இல்லாமல் என்னையே மனத்திற் கொண்டிருந்து, என்னைப் பார்த்த பிறகே துக்கம் நீங்கினார். இப்பொழுதும் இந்தப் பதினான்கு வருடமும் அப்படித்தான் இருந்திருக்கிறார். ஆதலால், இவர் எனக்கு பாட்டனார் என்னத் தட்டில்லை" என்று கூறி முடித்து அவருக்கு தக்க ஆசனம் கொடுத்து அமரும்படி செய்தார்.

இராம பரிஷ்வங்கம்.

(மாயக்கூத்தன் எழுதியது.)

பாற்கடலுள் பரந்தாமன் துயில்கின்றான்; கருமாணிக்கமாகிய அவனது திருமேனியின் நிறத்தால் பாற்கடலும் கருங்கடலாகின்றது. இம்மாறுபாடு அவனுடைய திருமேனியைத் தீண்டும் பேற்றினால் ஆய பயன். இவ் வரும் பயனைப் பெறுதற்கு பாற்கடல் எங்கே புக்கு எத்தவம் செய்திட்டதோ என்று வியப்பர் பொய்கை யாழ்வார்,

மாலும் கருங்கடலே என்னோற்றாய்? வையக முண்டு
ஆலி னிலைத்துயின்ற ஆழியான்—கோலக்
கருமேனிச் செங்கண்மால் கண்படையுள் என்றும்
திருமேனி நீ தீண்டப்பெற்று.

என்னும் பாசுரத்திலே.

பகவானுடைய திருமேனியைத் தீண்டுதலே மன்னுயிர்கள் பெறும் நிலையிலாத ஆக்கைகளின் பயன். காரிமாறப் பிரானும்

மடவன் னெஞ்சம் காதல் கூர வல்வினையேன் அயர்ப்பாய்த்
தடவுகின்றேன் எங்குக் காண்பன் சக்கரத் தண்ணலையே

என்றும்

வேயகம்பால் வெண்ணெய் தொடுவுண்ட ஆனாயர்
தாயவனே! என்று தடவும் என் கைகளே

என்றும் இத்தகைய ஸ்பர்ச ஸுகம் பெறவே முயன்று, தன் தக்க ஞானக்கண்களாலே கண்டு தழுவுகின்றனர். பகவானை ஸ்பரிசிப்பதே பரமானந்தம்; அதனைப் பெறாது தவிக்கும் சாதுக்களுக்கு 'என்னையே தந்து அளித்துக் காப்பதற்கே நான் யுகந்தோறும் அவதரிக்கிறேன்' என்று விளக்குகிறார் ஸ்ரீகிருஷ்ணபகவான். இவ்வாறே ராமாவதாரத்திலே ஒரு சிலர் பகவதாலிங்கனத்தைப் பெற்று உய்ந்த பிரகாரத்தை வால்மீகி வருணித்துள்ளது கவனித்தற் குரியது.

தன்னுடைய காலிலே விழுந்து பரதன் பிரார்த்திக்கும்போது, இராமன் "உனக்கு இத்தகைய வினய புத்தி உண்டாயிருப்பதால் நீ புவி முழுவதையுமே பரிபாலனஞ் செய்வதற்குரிய சக்தியைப் பெற்றவன் ஆகிவிட்டாய். நானோ தந்தைக்கு அளித்த வாக்கைக் கடந்து செல்ல இயலாதவனாய் இருக்கிறேன்" என்று விடையளித்தான். அது கேட்ட பரதன் "அவ்வாறாயின், இப்பொற் பாதுகைகளில் ஆரோகணித்து ஸம்ரக்ஷண பாரத்தையும் இவையே வகிக்குமாறு உத்திரவிடுங்கள்" என்று பிரார்த்தித்தான். "பதினான்கு வருஷங்கள் பூர்த்தியானதும் தங்கள் தரிசனம் கிடையாவிட்டால் நான் தீயிற் குதிப்பேன்" என்று பிரதிக்ஞையும் செய்தான். அப்பிரதிக்ஞையை அங்கீகரித்த ஸ்ரீராமன் பரதனையும் சத்துருக்கனனையும் அன்புறத் தழுவிக் கொண்டான் என்று வருணித்திருக்கிறார் வால்மீகி பகவான். ராவணவதம் ஆன பின்பு புஷ்பகவிமானத்தில் ஏறி வந்த ராமபிரானைக் கண்ட பரதன் மேரு பர்வதத்திலே உதித்த சூரியனைத் தொழுவதுபோல் தொழுதான். அவ்விமானம் பூமியில் இறங்கவே இராமபிரான் பரதனை விமானத்தில் ஏற்றுவித்தான். பரதன் மீண்டும் அடிபணிந்தான். அவனை எடுத்து மடிமீது அமர்த்தி ஆனந்தமுற்றுத் தழுவிக்கொண்டான் இராமபிரான்.

இவ்விரு கட்டங்களிலும் ஓர் அரிய உட்கருத்து அமைந்துள்ளது. பகவானை அணைய விரும்பினால் அதற்கு உபாயமாவது அவனது சுடரடி தொழுதெழுதலே யாகும். "பகவான் வேண்டிற்றெல்லாம் தரும் இயல்பிலன் ஆயினும், அடிச்சார்ந்தவர்க்கே அவன் தன்னைத் தருகின்றான்" என்னும் உண்மையை வேறு சந்தர்ப்பங்களாலும் விளக்குவர் வால்மீகிபகவான்.

பிரசரவண கிரியிலே சுக்கிரீவனுடைய வரவை எதிர்பார்த்து நின்ற இராமசந்திரனை

வானர சேனை புடை சூழச்சென்றடைந்தான் அக்கவியரசன். கூம்பிய தாமரை மலர்களைக் கொண்ட தடாகம் போன்றது கை கூப்பி நின்ற வீரர்களால் விளங்கிய அவ்வானரசேனை. அதனைக் கண்டு சுக்கிரீவனிடம் இராகவன் பிரீதி யடைந்தான். தன் கால்களிலே தலை யாற் பணிந்த அந்த வானரராசனை அன்போடும் கௌரவத்தோடும் தன் மார்புற அணைத்துக் கொண்டான் இராகவன்.

‘மீண்டும் இராவணனுக்கு மகுடபங்கம் செய்வித்து மீண்டபோது சுக்கிரீவனைத் தழுவினான் இராமபிரான்’ என்று வருணித்திருப்பதும் ‘தன் அடியான் செய்த சேவகத்திற்குக் கைம்மாறாகவே தன் திருமேனி ஸ்பரிசத்தைக் கொடுக்கிறான் பகவான்’ என்பதை விளக்குகின்றது. பிராட்டியைக்கண்டு அவள் தந்த சூடாமணியைக் கொணர்ந்து கொடுத்த சிறிய திருவடியின் அடிமைத்திறனை மெச்சி இராமன் தன் பரிஷ்வங்கத்தை அளித்த விருத்தாந்தத்தாலும் இவ்வுண்மையே வற்புறுத்தப்படுகின்றது.

குகப்பெருமாள் ஸ்ரீராமனைப் பார்த்து, “நாங்கள் அடியோங்கள்” என்றதும், இராமசந்திரன் அவனை தோள்களால் ஆரத் தழுவினான் என்று வால்மீகி பகவான் கூறியுள்ளதும் கவனித்தற்குரியது. விபீஷணனுக்கு அபயப்பிரதானம் அளித்து, அவனுக்கு இலங்கா ராச்சியம் கொடுத்து ‘இராவணனையும் சங்கரித்துவிடுகிறேன்’ என்று சபதஞ் செய்தபோது, விபீஷணன் “நானும் இலங்கைப் போரிலே கலந்துகொள்கிறேன்; என்னையும் சேனையிலே சேர்த்துக்கொள்ள வேண்டும்” என்று தலை வணங்கி நின்றான் அந்த ராக்ஷஸ மன்னன். அதன் பிறகே இராமன் விபீஷணனைத் தழுவிக்கொண்டான். இவ்வரலாறும் மேற்கூறிய உண்மையை வற்புறுத்தும்.

‘அடிபணிந்தாரின் கருத்தை அறிந்து அவர்கள் உய்யுமாறு பகவான் பரிஷ்வங்கப் பேற்றை அவர்களுக்கு உதவுகிறான்’ என்று பல்வகையாலும் விளக்குகின்றார் ஆதி கவியான வால்மீகி முனிவர்.

*சொல்லாக்கச் சரிதம்.

(வே. நாரரயணன், M.A. ,M.L.,)

ஒரு மொழியின் குணாதிசயங்களை அறிந்து கொள்வதற்கு அம்மொழியில் தற்போது வழங்கும் சொற்களைக் கவனிக்க வேண்டுமே யல்லாது எங்கெந்த பாஷைகளினின்றும் எங்கெந்த பதங்கள் வந்தன என்று ஆராய்ந்து அவற்றையெல்லாம் அம்மொழியினுக்குப் புறம்பானவை என்று நீக்க முயலுதல் தவறு. ஒரு பதத்தின் உற்பத்தியைக் கொண்டே அதனை விலக்குதல் நியாயமாகாது. நமது தமிழ்த் தாயின் மனம் குறுகியதன்று. நாம் அளவிட்டு அறிய இயலாதவாறு விசாலித்து எங்கும் பரந்துள்ளது. பிறமொழிகளினின்றும் விசேஷமாக வடமொழியினின்றும் அனேக பதங்களை ஸ்வீகரித்து அவற்றிற்கெல்லாம் தன் சொந்த பதங்களுக்குரிய பதவிகளைப் பகிர்ந்தளித்து யாதொரு வித்தியாசமும் பாராட்டாமல் அவற்றையும் பேணிப்போற்றி வருகின்றது.

இந்தியாவின் ஒரு பகுதியிலே பேசப்படும் பாஷை ஆயினும், இதர தேச பாஷைகளுக்கு இல்லாத ஒரு தனிச்சிறப்பு தமிழுக்கு வாய்ந்துள்ளது. ஸம்ஸ்கிருதத்திற்கு இணையாகக் கருதப்படும் பெருமை இதரநாட்டு மொழிகளுக்கு இல்லை. தமிழ் மட்டுமே வடமொழியோடு சரிநிகர்சமானமாய பதவிபெற்றுத் தென் மொழியென்று கௌரவிக்கப்படுகின்றது. இம்மொழியிலே பல பாஷைச் சொற்களும் வந்து குவிந்துள்ளன. அனேக வடமொழிப்பதங்கள் இதனை அலங்கரிக்கின்றன. ஆயினும் பிற இந்திய மொழிகளைப் போன்று ஸம்ஸ்கிருத மயமாகிவிடாமல், எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐவகை இலக்கணங்களையும் சிறப்பாகக் கொண்டு பிறமொழிகளினின்றும் திறை கொண்ட சொற்களையும் தன் சக்தியால் தமிழாக்கி அவற்றிற்குத் தமிழ்ப் பதவிகளை அளிக்கும் வண்மைதான் உயர்வற வுயர்நலம் உடையது தமிழ், என்னும் பொன்றாப் புகழினை விளக்குவதாகும்.

முதலிலே சில ஆகாரச் சொற்களை எடுத்துக் கொள்வோம். சாப்பாடு என்பது பழந்தமிழ் மக்கள் கேட்டறியாததோர் சொல். ஊண், உணவு என்பவை தாம் பழைய வழக்கு. இந்தச் சாப்பாடு எங்கிருந்து வந்தது என்று நிச்சயமாகக் கூறுவதற்கில்லை. இது தெலுங்கிலும் மலையாளத்திலும் வந்துள்ளது. சாப்ஹ என்னும் தாது ஹிந்தியிலே தின்னுதல் என்னும் பொருளிலே காணப்படுகின்றது. அது தான் சாப்பாடு என்றாகி தெலுங்கு தமிழ் மலையாளம் முதலிய பாஷைகளிலே புகுந்து விட்டதோ என்று கருத இடமுண்டு. சர்வ் என்னும் வடமொழித் தாதுவோடு ஒப்பிட்டுப் பார் என்பர் சர்வகலாசாலைத் தமிழ் அகராதிக்காரர்.

சாப்பாட்டிலே முக்கிய அம்சம் சாதம். இதன் வரலாற்றினையும், நாம் நிர்ணயிக்கக் கூடவில்லை. இதனையும் பழந்தமிழ் மக்கள் அறியமாட்டார்கள். அவர்கள் சாதத்தைச் சோறு என்றே சொல்லிவந்தனர். பிரசாதம் என்பதன் சுருக்கந்தான் சாதம் என்று சாதிப்பர் ஒரு சிலர். உண்ணும் சோறு பருகு நீர் தின்னும் வெற்றிலை எல்லாம் பகவான் அளித்த பிரசாதம்தான் என்று குறிப்பதற்கே சோற்றைச் சாதம் என்றனர் போலும்.

பழந்தமிழ் மக்கள் மிளகைக் கறி என்றனர். மிளகிட்டுச் செய்த உணவுப் பண்டங்களையும் அவர்கள் கறி என்றனர் என்பதைச் சங்கச் செய்யுட் பிரயோகங்களால் அறியலாம். இப்பொழுதைக் கறியோ காய் கிழங்குகளாற் செய்த உபகரண பதார்த்தங்களையும் பக்குவப் படுத்திய மாமிச உணவையும் குறிக்கின்றது. இம்மிளகு என்னும் கறி அக்காலத்தில் கிரேக்க ரோம நாடுகளிற் சென்று சிறப்புற்றது போலவே, இக்காலத்தில் சாப்பாட்டில் உபகரண பதார்த்தமாகவுள்ள மாக்கறியும்

* இது 7–6–1940 அன்று திருச்சி அகில இந்திய ரேடியோ நிலயத்தில் பேசப்பட்டு, அனுமதியுடன் அச்சிடப்பட்டது.

மாமிசக்கறியும் அவை தயாரித்தற்கு உரிய பொடியும் மேனுடுகளிலும் மேனாட்டு மொழிகளிலும் சென்றுள்ளன. கறியின் மூலம் என்ன? 'அரிமா கொடிப்புற் கறிக்குமோ?' என்பது நாலடி. கறிப்பது கறி என்று ஆயிற்று என்று இதனின்றும் ஊகிக்கலாம். ஆயின் கறி என்பது பழந்தமிழ்ப் பதமே. சோறு உண்ணும்போது கடித்துக்கொள்வதற்கான உபகரணமாதலின் கறிக்கு இப்பெயர் வந்தது என்று கொண்டால் மிளகுக்குக் கறி என்று பெயர் வந்ததும் இக்கறியிலே அக்காலத்திலே மிளகையே மிகுதியாகச் சேர்த்ததாலேதான் என்று கூறிவிடலாம். 'கடி மிளகு தின்ற கல்லா மந்தி', என்று ஒரு பழஞ்செய்யுளிலும் 'மாங்காய் நறுங்கடி' என்று கலித்தொகையிலும் வருவன இவ்வூக்கத்தை வலியுறுத்துகின்றன.

இனி, தற்காலத்தில் வழங்கும் சில உணவுப்பண்டங்களின் பெயர்களை நோக்குவோம். சாம்பாரும், டாங்கரும், சேமியாவும் கோசும்பரியும் நாம் மாராட்டியரிடமிருந்து கொண்டன. அல்வாவும் மசாலாவும் முரபாவும் அரபிச்சொற்கள். வடநாட்டார் நமக்கு உதவியன கிச்சடியும், கீரும், பக்கோடாவும், பஜ்ஜியும், பூரியும், பூந்தியும், சொஜ்ஜியும் கேசரியும். பாலும் மோரும் பழந்தமிழ்ச் சொற்களே. ஆனல் தயிரும் நெய்யும் அப்படியன்று. ததி ஸ்நேஹம் என்னும் வடமொழிச் சொற்களின் தற்பவங்களே இவை என்னலாம். ஆயினும் என்ன? இவை சங்ககாலத்திலேயே தமிழாகிவிட்டனவன்றோ?

ஆகாரத்திற்குப் பிறகு விவகாரம்! 'இளைப்பாற சற்று உட்காரலாம். சற்று படுத்துத் தூங்கலாம்' என்கிறோம். இப்படிச் சொன்னல் பழந்தமிழனுக்கு விளங்காது. உட்கார்தல், என்பதை பழந்தமிழர் இருத்தல் என்றனர். தூங்குதல் என்றால் அவர்கள் தொங்குதல் அல்லது தாமதித்தல் என்றே பொருள் கொள்வர். நித்திரை போகுதல் என்ற பொருளிலே தூங்குதல் என்றும் பதத்தை அவர்கள் உபயோகித்ததில்லை உறங்குதல் என்ற சொல்லையே உபயோகித்து வந்தனர். ஆதலால், தூங்குதல் என்பது பழைய பொருளையிழந்து புதுப்பொருள் கொண்டதோர் பழந்தமிழ்ச் சொல். உட்கார்தலோ எங்கிருந்து வந்தது என்று நாம் அறியக்கூடாத வகையிலே தமிழிலே வந்து புகுந்து உட்கார்ந்துகொண்டது. இதனையொட்டி ஒரு கதை உண்டு. அது என்னவென்றால், ஸ்ரீரங்கத்துப் பெருமாளுக்குரிய யானை வாகனத்திற்கு சோளேந்திரசிங்கன் என்று பெயராம். அந்த யானையானது பெருமாள் ஆரோகணிப்பதற்கு படிந்து கொடுக்குமாம். அதுபோலவே நம்மாழ்வார் தம்முடைய பாடலுக்குப் பெருமானைப் பணித்து கொடுக்கச் செய்கிறேன் என்று மலக்கு நாவுடையேன் என்னும் சொற்களால் சுட்டிக் காட்டியுள்ளாராம். இதை விவரிக்கும் திருவாய்மொழி வியாக்கியானமாகிய ஈட்டிலே சோளேந்திரசிங்கனை உருக்காக்கப் பண்ணுகிறேன் உன்று ஆழ்வார் சொல்வதாகக் குறிப்பிட்டுள்ளது. இந்த வியாக்கியானத்தில் உள்ள அரும்பதங்களுக்கு உரை எழுதிய ஜீயர் உருக்காக்க என்பதற்கு இருக்கும்படி என்று உரை எழுதியுள்ளார். இருத்தல் என்ற பொருளைக் குறிக்கும் இந்த உருக்காத்தலே உட்கார்தல் என்று ஆயிற்று என்பது அகாராதிக்காரர் செய்த ஆராய்ச்சி. உட்கார்தல் என்பது உட்கு என்னும் தமிழ்ப்பதத்தினின்றும் வந்திருக்கலாம் என்ற ஊகமும் காணப்படுகின்றது. அச்சம், நாணம் மிடுக்கு கௌரவம் என்று பல பொருளில் வந்துள்ளது, உட்கு என்றும் சொல். ஆகலின் வீற்றிருத்தல் என்னும் பொருளிலே உட்கு ஆர்தல் என்று வழங்கப் பெற்று நாளடைவிலே அந்த உட்கார்தல் இருத்தல் என்னும் சொல்லின் பரியாயமாகிவிட்டது என்பது பொருத்தமேயாகும்.

அடுத்தபடியாக, நமது வீடுகளிலுள்ள நாற்காலி, மேஜை அலமாரி, பாய், சமுக்காளம், கட்டில், மெத்தை முதலியவற்றைக் கவனிப்போம்.

நாற்காலி தனித்தமிழ்ச் சொல்லே. ஆயினும் ஆதிகாலத்தில் அது ஆடு மாடுகளையே குறித்து வந்தது. இப்பொழுதுதான் நாலு காலும், இரண்டு கையும் ஒரு முதுகுமுடைய தோர் ஆசனப்பலகையைக் குறிப்பதாயிற்று. சில நாற்காலிகளுக்குக் கைகள் இல்லையாதலின் நாற்காலி என்னும் வஸ்து கால்களாலேயே

பெயர் பெற்றது போலும். தற்கால நாற்காலிகள் போன்றவை முற்காலத்திலே இல்லை என்றாலும் பழந்தமிழ் மக்கள் உச்சஸ்தானத்திலே வீற்றிருப்பதற்கென்று, நாலு, ஆறு, எட்டு, பத்து என்னும் கணக்கிலே பல கால்களையுடைய உன்னத ஆசனங்களை அமைத்துக்கொண்டிருக்க வேண்டும். ஆனாலும், அவர்கள் அவற்றிற்கு நாற்காலி, ஆறுகால், எண்கால், பத்துக்காலி என்றெல்லாம் பெயரிடவில்லை. அதற்குக் காரணம் காலி, நாற்காலி என்று அவர்கள் ஆடு மாடுகளுக்கும், ஆறுகால் என்று வண்டுக்கும் பெயரிட்டதேயாகும், என்று சொல்லலாம். ஆடுமாடுகளைக் காலி என்று சொல்லும் வழக்கு அருகிவிடவே, நாற்காலி என்ற பெயர் பெருவழக்காகிவிட்டது போலும்.

பழந்தமிழர் படுக்கையைப் பாயல் என்றனர். பாய் என்ற சொல்லும் பாயல் என்ற சொல்லும் ஒன்றே. ஒரு பாம்பை மெத்தையாக விரித்து அதிலே உறங்குகிறார் திருமால் என்பர் பெரியாழ்வார். மெத்தென்று இருப்பதால் மெத்தை என்று பஞ்சடைத்த படுக்கைக்குப் பெயர் வந்தது என்றும், மெத்தென்பது 'ம்ருது' என்றும் வடசொல்லின் திரிபு என்றும் வரலாறு கூறலாம். வடமொழியாளர் கட்டில் என்பதுவும் இவ்வாறே கட்வா என்னும் வடசொல்லின் திரிபே என்பர். சமுக்காளமும் ஹிந்திச்சொல் ஒன்றின் திரிபேயாம். மேஜையும் அலமாரியும் மேனாட்டார் கொணர்ந்தன. மேஜை என்பது பாரசீக பாஷையிலே 'மேஸ்' என்று வழங்குகிறது. அவர்களிடமிருந்து இச்சொல்லும் பொருளும் நேராகவே வந்திருக்கலாம். அல்லது அரபியர் போர்ச்சுகேசியர் முதலான வியாபாரிகளின் மூலமாய் தெலுங்கு மலையாளம் ஹிந்தி முதலிய மொழிகளிலே போல தமிழிலும் புகுந்திருக்கலாம். அலமாரி என்னும் பதம் போர்ச்சுகேசியர் அளித்தது. குரிச்சி சோபா என்னும் சொற்களுக்கு மூலம் அரபி. பங்கா என்பதற்கு மூலம் ஹிந்தி. பீரோவுக்கு ஆங்கிலம். ஆயினும் இவையெல்லாம் தமிழோடு தமிழாகக் கலந்துவிட்டன.

இவ்வாறு பிற பாஷைகளிலிருந்து வந்து தமிழோடு கலந்து தமிழாகிவிட்ட சொற்கள் பலவற்றை ஆராய்ந்து சென்னை சர்வகலாசாலைத் தமிழ்ப் பேராசிரியராகிய ஸ்ரீ ஆர். பி. சேதுப்பிள்ளை அவர்கள் ஒரு சிறு நூல் வெளியிட்டுள்ளார்கள். அவர் அந்நூலிலே கூறுவதாவது : தற்கால ஆபரணப் பெயர்களுள், சிமிக்கி, தோடா, நத்து, பேசரி, ராக்கடி, லோலக்கு இவை ஹிந்தி. குல்லா, சகலாத்து, சால்வை, உருமால், தாவணி, லுங்கி முதலியன பாரசீகம். கமிசு, சராய், நிசார், ஜிப்பா இவையெல்லாம் அரபி. கோட்டு, பிலுட்டு, பிளானல், பொத்தான், கோப்பை, பேனா இவை ஆங்கிலம். ஊக்கு, ஆக்கர், லஸ்தர், லாந்தல் முதலியனவும் ஆங்கிலம். கடுதாசி அரபி. தபாலும் லக்கோடாவும் ஹிந்தி. அட்டவணை என்பது மராட்டியச் சொல். காரும் தகாறும் அரபி. நாம் வானொலிக்குச் செலுத்தும் சந்தா பாரசீகம். கடையிலே கொள்ளும் சாமான்களும் பாரசீகம். ஆயினும் அவற்றின் ரகமும் தினுசும் மட்டும் அரபி. நிலவரி நியாயவாதம் முதலியவற்றோடு சம்பந்தப்பட்ட சொற்கள் பலவும் ஹிந்துஸ்தானி. வாசனைப் பண்டங்களிலே, அத்தரும் சவ்வாதும் அரபி. இசைக்கருவிகளில் சித்தாரும் தம்பூரும் பாரசீகம். தவுல் அரபி. நாடோடிச் சொற்களில் அலாதி, அசல், காலி, சல்லிசு, சோதா, தபா, தயார், நபர், பதில், பவுஷு, முஸ்தீப்பு, ஜாபிதா இவை அனைத்தும் அரபி. அந்தஸ்து, சாலக்கு, சிபார்சு, சுமார், ஜோர் ஆகிய இவை பாரசீகம். பக்கா, பூரா, ஜாடா, ஜாகை முதலியன ஹிந்தி. இவ்வாறு பலபடியாகத் தமிழ்ச்சொற் பரப்பு வளம் பெற்று விளங்குகின்றது. இவற்றின் வரலாற்றினைச் சற்றுக் கவனித்தால் இவற்றின் மூல வடிவங்களைச் சுலபமாக ஊகித்து அறியலாம்.

சும்மா என்பது சுகமாக என்பதன் திரிபு. குந்தலமும் சந்தனமும் தமிழாகும்போது கூந்தலும் சாந்தும் ஆகின்றன. மயூரமும் கோகிலமும் மயிலும் குயிலுமாய் மாறுகின்றன. ஸூசி என்பது ஊசி ஆகின்றது. பலி என்னும் வடசொற்கு அரசிறை என்பது ஒரு பொருள். இப்பொருளிலே இது தமிழிலே வரி என்று உருமாறுகின்றது. படம் என்னும் துணி படாம் என்று மீட்சி பெறுகின்றது. பசித்தல், புசித்தல், வசித்தல், வாசித்தல்,

படித்தல் முதலிய வினைச்சொற்கள் பலவும் வடமொழி வினைச்சொற்களே. சில வடமொழிச் சொற்கள் உருமாறுதும் பொருள் மாறுதும் அப்படியே அமைகின்றன. சில உருவிலேமட்டும் மாறுபாடு பெறுகின்றன. சில பொருளிலே சிறிது மாறுபடுகின்றன. வடமொழியிலே சித்திரம் என்றால் விசித்திரம்; ஆச்சரியம். படம் என்றால் துணி. சித்திர படம் என்றால் மட்டுமே துணியில் எழுதிய சித்திரத்தைத் குறிக்கும். தமிழிலோ சித்திரமும் படமும் சித்திர படத்தையே குறிக்கின்றன. சித்திரம் என்னும் பதமே சித் என்று ஹிந்தியிலே மாறுபட்டு தமிழிலே சீட்டி என்று வருகின்றது. சீட்டி என்பது சித்திரங்கள் எழுதிய அல்லது அச்சிட்ட துணி.

வாரம் வடமொழியிலே கிழமையைக் குறிப்பது. தமிழிலோ அது ஏழு கிழமைகளின் தொகுதியைக் குறிக்கின்றது. அபராதம் என்னும சொல் வடமொழியிலே குற்றம் என்ற பொருளுடையது. தமிழிலோ குற்றத்திற்கு விதிக்கும் தண்டப்பணத்தைக் குறிப்பது. டங்கம் என்னும் வடமொழிச் சொல், முத்திரையிடுவதைக் குறிக்கும். தமிழிலே அது தங்கமாக மாறி முத்திரையிடுவதற்குரிய செம்பொன்னைக் குறிப்பதாக ஆகின்றது.

திவசம் என்றால் நாள். தமிழிலே இது இறந்தவர் பொருட்டுச் செய்யும் சிரார்த்த நாளைக் குறிக்கும். கருமம், கிரியை என்றால் செய்கை. தமிழிலே இவை அபரக்கிரியையே குறிப்பன. முகூர்த்தம் என்றால் வேளை. தமிழிலே இது சுபச்சடங்குகள் நடத்தும் நல்லோரையைக் குறிக்கும்; விசேஷமாக விவாக காலத்தையே குறிக்கும். வியாபாரம் என்றால் தொழில்; தமிழிலே இதன் பொருள் சுருங்குவதால் இது பண்டமாற்றுத் தொழிலையே குறிப்பதாகின்றது. விவசாயம் என்றால் முயற்சி. ஆனால் தமிழிலே இதற்கு பயிர்த் தொழில் என்பது பொருளாகின்றது. பாடகன், என்பது வாசிப்பவன் என்ற பொருள் பெறாது, இசையிலே வல்லவன் என்னும் பொருளிலேயே வழங்குகின்றது. பிரசுரம் என்னும் வடசொல் மிகுதியைக் குறிக்கும். தமிழிலே இது, வெளிப்படுத்துகையைக் குறிக்கும். மூர்க்கன் என்றால் வடமொழியிலே அறிவிலி; தமிழிலே முரடன். முரட்டுத்தனம் அறிவீனத்தாலேதான் ஏற்படுவதன்றோ? விசாரம் என்பதற்கு வடமொழியிலே ஆராய்ச்சி என்பது பொருள். தமிழிலே அது கவலை என்னும் பொருள் பெறுகின்றது. அவஸரம் என்றால் வடமொழியிலே சந்தர்ப்பம்; தமிழிலே விரைவு. ஆத்திரம் என்னும் தமிழ்ப் பதத்திற்கு விரைவிலே பெறவேண்டுமென்ற ஆசை, என்பது பொருள். ஆதுர என்ற வடமொழிமூலமோ பீடிக்கப்பட்டவன் என்ற பொருளுடையது. பசு என்றால் வடமொழியில் மிருகம். மிருகம் என்றால் மான். தமிழிலே பசு என்றால் ஆ. மிருகம் என்றால் விலங்கு. இவ்வகைச் சொல் ஆராய்ச்சியின் உதவியால் நாம் பல அதிசயங்களை அறிந்து கொள்ளக்கூடும். உதாரணமாக, த்யுதம் என்னும் சூதாட்டத்தினின்றுமே சூது என்ற தமிழ்ச் சொல் எழுந்து, அது அவ்வாட்டத்தை மட்டும் குறிப்பதோடு நில்லாமல், பொதுவாக வஞ்சனையைக் குறிப்பது ஆயிற்று, என்றும், கர்ப்பர என்ற வடசொல் மண்டையோட்டைக் குறிப்பதை விடுத்துத் தமிழுக்கு வந்தபோது கொப்பறையாக மாறி தேங்காய்ப் பருப்பையே குறிப்பதாயிற்று என்றும், மணல் என்னும் பொருள்படும் சர்க்கரா என்னும் சொல் இனிப்புப்பொருளைக் குறிக்கும் சர்க்கரையாகி இனித்த பலாப்பழத்தைக் குறிக்கும் சக்கைப் பலாவாயும் உருவெடுக்கின்றது என்றும், மொழி வரலாற்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். தமிழன்னையின் விசால நோக்கத்தையும் பல மொழிகளினின்றும் வந்த சொற்களை தன்வயமாக்கும் அருட்சக்தியையும் நாம் ஒருவாறு கண்டு கொண்டோம்.

புதுக் கற்பனைகள்.

*கும்ப ராணா.

"அஜந்தா."

காட்சி 1.

வஸந்த காலம்; ஒருநாள் காலை; நந்தவனத்தில் பறவைகள் உல்லாசமாக சப்தித்துக் கொண்டிருக்கின்றன; மந்தமாருதம் வீசிக்கொண்டிருக்கின்றது; மீரா வேதாந்தக் கருத்துக்கள் நிறைந்த பாடலைப் பாடிக்கொண்டிருக்கின்றாள்; கும்பராணா பிரவேசிக்கிறார்.

கும்பராணா :—*மீரா!*

மீராபாய் :—(*பாட்டை நிறுத்திக்கொண்டு*) நமஸ்கரிக்கின்றேன்.

ராணா :—ஆ! என்ன மனோகரமான கீதம்! ஆனால் ஏன் இவ்வளவு வேதாந்தம்? உலகமே அழகு, ஒளி, ஆனந்தம் ததும்பி இருக்கும் இச்சமயத்தில் நீ மட்டிலும் சோகத்தையே வெளியிடுகின்றாயே.

மீரா :—அழகு...ஒளி...உலகில் அழகு—ஒளி; ஆனால் ஆனந்தம் இருக்கின்றதா? உண்மையான ஆனந்தத்தை யார் கண்டிருக்கிறார்கள்? எங்கும் நிம்மதியில்லாத வாழ்வையே காண்கிறோம். கவலை இல்லாதவர்களையே காண முடியவில்லை. மக்கள் நிலையான இன்பம் அனுபவிப்பதற்கு வழிதான் என்ன?

ராணா :—உலகம் எப்பொழுதும் இந்நிலையிலேதான் இருக்கும். அதை நீயும் நானும் மாற்ற இயலாது. அவரவர்கள் செய்த நல்வினை தீவினைகளுக்குத் தக்க இன்ப துன்பங்களும் வந்து பொருந்தும். யாவரும் அவரவரது கடமையைத் தவறாது செய்வதுதான் தருமம். கவலையின்றி இன்பம் அனுபவிக்கப் பிறந்தவர்கள் தம்மை வீணாகத் துன்பத்தில் ஆழ்த்திவிடுதல் கூடாது......மீரா! நீ மறந்துவிட்டாய். இன்று நமது திருமணத்தின் மூன்றாவது வருட பூர்த்தி—எனது அன்பிற்கு அறிகுறியாக இந்த மாலை உன் கழுத்தில் விளங்கட்டும்!

மீரா :—மகாராணா! அழிவில்லாத இன்பத்தின் அறிகுறியாக முத்துமாலை வேண்டுமா? என்மீது தங்களுக்குள்ள பக்ஷத்திற்கு என்ன கைம்மாறு செய்யப்போகிறேன்?

ரா :—பிரியே! நீ கைம்மாறு செய்வாயென்று நான் எதிர்பார்க்கவில்லை. உனது மகிழ்ச்சியே போதுமானது.

* இது திருச்சி ரேடியோ நிலயத்தில் போடப்பட்டு, அனுமதியுடன் பிரசுரிக்கப்பட்டது.

மீ :—(பெரு மூச்சு விட்டு) மூன்ருவது வருட பூர்த்தி.........

ரா :—என்ன, மீரா. ஏன் அப்படிச் சொல்கிருய் ?

மீ :—மூன்று வருடங்கள் யாதொரு பயனுமின்றிக் கழிந்தனவே—என்னுல் ஒருவருக்கும் பயனில்லேயே, என் கணவருக்குங் கூட.

ரா :—மீரா, ஏதேதோ விசித்திரமான எண்ணங்களை எண்ணி உன் மனத்தை காரணமின்றிக் கவலைப்படுத்திக் கொள்ளுகிருய். பிறப்பினுலும் வளர்ப்பினுலும் எல்லா நலங்களுக்கும் உரியவளாள நீ இப்படிக் கவலைப் படுவது சரியல்ல. உன் உள்ளம் அன்பால் நிறையட்டும்; அதுவே என்னை மகிழ்விக்கும்.

மீ :—அன்பு நிறைந்ததே என் வாழ்க்கை.

ரா :—அப்படியானுல் அவ்வன்பை என்னிடம் நீ கொள்ளவில்லை. பின்பு யாரிடத்தில்?

மீ :—என் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட கோபால கிருஷ்ணனிடத்திலே.

ரா:—ஹஹா, ஹா! (சிரித்துக்கொண்டு) வரவர உனக்கு வேதாந்தம் முற்றிப்போய் விட்டது.

மீ :—இதில் வேதாந்தம் என்ன? உண்மை தானே! உலகத்தில் உள்ள பொருள்களில் எல்லாம் அந்த கிருஷ்ணன் உருவமே நிறைந்துள்ளது. இது வேதாந்தமல்ல.

உலகில் நமக்கு ஏதாவதொரு பொருளின் மீது விருப்பம் உண்டாகுமேயானுல் அது கோபாலனுடைய உருவம் ஆனதாலே தான்

ரா :—என்ன பேச்சு இது! நான் உன்னை நேசிப்பது கோபால கிருஷ்ணனை நேசிப்பதா?

மீ :—எந்த க்ஷணத்தில் உங்கள் உள்ளத்தில் இந்த எண்ணம் உண்மையாக உதிக்கின்றதோ, அந்த க்ஷணமே நமது ஜன்ம சாபல்யம் உயர்ந்ததாகும்.

(மாதவி பாடிக் கொண்டு வருகிருள்).

ரா: —இவள் யார்? ஐயோ இவளும் வேதாந்தம் படிக்க வேண்டுமா? (கோபத்துடன்) போ! அசடே. இங்கு உனக்கு என்ன வேலை? போ!

சிறுமி :—நான் உங்களைப் பார்க்க வரவில்லை.

ரா :—பின் யாரைப் பார்க்க வந்தாய்? போ! உனக்கு இங்கு வேலையில்லை! போகிருயா?

சிறு :—(அழுதுகொண்டே போகிருள்).

ரா :—அவள் யார்?

மீ :—ஓர் அனுதை! ஆற்றின் அக்கரையிலிருந்து என்னை நாடி வந்தவள். என் வளர்ப்புப் புத்திரி, மாதவி. ஆனுல் நீங்கள் கொண்ட கோபம் அவள் மீதல்ல. என் மீதே. (குரலை மாற்றிக் கொண்டு) நான் தங்கள் மீது காதல் கொள்ளாமையே அதற்குக் காரணம்.

ரா :—ஆம், நான் உண்மையாக உன் மீதே கோபம் கொண்டேன். மீரா, மீரா, நாமிருவரும் பரஸ்பர அன்புடன் இருக்கலாகாதா? இணை பிரியா திருப்பதே உலகில் இயல்பல்லவா? அதில் எவ்வளவு அழகும் ஆனந்தமும் ததும்புகிறது.

காலக்கிரமத்தில் நமக்கே ஒரு குழந்தை தோன்ருமல் போகுமா? ஒரு அனுதையை நம் குழந்தையாகப் பாவிக்க வேண்டுமா? இரவல் சதமாகுமா?

மீரா :—ராணு. நான் ஒரு பெரிய துர்ப்பாக்கியசாலி. தாங்கள் விரும்புகின்றபடி தங்களுக்கு ஆனந்தமளிக்க இயலாதவள். உண்மையைச் சொல்கிறேன். என் உள்ளம் சம்சார சுகத்தை நாடுவதே இல்லை. தாங்கள் க்ஷத்திரிய புருஷரானமையால், ரூபவதியும் விலாசவதியுமான மற்ருெரு பெண்ணை மணந்து உங்கள் வாழ்க்கையைப் பூர்ண திருப்தியுடையதாகச் செய்து கொள்ளுங்கள். இதுவே எனது பிரார்த்தனை.

எனது வாழ்க்கையை நிரப்ப கோபால கிருஷ்ணனது சேவையே போதும்.

ராணு :—தவறு. தவறு. நான் விரும்புவது போல நீ என்னை விரும்பா விட்டாலும், யான் எப்பொழுதும் உன்னையே விரும்புவேன். தெய்வ பக்தி, யாவருக்கும் சாலச் சிறந்ததே. ஆனால் உன்னை மணந்து கொண்ட கணவனை நேசிக்க வேண்டும் முறையைக் கற்றுக் கொள்வது உன் தருமமல்லவா.

அதிருக்கட்டும். இன்று மாலை பூர்ணிமையில் உல்லாசமாக நதியில் படகிற் சென்று வர ஏற்பாடு செய்துள்ளேன். நீயும் என்னுடன் வரவேண்டும்.

மீரா :—ஆலயத்தில் மாலைப் பிரார்த்தனையை முடித்துக் கொண்டு வருகின்றேன்.

ராணு :—மீரா, நீயும் உன் தெய்வ பக்தியும்.........

(சிறுமி பாடிக் கொண்டு வருகிறாள்).

ராணு .—அதோ, மறுபடியும் உன் வளர்ப்புப் புத்திரி! நான் போய் வருகிறேன்.

மீரா :—வா! குழந்தாய்! வா! பாட்டு பாடமாகி விட்டதா?

காட்சி 2.

ஆற்றங்கரை; அழகிய நிலா வெளிச்சத்தில் கும்பராணுவும் மந்திரியும் நிற்குமிடத்திற்கு ஒரு உல்லாசப் படகு வருகின்றது; படகோட்டிகள் மீரா இயற்றிய பாட்டைப் பாடிக்கொண்டு வருகின்றனர்.

மந்திரி :—ராணு! படகுக்குள் செல்லலாமா?

ரா :—ஊம்! அது என்ன பாட்டு? வழக்கமான படகுப் பாட்டு அல்லவே.

மந்திரி :—இது மகாராணி மீராபாய் இயற்றியது. இன்னொரு பாட்டு பாடச்சொல்ல உத்தரவா?

ரா :—வேண்டாம், வேண்டாம். படகுக்காரர்களுக்குக் கூடவா மகாராணி இயற்றிய பாட்டு?

மந் :—அதற்கென்ன? தெய்வத்தைத் துதிக்கும் பாட்டு யார் பாடினாலென்ன? அழும் குழந்தையைத் தாலாட்டத் தாயும், பக்தர்களை அழைக்கக் கோயிற் குருக்களும் மகாராணி பாட்டைப் பாடுகின்றனர். வெயிலில் கல்லுடைக்கும் கல் தச்சனும், கண்களை மறைத்து எருதுகளைச் சுற்றி ஓட்டும் செக்கானும், மரத்தடியில் தோல் தைக்கும் சக்கிலியனும் தத்தம் தொழிலின் சிரமத்தைப் போக்குதற்கு மகாராணி இயற்றிய பாட்டுக்களையே பாடுகிறார்கள். புனிதமான இடங்களில் இறைவனைக் காண விரும்பி இராப்பகலாக ஆவலுடன் வழிநடந்து செல்லும் யாத்திரிகர்களும் மகாராணியின் பாட்டைப் பாடிக்கொண்டே வழி சிரமத்தை மறக்கிறார்கள்.

ரா :—குருக்கள், சக்கிலியன், செக்கான், யாத்திரிகர்கள், இவர்கள் வாயிலெல்லாமா மகாராணி பாட்டு?

(காவற்காரன் பாட்டு கேட்கிறது.)

ரா :—அதென்ன?

மந் :—காவற்காரன் நந்தவனத்தைச் சுற்றி வருகிறான். அவன் பாடுகிறது.

ரா :—காவல்காரனுக்குக் கூடவா மீராவின் பாட்டு? ஊம்! பிச்சைக்காரனும் மீரா பாட்டைப் பாடுகிறதில்லையா?

மந் :—இல்லாமலென்ன? கும்பராணுவின் செங்கோற் சிறப்பினால் நம் நாட்டில் பிச்சைக்காரர் அவ்வளவாக இல்லாவிட்டாலும், வேற்று நாடுகளிலிருந்து இங்கு வந்து பிச்சை எடுக்கும் ஏழைகள் மகாராணியின் சொற்களைச் சொல்லித்தான் தமது பிச்சைப் பாத்திரத்தை நிரப்புகிறார்கள்.

ரா: —போதும்! போதும்! உயர் குடும்பத்தில் தோன்றிய ராஜபுத்திர ஸ்திரீ—மகாராணுவின் மனைவி—கண்டவர் வாயிலெல்லாம் அவள் பேச்சா? (சிறிது நேரம்)

எங்கே, மகாராணி இன்னும் வரக்காணோம்.

மந் —ஸ்ரீ கிருஷ்ணாலயத்தில் வழி பாட்டுச் சமயம்; பூஜையை முடித்துக் கொண்டு இங்கு விரைவில் வருவார் என்று நம்புகிறேன்.

ரா :—வழிபாடு, இவ்வளவு நேரமா வழிபாடு? நாம் வெகுநேரமாகக் காத்துக் கொண்டிருக்கிறோம் அல்லவா?

சேவகா! நீ விரைந்து சென்று மகாராணிக்குத் தெரிவிக்க—வேண்டாம்; மந்திரி! நாமே போகலாம்.

மந் :—அப்படியே.

காட்சி 3.

(ஸ்ரீகிருஷ்ணலயம்; மொகலாய சக்கரவர்த்தி அக்பரும் கவிராயர் தான்ஸேனும் மாறுவேடம் பூண்டு வந்திருக்கின்றனர்).

அக்பர் :—என்ன அமைதியான இடம்! சிறந்த பக்தி ஊற்றெழும் இடம் இதுதானே?

தான்ஸேன் :—ஆம்; ஆனல் நாம் இங்கு ஜாக்கிரதையாக நடமாட வேண்டும்.

அக் :—அவ்வளவு அச்சமா?

தான் :—எனக்காக அச்சமில்லை.
அக் :—பின் எனக்காகவா?

தான் —ஆம்; மெதுவாகப் போங்கள். ராணிக்காக.

(மீரா பாடிக்கொண்டே கோவிலுக்குள் போகிறாள்).

அக் :—தூய்மை, தூய்மை! என் பிறவியே தூய்மை பெற்றது.

தான் :—இக்கணமே எனது வாழ்க்கையில் நிலையான கணம்.

அக் :—(தாழ்ந்த குரலில்) நாம் அருகே செல்லலாமா?

தான் :—ஜாக்கிரதை!

(மீரா பாட்டுப் பாடுகிறாள்.)

அக் :—அடியார்க்கு அடியேன் வணங்குகின்றேன்.

தான் :—புலவர் பெருந்தகாய்! வணங்குகின்றேன்.

மீ :—வேண்டாம், வேண்டாம், அத்தகைய பெருமைக்குரியவள் அல்லள் நான்.

அக் :—என் பிறப்பையே தூய்மையாக்கி பக்தி மார்க்கத்தைக் காட்டியவர் நீர்.

தான் :—என் வாழ்க்கையில் ஓர் அபூர்வ அனுபவத்தை அளித்தது, தங்கள் பக்தி.

மீ :—சந்தோஷம். இந்த எளிய கிருஷ்ண தாஸி உங்களுக்கு பக்தி மார்க்கத்தைக் காட்டத் தொண்டு புரிந்தால், மிகவும் சந்தோஷம்.

தான் :—நாங்கள் இருவர் மாத்திரமல்ல. உலகில் கிடந்து உழல்வோரெல்லாம் தத்தமது துன்பத்தைப் போக்கிக்கொள்ளக் கருவியாவது தங்கள் கீதமே.

மீ :—அடியேன் என் உள்ளத் தூய்மைக்காகவே, இச்சிறு பாடல்களைப் பாடுகிறேன். அதை நீங்கள் பெருமைப்படுத்துகிறீர்கள். நான் உலகத்திற்காகப் பாடவில்லை.

அக் :—மலையில் தோன்றிய நறுஞ் சாந்தம், மலையினும், அணிபவர்க்கே மணந்தரும்.

தான் :—வீணையில் தோன்றிய ஏழிசை, வீணையினும், கேட்பவர்க்கே இன்பந்தரும்.

மீ :—என்ன அழகாகப் பேசுகிறீர்கள்? நீங்கள் யார்?

தான் :—இரண்டு யாத்திரிகர்கள்.

மீ :—நாம் எல்லோருமே யாத்திரிகர்கள் தான். பற்பல இடங்களிலிருந்து புறப்பட்டு வெவ்வேறு வழியாக யாத்திரை செய்கிறோம். ஆனல் அடையுமிடம் ஒன்றே.

அக். தான் :—உண்மை! உண்மை!

(சிறிது நேரம்)

அக் :—மகாராணி அடியாரது காணிக்கையை ஏற்றுக் கொள்வீர்களா?

தான் :—மணம் நீங்காத மலர்கள் இதோ!

அக் :—இதோ ஓர் எளிய மணியாரம்.

மீரா :—மலரும் மணி ஹாரமும்......கிருஷ்ணார்ப்பணம். (பாட்டு)

அக் :—
தான் :— } அடியோங்கள் உத்தரவு பெற்றுக் கொள்கிறோம்.

(போகிறார்கள்).

(மீரா கையில் மணி ஹாரத்தை வைத்துக் கொண்டே பாடிக் கொண்டிருக்கிறாள். கும்பராணா வருகிறார்.)

ரா :—மீரா என்ன இது? பூசாரிணி ஆகி விட்டாயா?

மீ :—பூசாரிணியல்ல, தாசானுதாசி.

ரா :—இந்த மணி ஹாரம் ஏது?

மீ :—யாரோ இரண்டு யாத்திரிகர்கள் கோபால கிருஷ்ணனுக்குக் காணிக்கையாகச் செலுத்தினர்.

ரா :—எங்கே பார்க்கலாம். (கையில் வாங்கிப் பார்க்கிறான்) எளிய யாத்திரிகர்கள். விலைமதியாத மணி ஹாரம். மீரா, இந்த மணி ஹாரம் என்னிடமிருக்கட்டும்.

மீ :—கோபாலகிருஷ்ணனுக்கு அர்ப்பணம் செய்த மணி ஹாரம் உங்களிடம் ஏன்?

ரா :—இது கும்பராணா கட்டளை. சேவகா! இத் தேவாலயத்தினின்றும் சென்ற யாத்திரிகர்களை நிறுத்து.........இதுவா நமது படகு யாத்திரை?

காட்சி 4.

(கும்பராணாவின் அரண்மனை; ராணா தனித்திருக்கிறார்).

ரா :—மீரா உன்னுடைய பக்தி இங்கிலைக்குக் கொண்டு வந்து விட்டதா? என்ன ஸாஹஸம்! ஆக்ரா எங்கே, சித்தூர் எங்கே? ஆனால் அது மொகலாய சக்ரவர்த்தியின் தப்பிதமல்ல. பக்தி! பக்தி! என்று கட்டுக்கடங்காது பழகி வந்த ராணியின் தவறு.

(மீராவும் தோழியும் வருகிறார்கள்)

தோழி:—ராணா ஏதோ யோசித்துக் கொண்டிருக்கிறார்.

மீ :—ஆம்! மாதவி, நீ போ!

தோ :—மகாராணி, தங்களை விட்டுப் போவற்கு மனமில்லை. ஏதோ ஒரு பயம்.

மீ :—அசடே! ஒரு பயமும் இல்லை, போ!

தோ :—மகாராணி......(தோழி போகிறாள்)

மீ :—மகாராணா...........

ரா :—மீரா, மகாராணியா? நீ எப்பொழுது இங்கு வந்தாய்? நான் பார்க்கவே யில்லையே.

மீ :—நீங்கள் ஏதோ யோஜனையில் ஆழ்ந்திருந்தீர்கள்.

ரா :—ஏதோ யோஜனையல்ல. உன்னைப் பற்றிய யோஜனைதான். ஆழ்ந்திருக்கவில்லை. மூழ்கியிருந்தேன்.

மீ :—அடியாளைப்பற்றி மகாராணாவிற்கு இவ்வளவு கவலையேன்?

ரா :—கவலையா! கவலையல்ல. உள்ளத்தைப் பற்றி எரிகின்ற தீ.

மீ :—மகாராணா, கோபம் எதற்கு?

ரா :—மீரா! என்ன நிம்மதி! இவ்வளவு நிம்மதியாக நீ எப்படியிருக்கமுடியும்?

மீ:—நிம்மதிக்கென்ன? கோபாலகிருஷ்ணன் அருளால் எனது உள்ளம் நிம்மதியாயிருக்கப் பழகியதோ, என்னவோ!

ரா :—அது நிம்மதியா? ஸாஹஸமா?

ரா :—ஸாஹஸம் எதற்கு? மகாராணா, ஏன் இப்படிப் பேசுகிறீர்கள்? ராணா! என் கிருஷ்ணனுடைய மணி ஹாரத்தைத் திருப்பிக் கொடுக்கமாட்டீர்களா?

ரா :—உன் கிருஷ்ணனுடைய மணி ஹாரமல்ல அது, உன் மணி ஹாரம்.

மீ:—என் மணி ஹாரமா? என்ன வார்த்தை இது?

ரா :—மகாராணி! இது உனக்குத்தான் சமர்ப்பித்த மணிஹாரம்.

மீ :—ராணு! யாத்திரிகர்கள்......

ரா:—ஏன் என்னை இவ்வாறு வருத்துகிறாய்? யாத்திரிகர்களாம். யாத்திரிகர்கள் உனக்காக வந்த யாத்திரிகர்களே ஒழிய கிருஷ்ணபகவானைப் பார்க்க வந்த யாத்திரிகர்களல்ல. நான் அப்பொழுதே சொல்லவில்லையா? பக்தி பக்தி என்று நீ வரம்பு மீறி நடக்க வேண்டாமென்று.

மீ :—நான் வரம்பு மீறி நடந்ததாகத் தோன்றவில்லை. பக்திக்கு வரம்பேது? அதுவுமல்லாமல் தெய்வத்தை வணங்குவதும் வணங்காததும் நம் கையில் இல்லையே. அது இயற்கையாக உண்டானது. பறவைக்குப் பறப்பது எவ்வளவு இயற்கையோ, உள்ளத்திற்குப் பக்தி அவ்வளவு இயற்கை.

ரா :—தனக்குப் பறப்பதற்கு இயற்கை என்றெண்ணி பறவை தான் பறக்கத்தகாத உயரத்திற்குப் பறக்க முயலுவது தகுமா? ஒருக்கால் அங்கு தாங்க முடியாத பெருங் காற்று வீசினல் என்னுகும்?

மீ :—என்னுகுமா? பெருங்காற்று பறவையை அடித்துக் கொண்டு போகும்.

ரா :—பெருங் காற்றில் சிக்கின பறவையின் கதி என்ன?

மீ :—அதுவே அதன் வாழ்க்கையின் லக்ஷ்யமோ என்னவோ? பெருங் காற்றில் மிதந்து சென்று ஆகாசத்தோடு கலப்பதே அதன் முடிவாக இருக்கலாம்.

ரா :—மகாராணி! போதும், இந்த தத்துவம். ஆகாசத்திலிருந்து பூமிக்கு வருவோம். கண்டவரெல்லாம் உன் பாட்டைப் பாடுகிறது, குடிசையிலிருப்பவரெல்லாம் உன் பேச்சே பேசுவது—இதைக் கேட்க எனக்கு உள்ளம் பற்றி எரிகிறது. மீரா, உன் பக்தியை உனக்குள்ளேயே வைத்துக் கொண்டிருந்தால் போதாதா? தெருத் தெருவாக சந்தை சாவடியில் எல்லாம் நீயே உயர்ந்த பக்தி வாய்ந்தவள் என்று சாற்ற வேண்டுமா?

ஐயோ! யார் யார் வாயில் உன் பேச்சு! புனிதமான இராஜ புத்திர வம்சம்! சூரிய கிரணங்களும் கூட சரியாக நுழைவதற்கு அஞ்சுகின்ற ராணிவாசத்திற்கு எத்தகைய ஆபத்து ஏற்பட்டது? நான் உலகை ஆள்கிறேன்! கும்பாராணுவைக் கனவில் கண்டாலும் அஞ்சுகின்றார் பகைவர்! உலகத்தை அடக்கியாளும் நான் என் வீட்டை அடக்கியாள முடியவில்லை! மணந்த மனைவியே வீட்டுக்குத் தீ வைத்தால் யாரிடம் போய்ச் சொல்வது?

மீ :—ராணு! தங்கள் கருத்துக்கு மாறுக நடக்க எண்ணவில்லையே நான்.

ரா:—எண்ணவில்லையா? என்ன சொல்லி என்ன பயன்! நேரவேண்டிய கெடுதல் நேர்ந்துவிட்டது. ஐயோ, பத்மினி! இதற்குத்தானு நீ உன்னுடைய ஈராயிரம் பெண்மணிகளுடன் தீ மூழ்கினுய்? என்ன அவமானம், என்ன அவமானம்! எப்படித்தான் முடிந்தது உனக்கு அந்த மிலேச்சனுடன் பேச?

மீ :—மிலேச்சன் யார்?

ரா :—இராஜபுத்திர ஸ்திரீ பரபுருஷன் கண்ணில் படுவதை விடச் சாவதே மேல்.

மீ :—சாவதே மேல். ஆனல் நீங்கள் சொல்லும் மிலேச்சன் யார்?

ரா :—மீரா, வேண்டாம். என் உள்ளத்தைப் பிளக்காதே! பொய் கூட வேண்டுமா?

மீ :— பொய் ஏது இங்கு?

ரா :—மீரா, எங்கே, என்னைப் பார். நேராகப் பார். உண்மையாக நீ.........

மீ :—ராணு!

ரா :—எப்படி நம்ப முடியும்? எல்லாம் மேலே பரிசுத்தமாகத் தான் இருக்கும். வாயில் வெல்லம், உள்ளத்தில் கள்ளம். பசுத்தோல் போர்த்த புலி.

மீ :—என்ன பேச்சு இது? ராணு! மீராவிடத்திலா இவ்வளவு கடினம்?

ரா :- கடினமா, கடினமா? நீ செய்த குற்றத்திற்கு மரணதண்டனேயே தகுந்தது. உத்தம ராஜபுத்திர ஸ்திரீ இவ்வளவு நேரம் உயிருடன் இருப்பாளா? ஐயோ!

மீ :—குற்றமா? எனக்கு ஒன்றுமே விளங்கவில்லேயே.

ரா :—மீரா, மீரா, என்ன சித்திரவதை! இந்த மணிஹாரத்தை உனக்குக் கொடுத்தவன் அக்பர் என்று என் வாயால் கேட்க விருப்பமா உனக்கு?

மீ.—அக்பரா? மொகலாய சக்கரவர்த்தியா?

ரா :—ஆமாம்; அக்பர், அக்பர், அக்பர்! மொகலாய சக்ரவர்த்தி அக்பர்! நான் கும்ப ராணு. நீ மீராபாய். அவன் அக்பர்! ஐயோ பாவம் அறியாதவள்! என்ன அறியாதவள்! என்ன நடிப்பு!

மீ :—அக்பர்! மொகலாய சக்ரவர்த்தி! இராஜபுத்திர ஸ்திரீ மரணத்திற்கு அஞ்ச மாட்டாள்.

காட்சி 5.

மாதவி :—ராணு! என்ன நேரிட்டது? ஐயோ, என்ன நேரவேண்டும்? மகாராணி உன்னிடத்திற்கு வந்தபொழுதே எனக்குத் தெரியும், ஏதோ பேராபத்து நேருமென்று. அதனுல்தான் அவளேத் தனிமையில் விட்டுப் போக மனமில்லே.

ராணு உன்னுல் எப்படி முடிந்தது மீராவிடம் அவ்வளவு கடினமாய் இருக்க. ஐயோ! அவள் உள்ளம் எவ்வளவு இளகியது! ஒருநாள் நந்தவனத்தில் ஒரு சிறு பறவை கூட்டிலிருந்து கீழே விழுந்து காயமடைய, அதனேக் கையில் எடுத்துக் காப்பாற்றி மீண்டும் வானத்தில் பறக்க அதற்கு சக்தி வரும் வரையில் ஊண் உறக்கமின்றி இருந்தாளே. அப்படிப்பட்ட இளகிய உள்ளத்தை துன்புறுத்த எப்படித் துணிந்தது உன் மனம்?

ரா :—பக்தி மிகுந்தவர்களுக்கு உபவாசம் இருப்பது வழக்கந்தானே.

மா :—இது பரிகாசத்திற்குச் சமயமா? ராணு! சொல்லுங்கள், ஏன் மீராவின் மனதை அவ்வளவு கவலேக்கு உள்ளாக்கினீர்?

ரா :—பெரியவர்கள் விஷயத்தில் உனக்கு என்ன? இந்த சிக்கல் உனக்குப் புரியாது.

மா :—எனக்குப் புரியாது. ராணு! அவளிடம் அவ்வளவு ஆர்வங்கொண்ட நீங்கள்—நேற்றுக் காலேயிலேதான் அழியாத அன்பிற்கு அறிகுறியாக அவள் கழுத்தில் முத்துமாலேயைச் சாத்திய நீ, இன்று அவள் கண்களிலிருந்து வெப்பமான கண்ணீர் முத்துக்களே எவ்வாறு சிந்தச் செய்தாய்? இதுதாணு உன் அழியாத அன்பு?

ரா :—அழுகிருளா? எனக்கு மீராவிடத்தில் அன்பு இல்லே. நான் ராணு; அவள் ராணுவை மணந்த ஓர் ராஜபுத்திரி; எனக்கு அவளிடம் அன்பில்லே.

மா :—பொய், பொய்! ராணு! ராணு! மீரா இடைவிடாது அழுதுகொண்டிருக்கிருள், கண்ணீர் முந்நீராக. பார்த்தால் பயமாய் இருக்கிறது.

ரா :—கண்ணீர் முந்நீராக அழுதுகொண்டிருக்கிருளா? உன்னிடம் என்ன சொன்னுள்?

மா :—என்னிடம் அவ்வளவாகச் சொல்லவில்லே. சந்திரனேப் பார்த்துப் பார்த்து மீண்டும் மீண்டும் சொன்னுள்.

"சந்திரா, உனக்காவது என்னிடம் நம்பிக்கை இருக்கிறதா? சந்திரா! நீயாவது மீராவின் உள்ளம் பரிசுத்தமானது என்று நம்புகிருயா?" என்று சொல்லி அழுதாள்.

வழக்கப்படி நான் அவளுக்குத் தலேவாரப் போக, சீப்பை என் கையில் வைத்து, "நான் போனபிறகு நீ யாருக்குத் தலே வாருவாய்" என்று கேட்டாள். "கிருஷ்ணுலயத்தில் நித்திய நைவேத்தியத்தை மாத்திரம் மறக்கவேண்டாம்" என்றுள். ராணு! மீரா, எங்கு போகிருள், எங்கு போகிருள்?

ரா :—எங்கே போகிருளோ? எனக்கென்ன தெரியும்?

மா :—ஐயோ, ராணு தெரிந்துதான் தாமதிக்கிருயோ, தெரியாமல் தாமதிக்கிருயோ, நான்தான் மகாராணு என்னும் கர்வத்திஞல் தாமதிக்கிருயோ?

அல்லது உனது உள்ளம் கல்லாய்ப் போய் விட்டதோ? தெரியவில்லை. ராணு நீ வந்து மீராவைப் பார்க்க மாட்டாயோ?

ரா :—உண்மையாகவே எனது உள்ளம் கல்லாய் விட்டது. ஆரம்பத்திலேயே கல்லாயிருந்தால்?

மா :—இல்லை, இல்லை, ஒருக்காலும் இருக்காது? நேற்றுக் காலையிலேதான் "மீரா, நான் எப்பொழுதும் உன்னையே விரும்புவேன்" என்று கூறிய உள்ளம் கல்லாஞல் உலகமே கல்லாகும். ராணு, ராணு ஐயோ, பாவம். மீரா அழுது அழுது சோர்ந்து போயிருப்பாள். இப்போதே புறப்படுங்கள், ராணு, ராணு, புறப்படுங்கள். இதோ உத்தரீயம்.

ரா :— விடு விடு, என் கையை விடு, என்ன பிடிவாதம் இது?

மா :—நான் விடமாட்டேன்; வரவேண்டும் வரவேண்டும்.

ரா :—என்ன பைத்தியம்? கண்ணீர் முந்நீராக அழுதாளா? ஆஞல் போகலாம். சேவகா, ராணிவாசத்திற்கு வழிகாட்டு.

காட்சி 6.

ரா :—மீராவை எங்கும் காணேமே.

மா :—ராணு, பள்ளியறையில் பார்க்கலாம்.

மா :—மீரா, மீரா, அம்மா மீரா!

ரா :—இங்கும் காணேமே.

மா :—இங்கேதான் இருந்தாள். இந்த ஜன்னலிலிருந்துதான் சந்திரனைப் பார்த்துப் பார்த்து.........

மா: —மாதவி, இவ்விடத்தில் தாமதித்துப் பிரயோஜனமில்லை. வா.

ரா :—சேவகா!

சேவகன் :—ஆக்ஞை.

ரா: —மகாராணியைப் பார்த்தாயா?

சேவ :—பார்க்கவில்லை.

ரா :—ராணி வாசத்திலிருந்து யாராவது இந்த வழியாய்ப் போஞர்களா?

சேவ:—யாரும் போகவில்லை. ஆ, சற்று நேரத்திற்கு முன் ஓர் பிச்சைக்காரி போஞள்.

ரா :—பிச்சைக்காரியா? ஐயோ, மாதவி! கேட்டாயா......பிச்சைக்காரியாம்.

மா :—எந்த வழியாக?

சேவ :—கிருஷ்ணுலயத்துப் பக்கம்.

ரா :—வா, மாதவி, வா!

மா :—ராணு! (பெருங்காற்று வீசத்தொடங்கிற்று.) கறுத்த மேகங்களுக்கிடையில் சந்திரன் மறைந்து விட்டான், ஐயோ!

ரா :—மாதவி! பயங் கொள்ளாதே! இதோ என் கையைப் பிடித்துக் கொள்.

மா :—ராணு, இந்தப் பெருங்காற்றில் மீரா ....ஐயோ!

ரா :—இதோ, கிருஷ்ணுலயம். யாரங்கே?

தா :—கிருஷ்ணதாஸன்.

ரா :—கிருஷ்ணதாஸனுக்குப் பெயரில்லையா? கேட்பவன் கும்பராணு.

தா :—மஹாராணு! நான் தான்ஸேன்.

ரா :—தான்ஸேன்! அக்பரின் தான்ஸேஞ? என் வாள் எங்கே?

தா :—ராணு! எளிய புலவரிடமா உன் பராக்கிரமம்?

ரா :—புலவர்...தான்ஸேன் புலவர்......புலவரே! மன்னிக்க வேண்டும்; நான் மறந்து விட்டேன். வணங்குகின்றேன்.

தா :—கிருஷ்ணுர்ப்பணம்.

ரா :—புலவரே, அந்த அக்பர்.

தா :— ஆக்ராவில்.

ரா :—புலவரே, உண்மையைச் சொல்லும், அக்பர்.........

தா :—மொகலாயச் சக்கரவர்த்தி, சித்தூர் மகாராணியைப் பார்க்க வரவில்லை. பக்த அக்பர் பக்த மீராவை, தரிசிக்க வந்திருந்தான்; தன்மயமான துய்மையடைந்து சென்றான்.

ரா :—நீர்?

தா :—பக்த மீராவுக்காக இக்கிருஷ்ணாலயத்தைப் பாதுகாத்து வருகிறேன்.

ரா :—பக்த மீரா...தான்ஸேன்! என் மீரா எங்கே?

தா :—ராணா! இன்னுமா உன் மீரா? நீ எப்பொழுது அந்த ஊற்றை நிறுத்தப் பார்த்தாயோ, அப்பொழுதே அது அருவியாகி, வெள்ளமாகி, உலகம் முழுவதும் பரவிவிட்டது. நீ மீராவின் தூய்மையை எப்பொழுது சம்சயித்தாயோ, அப்பொழுதே, நீ அவளை உலகத்துக்குக் கொடுத்து விட்டாய்.

ரா :—உலகத்துக்குக் கொடுத்து விட்டேனா? புலவரே! வணக்கத்துடன் கேட்டுக் கொள்ளுகிறேன். என் மீரா எங்கே? சொல்லும்.

மா :—அதோ, அதோ, அது மீராவின் குரல்.

(ஆற்றுப்பக்கத்திலிருந்து 'ராணா, ராணா!' என்றொரு குரல் கேட்கிறது.)

ரா :—ஆற்றுத் திசையிலிருந்துதான். தான்ஸேன், தான்ஸேன்! வாரும் நீரும்; வாரும் ....வாரும்.

தா :—ஏழை ராணா! இன்னும் உமக்கு மீரா கிடைப்பாளென்று ஆசை?

ரா :—அதோ!

மா :—மீரா, மீரா!

மா :—ஆற்றங்கரை என்ன பயங்கரமாயிருக்கிறது! என்ன வெள்ளம்!

தா :—அருவி அருவியுடன் கலந்து விட்டது.

மா :—அதோ மின்னல்; மீராவின் முகம்; ஐயோ, ராணா, ராணா, மூழ்கிவிட்டாளே! ஜலத்தில் மூழ்கி விட்டாள், ராணா, ராணா.

தா :—அருவி அருவியுடன் கலந்து விட்டது.

ரா :—மாதவி, இனி நமக்கு யார்? மீரா! மீரா!

கடவுளை வென்ற கருமி.

“பழகு வேட்டி.”

[பதினான்காவது நூற்றாண்டில் அஹோபிலகவி எழுதிய விரூபாக்ஷ வஸந்தோத்ஸவ சம்பூ என்ற ஸம்ஸ்க்ருத நூலிலிருந்து எடுத்து எழுதியது.]

முன் விஜயநகரத்திற்குத் தன் மனைவியுடன் ஒரு கருமிப் பிராம்மணன் வந்து சேர்ந்தான். வீடொன்றை எடுத்துக்கொண்டு தனிக் குடித்தனம் நடத்த அவனுக்கு மனம் வரவில்லை. வீடுவீடாக, பத்னியுடன் கூட, அதிதியாகவே வெகு காலம் இருந்து வந்தான். அவனிடம் அலுப்புற்று, விஜயநகரத்துக் கிருஹஸ்தர்கள் ‘இனி நம் வீட்டிற்கு வரக்கூடாதென்று’ சொல்லிவிட, அவ்வூர் சிவன் கோயிலிற்குச் சென்றான் கருமிப் பிராம்மணன். ‘கோயில் தீபங்களை கவனித்துக் கொள்கிறேன்; கோயிலிலேயே தங்கியிருக்க அனுமதிக்க வேண்டும்’ என்று அர்ச்சகனிடம் அனுமதி பெற்றுக்கொண்டு தம்பதிகள் சிவன்கோயிலிலேயே குடியிருந்தனர். ‘அடி, நீயும் சும்மாயிருக்காதே, இந்த வூர் பெரிய மனுஷ்யர்கள் வீடுகளை யண்டி காரியங்களை செய்துகொடுத்து ஏதாவது ஸம்பாதித்துக் கொண்டுவா’ என்ற கருமி தன் மனைவிக்குக் கட்டளையிட, அவள் ஊருக்குச் சென்று பல காரியங்களைச் செய்து ஸம்பாதித்து வந்தாள். கோயிலில் காரியம் பார்ப்பதோடு, கருமி தானும் ஊருக்குச் சென்று, சில தனிகர் வீட்டில் நித்தியப்படி பூஜையைச் செய்து கொண்டும், ஆங்காங்கு நேரும் விருந்துகளில் சாப்பிட்டுக் கொண்டும், தாங்களிருவருமாய் ஸம்பாதிக்கும் பொருளில் கொஞ்சம் கூடச் செலவு செய்யாமல், ஜீவித்து வந்தான். கோயிலில் தான் இருக்கும் இடத்தில் பூமியில் ஒரு குழியில் தன் பொருளனைத்தையும் புதைத்து வைத்தான்.

‘குழந்தை யுண்டானால் குடும்பத்தில் இரண்டிற்கு மூன்று ஆட்களாய்விடுமே! குழந்தையே வேண்டாம்!’ என்றிருந்தான் கருமி. அவன் மனைவியோ ‘பிள்ளையில்லாதவர்க்கு பின் கதியில்லையென்கிறார்களே’ என்று கணவனிடம் வற்புறுத்தினாள். தன் மனைவி வேலை செய்யும் வீடுகளிலிருந்து அவள் கொண்டுவரும் வெற்றிலைப் பாக்கைக்கூடத் தான் போட்டுக் கொள்ளாமல் விற்றுக் காசாக்கி வரும் கருமிக்கா குழந்தையினால், இன்பம் வரும்? ஆனாலும், பரத்தின் நலத்தை நினைத்துப் பிள்ளையொன்று இருந்தால் என்ன வந்துவிட்டது, கடவுளைப் பிள்ளை வேண்டுமென்று வேண்டிக் கொள்ளலாம் என்று கருமி தீர்மானித்துக் கொண்டு கடவுளை வேண்ட, கருமிக்குக் கடவுளும் அருளினார். “கர்ப்பிணி என்று சொல்லி ஸுமங்கலிகளிடம் அதை இதைக் கெஞ்சி யாசகம் செய்து கொண்டு வா” என்று மனைவியை அடிக்கடி அனுப்பிவிடுவான்; பிள்ளை பிறந்த பிறகும் அப்படியே “சிசுவைத் தூக்கிக் கொண்டு யாசகத்திற்குப் போ” என்று அனுப்பிவிடுவான். தானும் குழந்தைக்கு வேதோக்தமான ஸம்ஸ்காரங்கள் செய்ய வேண்டுமென்று யாசித்துப் பொருள்களைத் திரட்டி, பூமியில் புதைத்துவிட்டு, ஒருவரிடமும் சொல்லாமல், தானே தனியாய்க் கோயில் மூலையில் ஸம்ஸ்காரங்களைக் குழந்தைக்கு நடத்திவைத்தான். இதே முறையில் குழந்தைக்கு உபநயனமும் நடந்தது. உபநயனமான பிரம்மசாரி யதேச்சையாய் ஊரைச் சுற்றி ‘பிக்ஷை’ எடுத்து வந்தான். அப்பனை மிஞ்சிய கருமியான இப் பிள்ளைக்கு ஜனங்கள் ‘மஹாலோபி பட்டன்’ என்று பெயர் வைத்தழைத்தனர்.

லோபி பட்டன் குமாரன் மஹா லோபி பட்டனுக்கு வயது முப்பது ஆயிற்று. தாய் குழந்தைக்குக் கல்யாணஞ் செய்யவேண்டும் என்று ஆசைப்பட்டாள். பிள்ளைவீட்டுக்காரன் பணங் கொடுத்துப் பெண் வாங்கும் நாள் அந்தக் காலம்; தகப்பன் லோபி பட்டனுக்குக் கோபம் வந்து விட்டது. ‘அப்போதே பெண் குழந்தை வேண்டுமென்று ஸ்வாமியை வேண்டிக் கொண்டிருந்தால், இந்தக் கஷ்டமே வந்திருக்காது’ என்று வருந்தினான். நாளுக்கு நாள் மனைவி செய்யும் நிர்ப்பந்தம் தாங்கவில்லை; ஒரு நாள் அவளிடம் சொன்னான்: “நம்

பிள்ளைக்குச் சரியான பெண் கிடைப்பது கஷ்டம்; நான் 'எந்தக் குடும்பத்திலே இருந்தாலும் ஸரி' என்று பெண் தேடமுடியுமா? நம் குடும்பத்திற்கு ஏற்ற பிராம்மண குடும்பமே எனக்கு இதுவரையில் தென்படவில்லை; இந்த ஊரில் சில வைதிகர் தாம் ஸம்பாதித்த பணத்தைச் செலவு செய்து வீடு கட்டிக் கொண்டிருக்கின்றனர்; சிலர் தம் வீட்டிலேயே தம் பொருளைக் கொண்டே ஜீவனம் செய்து, சாப்பிட்டுக் கொண்டு வருகின்றனர். இரண்டொருவர் பரான்னத்தையே சாப்பிட்டு வந்தாலும், தம் மடியிலிருந்து தாமே காசைக் கொடுத்து வெற்றிலை வாங்கிப் போட்டுக் கொள்ளுகிறார்கள்; இக் குடும்பங்களில் நம்மைப்போன்றவர் எப்படி ஸம்பந்தம் செய்வது? நமக்கு ஏற்ற செட்டான குடும்பத்தைத் தேடிப் போகவேண்டும்.'' "ஸரி, தேடிக் கண்டு பிடியுங்கள்'' என்று சொல்லி, மனைவி கணவனை அனுப்பினாள்; ஒரு சிறு மூட்டையில் ஸத்துமாவுடன் லோபி பட்டன் கிளம்பினான்.

பல வூர்களைக் கால் நடையாய்க் கடந்து, கடைசியில் லோபி பட்டன் ஒரு ஆற்றங்கரையில் களைப்பாறத் தங்கினான். பசியைத் தீர்த்துக் கொள்ள ஸத்துமா மூட்டையை எடுத்தான்; களர்ந்திருந்த கட்டை மறுபடியும் இறுக்கினான்; கட்டை இறுக்கினதின் பயனாய்க் கொஞ்சம் மாவு முடிச்சின் மூலையில் வெளிவந்தது; அதை உள்ளே தள்ளிவிட்டு, மாவை உள்ளே தள்ளிய கையாலேயே ஆற்று ஜலத்தை யள்ளிக் குடித்தான்! பசி தீர்ந்தது! பக்கத்தில் திரும்பிப்பார்த்தான்; சிறிது தூரத்தில் அதே ஆற்றங்கரையில் பிராம்மணனொருவனைக் கண்டான். அந்தப் பிராம்மணன் லோபி பட்டனை விட ஒரு படி மேம்பட்ட லோபி; அவனுக்கு அதிலோபி பட்டன் என்று பெயர். அவன் தான் கொண்டு வந்திருக்கும் ஸத்துமா மூட்டையை வெயிலில் தூக்கிப்பிடித்து, அதன் நிழல் விழுந்த இடத்திலிருந்து ஜலத்தை அள்ளிக்குடித்துத் தன் பசியைத் தீர்த்துக் கொண்டான்! "ஸரி, இவனே நமக்கு ஏற்ற ஸம்பந்தி; இவனுக்குப் பெண் ஒன்று இருக்க வேண்டும், ஸகோத்திர மிலலாமல் இருக்க வேண்டும், ஸ்வாமி'' என்று வேண்டிக் கொண்டு விஜயநகர லோபிபட்டன் அதிலோபி பட்டனை அணுகினான். அதிலோபிபட்டனோ இந்த லோபிபட்டனுடன் பேசுவதில்லையென்று தனக்குள் தீர்மானித்திருந்தான்; 'பசி தீர்த்துக்கொள்ள விரலில் ஒட்டிய ஸத்துமா வேண்டியிருக்கு இவனுக்கு; மாவின் நிழலின் ஜலம் மட்டுமே சாப்பிடும் நமக்கு இவனுடன் என்ன பழக்கம் வேண்டியிருக்கு?' என்றிருந்த அதிலோபி வெகுநேரம் கழித்தே லோபிபட்டனிடம் தன் வரலாற்றைச் சொன்னான்: "நாமிருப்பது கௌடதேசத்தில், ராடா நகரம்; நமக்குக் கல்யாணமாக வேண்டிய பெண் ஒருத்தி இருக்கிறாள். நம் குடும்பத்திற்கு ஏற்ற குடும்பமொன்றைத் தேடி நாம் அலைந்து கொண்டிருக்கிறோம்.''

"அடாடா, மிகவும் ஸந்தோஷம்; நான் வேண்டிக்கொண்டபடியே இருக்கிறது. எனக்கு மஹாலோபி பட்டன் என்று பட்டம் பெற்ற பிள்ளையொருவன் இருக்கிறான்; அவனுக்குக் கல்யாணமாக வேண்டும்; அதன் பொருட்டே நானும் அலைந்து கொண்டிருக்கிறேன். தற்செயலாய்த் தங்களை சந்தித்தேன். தாங்கள் செய்த நிழலைச் சாப்பிடும் வேலையை என் குழந்தையும் பல தடவை செய்து காண்பித்திருக்கிறான்'' என்றான் லோபிபட்டன்.

"அப்படியா, எனக்கும் ஸந்தோஷம்; உன் மகன் என் மகளுக்கு ஏற்ற கணவனே. கைக்குழந்தையா யிருக்கும்போதே என் மகள் தாய் மடியிலிருந்து சொட்டுச் சொட்டாய்த் தான் பால் சாப்பிடுவாள்'' என்றான் அதிலோபிபட்டன்.

"ஸரி, கல்யாணத்தை முடித்து விடுவோம். சீரென்ன சந்தி யென்ன வேண்டியிருக்கு? உங்கள் செலவு உங்களோடே, எங்கள் செலவு எங்களோடே.''

'மரியாதைகள் எல்லாம் எதற்கு? நம் ஸ்நேகமே பெரியது.''

"ஊருக்கு நடுவில் எதற்குக் கல்யாணம் செய்கிறது? காலிகள் கூடி வம்பளப்பர். நாம் ஸந்தித்துக் கல்யாணத்தை நிச்சயம் செய்த இந்த நதிதீரத்திலேயே கல்யாணத்தை செய்து விடுவோம்.''

"நல்ல பக்ஷிகளுடைய கானம். எல்லாக் காய்களும் பழங்களும் இங்கேயே இருக்கின்றன." இப்படியாகக் கல்யாணத்தை நிச்சயித்துக்கொண்டு, விஜயநகரம் சென்றான் லோபி பட்டன். மனைவியைக் கண்டதும் ஸத்துமாவைச் செலவு செய்யாமல் மூட்டையை அப்படியே திருப்பிக் கொண்டுவந்து விட்டதைப் பற்றிச் சொன்னான்; பிறகு கல்யாணம் நிச்சயித்துக் கொண்டு வந்திருப்பதையும் சொன்னான்.

இரு குடும்பங்களும் ஆற்றங்கரையில் மறுபடியும் ஸந்தித்தன. இரண்டு சிறிய பர்ண சாலைகளைக் கட்டிக் கொண்டனர். தாமே உபாத்தியாயராயிருந்து கொண்டு கல்யாணத்தை நடத்தினர். உபகரணங்களோ, தக்ஷிணைகளோ, தானங்களோ, எல்லாம் 'மந்த்ரமாய்' செய்யப்பட்டன. ஒரே நாளில் எல்லா விவாஹ கர்மங்களையும் முடித்து அஸ்தமன வேளையில் லோபிபட்டனும் அதிலோபிபட்டனும் களைப்பாறிக் கொண்டிருந்தனர். தூரத்தில் யாரோ வருவது போலிருந்தது.

"புலி" என்றான் அதிலோபி.

"இல்லை; யாரோ, இருவர் வருகின்றனர்; இந்த நிர்மானுஷ்யமான இடத்தில் நாமிருப்பதைத் தெரிந்து யாரோ வருகிறார்களே" என்றான் லோபி.

விஜயநகரத்தில் லோபிபட்டன் வசித்து வரும் சிவாலயத்தின் சிவபெருமான் பார்வதி தேவி இருவரும் கிழப்பிராமண தம்பதிகள் போல் வேஷம் பூண்டு, லோபிகள் நடத்தும் விவாஹ விந்தையைக் காண வந்து கொண்டிருந்தனர்.

"தட்டுத்தடுமாறி தள்ளாத வயதிலே, இங்கே எதற்கு வருகிறீர்கள்" என்று லோபி பட்டன் கிழவரைக் கேட்டான்.

"இங்கே ஏதோ கல்யாணம் நடக்கிறது; ஏதாவது கிடைக்கும் என்று வந்தேன்" என்றார்.

"தக்ஷிணையுமில்லை, ஒன்றுமில்லை, போம்" என்றான் லோபிபட்டன்.

"தக்ஷிணையில்லாவிட்டால் போகிறது; ஒருவேளைச் சாப்பாடாவது கிடைக்குமா?" என்றார் கிழவர்.

"நாங்கள் எல்லோரும் ராத்திரி உபவாஸம்; நீர் இங்கு காத்துக்கொண்டிருக்கவேண்டாம்; நாழிகையாவதற்கு முன் ஊருக்குள் சென்று விடும்."

"நாங்கள் திரும்பிப்போக முடியாது; இங்கேயே படுத்துக்கிடக்கிறோம்."

'இதென்ன மஹா ஸங்கடமாயிருக்கிறது; ஊர்த் தொந்திரவு வேண்டாமென்று நாங்கள் 'தேமேனு' ஏதோ தனியாச் சிறிய கல்யாணம் ஒன்று செய்து கொண்டிருந்தால், அதிலேகூட வந்து தொந்திரவு செய்ய வந்துவிட்டீரே?"

கொஞ்ச நேரமாயிற்று. அவ்விடம் படுத்த கிழதம்பதிகள் தூக்கத்தை யடைந்தனர். லோபி பட்டன் ஸம்பந்தி அதிலோபியைத் தட்டி யெழுப்பி, சேஷஹோமம் முதலியவற்றை உடனேயே முடித்துக்கொண்டு, கிழத் தம்பதி விழித்துக்கொள்வதற்கு முன் அவ்விடத்தை விட்டுக் கிளம்பினான். பொழுது புலர்ந்ததும் நடுவில் ஒரு கிராமத்தில் லோபிபட்டன் தங்கினான். சிறிது நேரத்திற்கெல்லாம் ஆற்றங் கரையில் வந்து தொந்திரவு செய்த கிழவர் லோபியிடம் வந்து சேர்ந்தார். தப்பித்ததாக நினைத்த லோபி மாட்டிக்கொண்டான். "ஏதாவது கொடுத்துவிடேன், நான் போய் விடுகிறேன்" என்றார் கிழவர்.

"ஊரைவிட்டு ஊர் வந்திருக்கிறபோது எதைக் கொடுக்கிறது? விஜயநகரத்திற்கு வந்ததும் ஏதாவது பார்த்துக் கொடுக்கிறேன்; அங்கே வந்து சேரும்" என்றான் லோபி.

'ஸரி' என்று கிழவராய் வேடம் பூண்ட சிவனும் பார்வதியும் சென்று விட்டனர். லோபி விஜயநகரத்தை யடைந்து சிவன் கோயிலில் தன்னிருப்பிடத்தை யடைந்தான். அடைந்ததுதான் தாமதம்; கிழவர் "எங்கே, கொடு" என்று கையை நீட்டிக்கொண்டு லோபிபட்டன் முன் தோன்றினார்.

"இதென்னையா, கிரஹசாரம்; வந்ததும் வராததும் கடன்காரன் மாதிரி வந்து சேர்ந்து விட்டீர்; இப்பொழுதுதான் என் இருப்பிடம் வந்திருக்கிறேன். இனி வெளியே போய் ஏதாவது ஸம்பாதித்துத்தானே உமக்குக் கொடுக்கமுடியும். போய் நாலைந்து நாட்கள் கழித்து வாரும்" என்று கிழவரை அனுப்பிவிட்டான் லோபி. கிழவரோ ஊரெல்லாம் சுற்றிக்கொண்டு வந்து, லோபிபட்டன் ஆற்றங்கரையில் செய்த கல்யாணத்தையும், தனக்குக் கொடுப்பதாய் சொல்லியிருப்பதையும்பற்றி எல்லோரிடமும் தெரிவித்தார். "உமக்கு எவ்வளவு வேண்டும்? நாங்கள் கொடுக்கிறோமே. இந்த லோபியிடம் நடை நடையாய் நடந்து நாள் நாளாய் நிற்கவேண்டுமா?" என்று ஊரார் கிழவரைக் கேட்க, கிழவர் "நீங்கள் ஆயிரம் கொடுத்தாலும் எனக்குத் திருப்தியில்லை; அந்த லோபியிடம் நான் ஏதாவது வாங்கி விடவேண்டும்" என்று பதிலளிப்பார்.

நாலைந்து நாட்கள் ஆயின. கோயிலில் தன் அறையில் லோபிபட்டன் படுத்துக்கொண்டு, தன் மனைவியை அழைத்துச் சொன்னான்: "இதோ நான் கடுஞ்சுரத்தில் கிடப்பதாய்ச் சொல்; அந்த பாழுங்கிழவன் வருவான்."

"அய்யோ! எதையாவது கொடுத்துத் தொலைத்துவிடாமல், அக்கிழவனோடே இப்படிக் கஷ்டப்பட்டுண்டு இருப்பாளா?" என்றாள் மனைவி.

"சீ, உனக்குத் தெரியாது; அவன் வந்தால் எனக்கு உடம்பு அசௌக்யமென்று சொல்லிவிடு" என்றான் லோபிபட்டன்.

சிறிது நேரத்திற்கெல்லாம் கிழவர் வந்தார். தரையில் கிடக்கும் லோபிபட்டனையும் அவனருகில் விம்மி விம்மி அழும் அவன் மனைவியையும் கண்டார். "என் கணவனுக்குக் கடும் வியாதி" என்றாள் மனைவி.

"ஐயோ பாவம்! எனக்குக் கொஞ்சம் வைத்தியம் தெரியும்; பார்க்கிறேன்" என்று சிவன் நாடியைப் பிடித்துப் பார்த்துவிட்டு, "இது ஸந்நிபாத ஜ்வரம்; எரியும் கொள்ளிக் கட்டை ஒன்று கொண்டுவாருங்கள்" என்றார். கொள்ளிக்கட்டையால் லோபியின் காலில் ஒரு சூடு போட்டார்; லோபி சலிக்கவே இல்லை; உணர்ச்சியற்றவன்போல் கிடந்தான். "அம்மா! உம் கணவன் இறந்து போய்விட்டான். உம் பிள்ளையோ இங்கில்லை; நானே இவனை ஸம்ஸ்காரஞ் செய்கிறேன்" என்று சொல்லிவிட்டு, சிவன் சில ஆட்களைவிட்டு, லோபியின் தஹனக்கிரியைக்கு ஏற்பாடு செய்தார்.

ச்மசானத்தில் சிதை கொழுந்துவிட்டு எரிகிறது; அலக்ஷ்யமாய் லோபி அதன்மேல் படுத்திருக்கிறான்; சிவனோ கிழவர் வேஷத்தோடு வியந்தவராய் நின்றுகொண்டிருக்கிறார். அச்சமயம் தேவதைகள் அசரீரியாய் சிவனைக் குறித்து "ஸ்வாமி! தாங்கள் இவ்வளவு இரக்கமின்றி ஒரு பிராம்மணனை அவனுடைய கருமித்தனத்திற்காகப் பரீக்ஷை செய்யலாகாது" என்று சொல்ல, சிவன் தன் வேஷத்தைக் கலைத்து, சிதையிலிருக்கும் லோபிபட்டனைப் பார்த்து "அடே, லோபிபட்டா! எழுந்திரு. நான் கடன்காரக் கிழவனல்ல, சிவன்; எழுந்திரு. வரன்கள் என்னென்ன வேண்டுமோ அவற்றைக் கேட்டுக்கொள்" என்றதும் லோபிபட்டன் துள்ளி எழுந்தான். "லோபிபட்டா! நானே தோல்வியுற்றேன்; நீயே வென்றாய்" என்று ஒப்புக்கொண்டார் சிவபெருமான்.

"உமர் கையூமின் ருபையத்து."

"பரத்வாஜன்."

எழுமின்! விண்ணுள வுடுக்கள் விரவியோடிட விருளேனுங்
கெழுமிய வள்ளத்துப் பெய்தனன் வைகறை யிவ்விரத்தினப் பரிதி!!
சூழுமிய கதிர்புனை கிரண வொண் கசை கோடிவ்வீழவன் மறவன்
அழிவுறு மாக்களின் கந்தரம் பிணித்தெனக் கோபுரமிலங்கிட நோக்காய்!

புலரியினிடக்கரம் ககன மேலுயர்த்திடு மமயத்து
நவிலிடு பிழியர்தங் களிகூரற் கனவிடை செவியுறு மஃதெனினே
துயிலெழும்! துயிலெழும்!, துஞ்சிடு சிறுரே! தூயநுங் கரகத்திடைசோரிமின்
யிரதமென்னுவியாம் பண்புடை நறை நுஞ்சடமிசை யுலர்ந்திடாமுனமே!

வாரண மரற்றிடு வைகறை யாண்டும் பிழியர் தங்கடைமுனர் சூழுமிய
பாரணர் புதவடை மகற்கிவை யுரத்திட அறைப, 'திறமின், திறமின்!',
தூரணி தனிலினி துய்த்திடுந் தவணையோதன்ன மென்றுணர்வீர்!
காரணமீதால் கதவடை தவிர்மின்! கழிந்தவ ரேனிலினிக் கடைமுனர் வருவரோ!'

சிந்தையிலெழுந்தன தோன்று நாம் துய்த்தற் குன்னிய வவாத்திரள்!
வந்ததிவ்விளவேனில்!! யாண்டு விழைவரே யறிஞரினிய வேகாந்தம்!!!
பைந்தரை பயன்தர யுயிர்த்தனன் ஏசு! மோசையின்
எந்தையினிமய வொண் கரம் பழன மென் கிளையிடை புதுக்குவ பைந்தளிர்

அரயனும் ஷத்தாத மைத்த விவ்விராமு மன்றே யழிவுற் றெழிய!
பெரியனும் ஜம்ஷேட் பருகிய எழுவளைக் கரகமும் கண்டிலதாகக் கால
வரையிறுற் கழியவும் காண் பிராலின்றையும் கரை மிசை காவும்
நறை பிழி யிரத்தின ஒளிர் விடு திரட்சை மென் கொடியே!

இசைபொழி தாவுதினினி மெல்லதரமு மோனமே பூண்ட!
வசை தவிர் பஹலவி மொழி யினி லியம்புவ பொழிலிடைகுயில்கள்!
நசை புகல் நறை தனை நல்குமின், நல்குமின், நல்குமி னிவணே
தசைவெளிர் நளினவிம் மலர் கவுளிலங்கிடப் பவள வொண் துவரே!

இவ்வாறு பாக்களும் ''உமர் கையாம்'' என்னும் பாரசீக கவியின் ''ருபையத்து'' என்னும் பிரபந்தத்தினின்று மொழி பெயர்க்கப் பட்டவை. தமிழருக்கு அதன் சுவையைக் காட்டவே செய்த இஃது ஓர் முயற்சி. ஆயினும் தமிழின் சுவையைத்தான் தமிழர் முற்றிலும் அறிவரோ? அவ்வாறறிந்த சிலரன்றோ ஏனைய பாஷாந்தரங்களின் பல்வேறுபட்ட ரசனைகளை வியந்தும், புகழ்ந்தும் பாராட்டக் கூடுமே! ஆங்கிலங் கற்றவர் பாரசீகங் கற்றிலர் ஆயினும், உமரின் ஒப்பற்ற கவிதையை ஆங்கில பாஷாந்தரத்திலறிந்து, அதையும் தங்களிலக்கியத்திற்கோரணிகலமாகப் ''பிட்ஜெரால்ட்'' கவிஞனால் அளிக்கப் பெற்றனர். எனவே, ஆரியம், ஆங்கிலம் கற்ற பண்டிதர் பலர் தமிழின் அருமை பெருமைகளைப் பெரிதும் மதிப்பர். இம்முறையே அருந்தமிழ் கற்றவரும் ஆரியத்தைச் சீரிய நிலையிலே கொள்வர். இதற்குச் சான்றாக பண்டைகாலத்துப் புலவர் பெருமான்களான கம்பர், ஒட்டக்கூத்தர், வில்லி முதலியோர் உபயபாஷைகளிலும் வித்துவான்களாகவே விளங்கினர். பாஷையினது விஸ்தாரமும், அர்த்த விசேஷங்களமைந்த அரும் பொருள் விளக்கங்களும் விருத்தியாயின. ஆங்காங்கு ஒவ்வொரு பாஷையின் சிறப்புகளும் விசேஷ தோரணைகளும் தெட்டெனத் தோன்றலாயின.

பாரசீகக் கவி உமரின் பாக்கள், ஜீவப்பிரம்ம ஐக்கியத்தையும், பதி பசு பாசம் போன்ற சைவத்துவைத முதிர்ச்சியை விளக்கும் ஒரு வாயிலாக, பரமானந்த முக்தியனுபவத்தை மதுவருந்துவோன் கூற்றாகவும், மது, மதுப் பாண்டம், மதுவருந்துவிப்போன், மதுவருந்துவோன் இவர்கள் வாயிலாக ஜீவன், சுகம், துக்கம், குரு, ஐக்கியம் இவைகளின் உண்மைப் பொருள் தோன்ற, கல்பனா சக்தி நிறைந்த பாக்களால் உமர் கவி கூறுகிறார். இராமலிங்க சுவாமிகளும், அரிய செய்யுட்களில் இந்த 'சூபி' மதத்தாரின் கவிதா விசேஷம் தோன்றும் ரசனையை பெரிதும் காட்டியுள்ளார். ஆகவே, கவிகள் பாஷைகளில் வேறுபடினும் இலக்ஷியங்களில் ஒன்று சேரும் அமயங்களில், 'அலங்கார சமத்துவம்' ஏற்படஹேதுவான ஓர் விச்வரூப துறையிலேயே தங்கள் உத்பிரேக்ஷைகளையும், கல்பனைகளையும் செலுத்துகின்றனர். உத்தம காவியங்களின் உற்பத்தி பல்வேறு தேசத்திலும் பல்வேறு பாஷைகளிலும் தோன்றிடினும், மானிடரனைவர்க்கும் எக்காலத்தும் இன்பந்தரத்தக்க உணர்ச்சிகளையே அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன.

இவைகளைக் கற்றறிந்தோர் அனுபவிக்கப் பெரிதும் விழைவர். நம் தமிழ் பாஷையிலுள்ள கவிகளின் பொருள் நயம் இவற்றைச் சீர்தூக்கி ஆராயுங்கால் நமக்கு எவ்வளவு கல்வித்திறனும், புராண இதிகாசப் பயிற்சியும், மற்ற இலக்கண இலக்கிய அமைப்பின் ஞானமும் அவசியமோ, அவ்வளவும் பாஷாந்தர இலக்கிய இலக்கணங்களுக்கும் இன்றிமையாதனவாகின்றன. 'ஏசு' 'மோசை' 'இரான்' 'ஷத்தாத்' 'ஜம்ஷேட்' பருகிய 'எழுவளைக் காகம்' 'தாவுத்' இவர்கள் பெயர்கள் சரித்திர விருத்தாந்தம் அனைத்தும் அறிமுகமாக வேண்டும். அவ்வாறே பிற பாஷையில் வல்லுநரும் இராமன், பரதன், விபீஷணன், அருச்சுனன், ஆழ்வார், நாயன்மார் இவர்கள் வரலாறு தெரிந்தாலன்றி நம் இலக்கிய இனிமையைச் சுவைத்தற்குப்போதிய ஆர்வம் எழுதல் அரிது. சிற்சில இனிமை ஓசையொட்டி நிகழ்வன. சிற்சில இலக்கண வரம்புகளின் உபயோகத்தால் ஏற்படும் அதிசய நிகழ்ச்சிகள். அவைகளை ''சந்திப் பேய்'' என்று நிந்தனை செய்து, பாஷைக்கு இன்றியமையாத சீர், தளை, சந்தி இவைகளை நீக்கி, பழங் கவிகள் பாக்களையும், வசன நடையாக அச்சில் பதிப்பித்து தமிழைக் கற்போருக்கு ஒரு கைங்கரியம் செய்ய எண்ணிய ஒரு சிலர் தமிழின் இனிய ஓசையின் செல்வத்தையும், அதையனுசரித்து எழும் இசையானந்தத்தையும் பாதிக்கின்றனர். சிலர் புதுக்கவிகள் இயற்றுகின்றனர். புதுமை என்னும் கம்பீர நாதத்தில் பழம் பெருமைகளைச் சின்னபின்னமாக்கவும் தலைப்படுகின்றனர். கவிதா சக்தியானது ஊழையே யழித்துப் பாயும் பெரும் வெள்ளம்போல் பலரிடையும் எழும்போது அதை யடக்கிப் பல பெரும் துறைகளில் பாயுங்கால், இலக்கியப் பயிர் விளைவு நோக்கி, புலவர்களும், மற்றோரும் இலக்கியங்கள்

அதற்கு இலக்கணமியற்றி பெருங் கைம்மாறு செய்தனர். இக்காலத்தவரோ, இலக்கணப் பயிற்சி யேதுமிலராகவும், உள்ளெழும் உணர்ச்சி முதிர்வால் வெளிப்படும் யாவுமே, கவியெனும் கலக்கமுற்று அவசரப்பாக்கள் அமைக்கின்றனர். பொருத்தமற்ற விஷயம், அசம்பாவிதமான இயற்கை வர்ணனை, அழகு லவலேசமுமில்லாத அலங்கார ஆபாசங்கள் இவற்றையெல்லாம் புதுக்கவிகள் அமோகமாக உற்பத்தி செய்கின்றனர். இவர்களை இப்பொழுது மட்டுமல்ல, சுமார் நூறு வருடங்களுக்கு முன்னரே தமிழ் நாட்டில் காணலாம். இதனாலன்றோ,

குட்டுதற்கோ பிள்ளைப்பாண்டியனிங் கில்லை
குறும்பியள வாக்காதைக் குடைந்து தோண்டி
எட்டினமட்டறுப்பதற்கோ வில்லி யில்லை
இரண்டொன்று முடிந்துதலை யிறங்கப் போட்டு
வெட்டுதற்கோ கவியொட்டக் கூத்த னில்லை
விளையாட்டாக் கவிதைதனை விரைந்து பாடித்
தெட்டுதற்கோ வறிவில்லாத் துரைக ளுண்டு
தேசமெங்கும் புலவரெனத் திரியலாமே!

மானவீ.

K. வரதாச்சாரி, B.A., B.L.,

(293-ம் பக்கத் தொடர்ச்சி.)

அங்கம் 3. காட்சி 1.

உதயபுரத்து ராஜ ஸபை; சிற்றரசர்கள் கூடிப் பேசிக்கொண்டிருக்கின்றனர்.

ஜய ஸிம்ஹர் :—இந்தக் காம்னேர் யுத்தம் இதிஹாஸத்தில் தங்க எழுத்துக்களால் எழுதப்படவேண்டும்!

கோகுல ஸிம்ஹர் :—அவர்களுக்கு சாப்பாட்டு சாமான்கள் வரமுடியாமல் வழியை அடைத்துவிட்டபொழுதே வெற்றி நமக்கு நிச்சயமாகிவிட்டது.

பூபதி ஸிம்ஹர் :—அவர்களுக்கு இந்தக் காட்டு வழி எப்படி தெரிந்திருக்கப்போகிறது!

கோகுல :—முதுகு காட்டி ஓடமட்டும் தெரிந்ததோ?

ஜய :—ஆஹா! இன்றுதான் தன்யரானேம். புதிய ஒளியுடன் மேவார் மலைகளும் பிரகாசிக்கின்றன, பாருங்கள்!

பூபதி :—இந்த ஸந்தோஷ ஸமாசாரத்தை பாரத வர்ஷம் முழுவதும் இந்தக் காற்று பரப்பப்போகிறது. (அரசன் வருகிறார்.)

எல்லோரும் :—ஜேய், ராணா அமரஸிம்ஹருக்கு ஜேய்! (விஜயகானம் பாடுகிறார்கள்; அரசன் ஸிம்ஹாஸனத்தில் அமர்கிறார்; ஸத்யவதி வருகிறாள்; அரசன் ஸிம்ஹாஸனத்திலிருந்து இறங்கி அவளை வரவு ஏற்கிறார்.)

ஸத்யவதீ :—மஹாராஜ! நான் இவ்வளவு நேரமாக வெளியில் நின்றுகொண்டு மேவாரின் விஜயகானத்தைக் கேட்டு ஆனந்தித்துக் கொண்டிருந்தேன். கண்களில் நீர் ததும்பிற்று. மந்திரத்தால் கட்டுப்பட்டதுபோல் அசைவு ஒழிந்து நின்றேன். பிறகு........................

அரசன் :—பிறகு கானம் முடிந்தது! ஓர் ஆனந்த கோலாஹலத்தில் ஆரம்பித்து, ஓர் பெருமூச்சில் நிராசையாய் முடிந்தது, அவ்வளவுதானே?

ஸத்ய :—என்ன இது? இந்த ஆனந்தமயமான நாளில் இவ்வளவு விரஸம் ஏன்? எவ்வளவு கௌரவம் மேவாருக்கு இன்று தாங்கள் சேகரித்து அளித்திருக்கிறீர்கள்!

அரச :—காம்னேர் யுத்தத்தில் ஜயித்தது நாமல்ல.

ஸத்ய :—பின்? முகலாயர்களா?

அரச:—இல்லை, ராஜபுத்திரர்கள்தான். இந்த ஜயத்தை அடைந்தவர்கள், ஜயத்தை நமக்கு அளித்தவர்கள் பூமியிலே கிடக்கின்றனர்! ஜயத்துவனியை செய்துகொண்டு, வாத்தியம் முழங்க, கொடிகளுடன் நாம் திரும்பிவந்து உற்சவம் கொண்டாட, நமக்காக அவர்கள் உயிரை இழந்தார்கள்.

ஸத்ய :—அவர்கள் கீர்த்தி அக்ஷயமாக விளங்கும்......ஒரு சுப ஸமாசாரம் கொண்டு வந்திருக்கிறேன்.

அரச :—என்ன, என்ன?

ஸத்ய :—என் தகப்பனார் ஸகரஸிம்ஹர் சித்தூரைத் தங்களுக்காக விட்டுவிட்டார். தங்கு தடை இன்றி அவ்விடம் சென்று அரசு புரியலாம்.

அரச :—சித்தூரா? வாஸ்தவமா? உண்மையைத்தான் சொல்லுகிறாயா? அப்படியும் நடக்குமா? பகவானுக்கு நம்மிடம் அவ்வளவு கிருபை ஏற்பட்டு விட்டதா?

ஸத்ய :—ஆம், முற்றிலும் உண்மையே.

அரச :—என் சிறிய தந்தை ஒன்று அப்படி விட்டு விடவேண்டும். பாதுஷா அப்படிக் கட்டளை இட்டாரோ?

ஸத்ய :—இல்லே, இல்லே, பாதுஷா அவருக்குச் சித்தூரை முழுபாத்தியங்களுடன் கொடுத்துவிட்டார். அதை அவர் எவருக்கு வேண்டுமானாலும் கொடுக்கலாம் அல்லவா? அதனால் மனப்பூர்வமாக உங்களுக்கு கொடுத்துவிட்டார்.

அரச:—ஸாமந்தர்காள்! ஜயத்துவனி முழங்கட்டும்! என் தகப்பனுருடைய ஜீவியலக்ஷ்யம் இன்று ஸபலமாயிற்று. அவர் பிள்ளேயின் பாஹுபலத்தால் அன்று, அவர் ஸஹோதரருடைய தானத்தினல். உடனே சென்று கோட்டையைப் பிடித்துக் கொள்ளுங்கள். புதிய ஸேனே ஒன்று தயாராகும், போங்கள். யுத்தம் செய்ய நேரிட்டாலும், யுத்தம் செய்தே சித்தூர்க் கோட்டை கைவசமாகி விடட்டும்! போங்கள்.

ஸத்ய :—ஜேய், ராணு அமர்ஸிம்ஹகி ஜேய்!

காட்சி 2.

ஓர் கிராமத்திற்கு அருகில் ஓர் ஒற்றை அடிப் பாதையின் ஸமீபமாக ஓர் ஒடிந்த குடிசை; ஸாயங் காலம்; அந்த ஒற்றை அடிப்பாதையில் கல்யாணியும் அஜயஸிம்ஹரும்.)

கல்யாணி :—இனி நடக்கவே முடியாது, அவ்வளவுதான்.

அஜய :—ஸரி, இந்த கிராமத்திலேயே தங்குவோம். இந்தக் குடிசையைப் பார்த்தாயா? கதவையே காணுேமே! ஒரே இருட்டு—யார் உள்ளே? உள்ளே யார்? ஒருவரையுமே காணேம். ஒருவரும் வஸிக்கவில்லேயோ, இங்கு?

கல் :—இல்லேதான். நாம் இதிலே இன்று தங்குவோம். கால் கெஞ்சுகிறது; மேலே செல்லமுடியாது.

அஜய :—நீ இங்கேயே இரு. நான் அந்த கிராமத்திற்குச் சென்று ஓர் விளக்கும், சாப்பிட ஏதாவது கிடைக்குமானல் ஏதாவது பதார்த்தங்களும் கொண்டுவருகிறேன். நான் இதோ வந்துவிடுகிறேன். பயப்படாதே; ஜாக்கிரதையாக இரு. (போகிருன்.)

கல்யாணி :—எப்பொழுதாவது நடந்திருந்தால்தானே இதற்குமுன்! கால்கள் ரத்தம் கட்டிக்கொண்டு விட்டன. இருந்தாலும் இந்த தரித்திர வாழ்க்கையும், தானகவே நான் மேல்கொண்டதினுல் எனக்கு இன்பமே பயக்கின்றது. ஓர் கர்வமும் உண்டாகிறது. ஆமாம், நான் தங்கு தடையின்றி அலேமேல் அலேமோத ஸமுத்திரத்தில் போய் விழும் நதியைப்போல், ஆனந்த பூர்வகமாக என் ஸ்வாமியின் திருவடியில் சரணமடைவேன் என்று புறப்பட்டு வந்துவிட்டேனே. என் ஸ்வாமி என்னே தாஸியாகவாவது சேர்த்துக்கொள்வாரோ, மாட்டாரோ? அவர் மனேபாவம் எப்படி இருக்கிறதோ, ஒன்றுமே தெரியவில்லேயே! யாரது?

(ஸன்யாஸி வேஷத்தில் ஸகரஸிம்ஹர் வருகிருர்.)

ஸகரஸிம்ஹர் :—ஏனம்மா? நான் ஓர் ராஜ புத்திரன்தான். பயப்படாதே! நீ ஏன் இங்கு தனியாக நின்றுகொண்டிருக்கிருய்?

கல் :—என் ஸஹோதரர் இந்த கிராமத்திற்குச் சென்றிருக்கிருர். விளக்கு வாங்கிக் கொண்டு இதோ வந்துவிடுவார்.

ஸகர :—ஸரி, அவர் வரும் வரையில் உனக்கு நான் துணையாக இங்கு நிற்கிறேன். இங்கு முஸல்மான் ஸைனிகர்கள் உபத்திரவம் அதிகமாகிக்கொண்டு வருகிறது. நாலேந்து பேர்கள், இந்தப் பக்கமாகக்கூட வந்துகொண்டிருந்தனர். ஆகையால் உன் தமையன் வருமளவும் நான் இங்கு இருக்கவேண்டும்.

கல்:—ஐயோ, பயமாக இருக்கிறதே! தயவு செய்து இங்கேயே இருங்கள். எப்பொழுது வருவாரோ?

திரைக்குப் பின் :—இந்த பாழுங்குடிசையிலா?

திரைக்குப் பின்:—ஆமாம், ஆமாம். (ஒருவன் ஜன்னலே ஆட்டி ஒடிக்கிருன்.)

கல் :—யார், யாரு? அண்ணு, அண்ணு!

(மூன்று கொள்ளேக்காரர்கள் உள்ளே நுழைகின்றனர்.)

முதல் கொள்ளேக்காரன்:—இதோ, இதோ.

இரண்டாவது கோ:—பிடித்துக்கொள், பிடி பிடி. (முதல் கொள்ளைக்காரன் கல்யாணியை பிடிக்க வருகிறான். கல்யாணி தப்பி ஓடி 'அண்ணா அண்ணா' என்று அலறுகிறாள்.)

ஸகர :—(முன்வந்து) டேய், போடா.

முதல் கோ :—ஆளைப் பாருடா—நீ யார்?

இரண்டாவது கோ :—யாராக இருந்தால் என்ன? முதலில் இவனைக் கொல். (ஸகரஸிம்ஹரும் கொள்ளைக்காரர்களும் சண்டையிடுகின்றனர்; ஸகரஸிம்ஹர் விழுகிறார்.)

கல் :—அண்ணா, அண்ணா! (அஜயஸிம்ஹர் வந்துவிடுகிறார்.)

அஜய :—வந்துவிட்டேன், பயப்படாதே! (கத்தியை உருவி கொள்ளைக்காரர்களை அடித்து தள்ளுகிறார்;) தீர்ந்தார்கள். இவர் யார்?

கல்யாணி :—என்னைக் காப்பாற்ற வந்தார்; காயம்பட்டு விழுந்தார்.

ஸகர :—யாரப்பா நீ?

அஜய :—நான் ஸேனாதிபதி கோவிந்தஸிம்ஹரின் புதல்வன். இவள் என் தங்கை கல்யாணி.

ஸகர :—யார், மஹாபத்கானின் பத்தினி கல்யாணியா?

அஜய :—ஆமாம். தாங்கள் யார்? தெரிந்து கொள்ளலாமோ?

ஸகர :—நான் மஹாபத்கானுடைய பிதா, ஸகரஸிம்ஹன்.

காட்சி 3.

(ஜோதிபுர மன்னன் கஜஸிம்ஹரின் மாளிகை; ராஜஸபை; கஜஸிம்ஹர், ஸாமந்தர்கள், கஜஸிம்ஹரின் பிள்ளையான அமரஸிம்ஹர், தூதரான அருணஸிம்ஹர்.)

கஜஸிம்ஹர் :—தூதா! இந்த விவாஹத்தில் எனக்கு விருப்பம் இல்லை என்று உங்கள் மேவார் மன்னனிடம் கூறிவிடு. பாதுஷாவிற்கு விரோதிகள் எனக்கும் விரோதிகளே! அல்லவா, ஹரிதாஸரே?

ஹரிதாஸர் :—ஆமாம், அதற்கென்ன ஸந்தேகம்!

அருண் :—மஹாராஜா! எங்கள் அரசர் விரோதியுமல்ல, கலஹக்காரருமல்லவே! இவ்வளவு நாளாக இருந்து வந்ததுபோல், இன்றும் மேவார் ஸ்வாதீனதையுடன் இருந்துவர முயலுகிறது. அதனால் பாதுஷாவுக்கு விரோதி என்று எப்படி ஏற்படும்?

கஜ :—அந்த ஸ்வாதீனதையே பாதுஷாவிற்கு விரோதமான கலஹம் தான். ராஜபுதனம் முழுவதுமே தலைவணங்கி பாதுஷாவை ஏற்றுக்கொண்டுவிட்ட பிறகு, இந்தச் சிறு மேவார் மட்டில் தனியாக எதிர்த்து நின்று கொண்டிருப்பதேன்?

அருண் :—புரிந்தது; பொறாமை! ஸரிதான். ஸமஸ்த பர்வதங்களின் சிகரங்களிலிருந்தும் கௌரவம் என்னும் கிரணம் கீழே இறங்கிவிட்ட பிறகு மேவார் பர்வதத்தை மட்டில் சூழ்ந்து விளக்கிக்கொண்டிருக்கிறதே என்று தங்களுக்கு ஈர்ஷ்யை உண்டாகிவிட்டது! பார்க்க ஸஹிக்கவில்லை! ஆமாம், எல்லா ராஜபுத்திர அரசர்களின் தலைகளும் கிரீடம் இன்றி, சும்மா இருக்கும்பொழுது, மேவார் மன்னன் மட்டில் தன் முடியைக் கிரீடத்தால் அலங்கரித்துக்கொண்டு விளங்கினால் இதைப் பார்க்கக் கண்ணை உறுத்துமல்லவா? ஆனால் சற்று யோஜித்துப் பாருங்கள். இந்த கௌரவத்தைத் தாங்களும் வைத்துக்கொண்டு வாழ்வதை அவர் வேண்டாமென்றாரோ, அல்லது தாங்களை அடைய ஒட்டாமல் தடுத்துவிட்டாரோ? உங்களை நீங்களே வஞ்சித்துக் கொண்டுவிட்டு, அவரை ஏன் குறை சொல்லவேண்டும்?

கஜ:—தூதா! உன் அதிகப்பிரஸங்கம் இங்கு வேண்டியதில்லை. உங்கள் அசட்டு தைரியம் உங்களுக்குத்தான் தகும். 20,000 ராஜபுத்திரர்கள், விசுவவிஜயியான முகலாய சக்கரவர்த்தியையே எதிர்ப்பது என்பது முழு பைத்தியக்காரத்தனம். அது உங்கள் அரசனுக்குத்தான் ஏற்றது.

தூத :—தாங்கள் சொல்வது முற்றிலும் உண்மை. அது அவருக்குத்தான் ஏற்றது; அவருக்குத்தான் சோபை அளிக்கிறது. அந்த

பைத்தியக்காரத்தனம் தங்களிடம் இல்லை; அந்த சோபையும் தங்களுக்கு இல்லை; அதற்கு வேண்டிய சக்தியும் இல்லை.

கஜ:—என்ன சொன்னாய்? தூதன் அவத்யன் ஆயிற்றே என்று பார்க்கிறேன். இல்லாவிட்டால் உன்னை என்ன செய்வேன், தெரியுமா?

அருண்:—ஆஹா! இவ்வளவு மனுஷ்யத்தனமும் தம்மிடம் உண்டா? தூதன் அவத்யன் என்றாவது தமக்கு எப்படித் தெரிந்தது? இவ்வளவு பெரிய நீதி தம் வாயால் எப்படி வரமுடியும்?

கஜ:—தூதா! போதும். என் பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு; என் தைரியத்திற்கும் அதேபோல் எல்லையுண்டு. நீ போய் உங்கள் அரசனிடம் நான் இந்த விவாஹத்தை சம்மதிக்கவில்லை என்று தெரிவி போ.

அருண்:—ஸரி, போகிறேன். ஒன்று சொல்லிவிட்டுத்தான் போகிறேனே! தாங்கள் பாதுஷாவிற்காக அவர் சார்பில் அனேக யுத்தங்கள் செய்திருக்கின்றீர்களாம். கூர்ஜரத்தையும் ஜயித்தீர்களாம். தாங்கள் மேவார் யுத்தத்திற்கும் வரலாம். நீங்கள் அப்படியே வரவேண்டும் என்று தங்களை அழைத்துவிட்டுச் செல்கிறேன். (அருணஸிம்ஹன் போகிறான்.)

கஜ:—ஓ அப்படியா? தூதா! நில், அப்படியே. என்னுடனேயே செல்லலாம், நில்.

அருண:—என்னைச் சிறை செய்கின்றீர்களா,

கஜ:—ஆம். அமரஸிம்ஹா! இவனைச் சிறை செய்.

அமர:—இது என்ன இது? தூதன் அல்லவா? தூதனை அவமதிப்பது க்ஷத்திரிய தர்மத்திற்கே விரோதமன்றோ?

கஜ:—அமரஸிம்ஹா! தர்மாதர்மத்தை நான் உன்னிடம் கற்றுக்கொள்ள வேண்டியதில்லை. என் கட்டளையை நீ நிறைவேற்று, உடனே!

அமர:—அப்பா! இந்த அநியாயக் கட்டளையை நான் ஒப்புக்கொள்ள முடியாது.

கஜ:—(வெகுண்டு) முடியாதா? முடியாது? போக்கிரிப் பயலே! என் ஜ்யேஷ்ட புத்திரன் நீ; ஆயினும் என் உத்தரவை மதிக்காவிட்டால் இந்த ராஜ்யம் உனக்கு இல்லை. இளையவன் யசவந்த் ஸிம்ஹனுக்கே முடிசூட்டுவேன், தெரியுமா?

அமர:—உங்கள் ராஜ்யத்தை நீங்களே வைத்துக்கொள்ளுங்கள். முகலாயர்களுடைய பிச்சையான, தங்கள் ஸிம்ஹாஸனத்தில் அமர எனக்கு சிறிதும் விருப்பம் இல்லை. முகலாயர்களுடைய செருப்பைத் தலைமேல் தூக்கிவைத்துக்கொள்ள வேண்டுமென்று ஆக்ரஹம் எனக்கு இல்லை.

கஜ:—ஓஹோ, அப்படியா! இந்த அபசாரத்திற்கு தண்டனையாக இதே க்ஷணம் இந்த ராஜ்யத்தைவிட்டு உன்னை பஹிஷ்காரம் செய்தேன்—போ வெளியே.

அமர:—இதோ போகிறேன். (அமரஸிம்ஹன் போய்விடுகிறான்.)

கஜ:—(சற்று பிறகு) தூதா! நீயும் போகலாம். உன்னை விடுதலை செய்துவிட்டேன்.

காட்சி 4.

மஹாபத்கானுடைய வீடு; இரவு:

மஹாபத்கான்:—அவளைத்தான் நான் தள்ளிவைத்து விட்டேனே—இருந்தாலும் ஏன் அடிக்கடி அவள் ஞாபகமே எனக்கு? அன்பு நிறைந்த அவள் முகம் என் கண் முன்பே நிற்கிறது. நான் செய்தது சரியல்ல. ஓர் அபூர்வமான ரத்தினத்தை இழந்துவிட்டேன். அவள் கடிதத்தை திருப்பிவிட்டது பெரிய தவறு. சுத்தமான அவள் அன்பை நான் அப்படி அவமதித்தது, திரஸ்கரித்தது தவறேயாகும். அவள் தகப்பன்மேல் நான் கொண்ட கோபத்தை அவள்மேல் செலுத்திவிட்டேன். ஆவேசத்தில் ஒன்றும் தெரியாமல் செய்துவிட்டேன். மனமார மன்னிப்பு கேட்டுக்கொள்ளவேண்டும். ஆம், யார் அது? (ஓர் காவலாளி வருகிறான்.)

காவலாளி.—கஜஸிம்ஹ மஹாராஜர் தங்களைக் காண வந்திருக்கிறார்.

மஹா:—கஜஸிம்ஹனு? ஜோதிபுரமன்னனு?

காவ :—ஆம்.

மஹா :—அழைத்துவா. (காவலாளி போகிருன்) கஜஸிம்ஹனுக்கு என்னிடம் என்ன? முகலாய அடிமை! பயங்கொள்ளிப் பதர்! எதற்காக வருகிருன், பார்ப்போம். (கஜஸிம்ஹர் வருகிருர்.)

கஜ :—ஸலாம், கான்ஸாஹேப்!

மஹா :—ஸலாம், மஹராஜ்! இந்த எளியவன் குடிசைக்கு மஹராஜர் எழுந்தருளியது என் பாக்கியமே. ஏதாவது விசேஷம் உண்டோ?

கஜ .—பாதுஷா தங்களைக் காண விரும்புகிருர்.

மஹா :—காத்துக்கொண்டிருக்கிறேன்...... மேவார் யுத்த விஷயமாகவா?

கஜ :—ஆமாம்.

மஹா :—நான்தான் என்னுடைய நிலைமையைத் தெரிவித்து இவ்விஷயத்தில் என்னை மன்னிக்கும்படி கேட்டுக்கொண்டுவிட்டேனே. மறுபடியும் என்னை ஏன் நிர்ப்பந்தப்படுத்த வேண்டும்?

கஜ :—பாருங்கள், பாதுஷாவின் ஸைன்யங்கள் ஒவ்வொரு தடவையும் மேவார் யுத்தத்தில் தோற்றே வருகின்றன. பாதுஷாவிற்கு இது ஓர் பெரிய அவமானமாக இருக்கிறது. மிகுந்த துயரத்தில் ஆழ்ந்துவிட்டார். வேறு வழியே இன்றி, தங்களைத்தான் தொந்திரவு செய்யவேண்டியதாயிற்று. இந்த அவமானத்திலிருந்து பாதுஷாவை காப்பாற்றக் கூடிய வீரர் தாங்கள் ஒருவர்தாம்; தங்களைப் போன்ற சுபசிந்தனை செய்பவரோ ஆபத்தில் உதவும் அருமை ஸேவகரோ வேறு யார்?

மஹா :—இவை எல்லாம் என்ன வார்த்தைகள்!

கஜ :—எல்லாம் உண்மைதானே! உலகம் அறிந்ததே யன்றோ.

மஹா :—ஹூம்! (கவலையாக உலாவுகிருர்.)

கஜ :—கான்ஸாஹேப்! இந்தத் தடவை தாங்கள் கத்தியை எடுத்துத்தான் ஆகவேண்டும். மேவார் உங்களுடைய ஜன்மபூமியென்று எனக்குத் தெரியும். அதன் அரசனை அமரஸிம்ஹர் தங்களுக்கு ஸஹோதரராகவேண்டும் என்பதும் தெரியும். ஆயினும், தாங்கள்தான் இந்த ஸம்பந்தத்தை எல்லாம் அறவே ஒழித்துவிட்டு வந்துவிட்டீர்களே! ஹிந்து மதத்தையும் விட்டுவிட்டுத்தானே முஸல்மானுகி இங்கேயே இருக்கின்றீர்கள். பின் ஏன் வீணுக ஸங்கோசப்படவேண்டும்? மேவாருக்கும் தங்களுக்கும் இனி யாதொரு ஸம்பந்தமும் இல்லை. வீணுக யோஜிக்கவேண்டாம்.

மஹர :—(தனக்குள்) மேவார் எப்படியும் என் ஜன்மபூமியல்லவா?

கஜ :—ஆமாம்! உங்களுடைய ஜன்மபூமி, உங்களை மதித்து வரவேற்று, தன் மடியில் தூக்கி உட்காரவைத்துக்கொண்டு உங்களைக் கொண்டாடப்போகிறதோ? ஓர் தடவைபோய்த்தான் பாருங்களேன்! உங்களைக் கண்டவுடனேயே ஒவ்வொரு மேவாரியனும் சுட்டிக்காட்டி "பிரதாபஸிம்ஹரின் குடும்பத்தில் பிறந்தும் துலுக்கனுகி ஆனுனே!" என்று ஏளனம் செய்வான். கிழவர்கள், உங்களிடத்திலுள்ள வெறுப்பினுல் உங்களைக் கண்ணெடுத்தும் பார்க்கமாட்டார்கள். வீரர்கள், ரோஷம் பொங்கும் கண்களால் உங்களைச் சுடுவார்கள். ஜன்னல்கள் பின் நின்று பெண்களும் உங்களைத் திட்டுவார்கள். கான்ஸாஹேப்! ராஜபுத்திரர்கள் உங்களைத் தங்களுடன் பிறந்தவராக ஒருபோதும் மதிப்பதில்லை போய்ப் பாருங்கள், தெரியும். இந்த ஆசை வீண்!

மஹா :—ஹூம்! (யோஜிக்கிருர்.)

கஜ :—நான் சொல்வதைக் கேளுங்கள். இனி உங்கள் வாழ்வு முகலாயர்களுடன்தான். அவர்களுடைய மேன்மையிலேதான் உங்களுடைய மேன்மை; அவர்கள் தாழ்வுடன் உங்கள் தாழ்வும் நிச்சயம். (ஸன்யாஸி ஆடையில் ஸகரஸிம்ஹர் வருகிருர்.)

ஸகர :—மஹாபத்!

மஹரா :—யார்? என் தந்தையா? எது இவ்வளவு தூரம்......அதிலும் இந்த உடையில்?

ஸகர :—நான் ஸன்யாஸியாகிவிட்டேன்.

மஹரா :—எனப்படி?

ஸகர :—ஏன்? வாஸ்தவம்தான். உனக்கு இது ஆச்சரியமாகத்தான் இருக்கும். தன் தேசத்தையே துறந்து, தன் ஜாதியையும் துறந்து தர்மத்தையும் துறந்து அன்னியஜாதியினருக்கு அடிமைப்பட்டு அவர்கள் முகம் பார்த்து வாழ்ந்துவந்த நானே கடைசிக் காலத்தில் முற்றிலும் மாறி ஸன்யாஸியாகிவிடுவதென்றால் உனக்கு ஆச்சரியமாகத்தான் இருக்கும். போகட்டும், நான் உன்னிடம் எதற்காக வந்தேன், தெரியுமா?

மஹரா :—தெரியாதே, சொல்லுங்கள்.

ஸகர :—இவ்வளவு நாட்கள் கழித்து இப்பொழுதுதான் நான் என் ஜன்மபூமியைக் கண்டுகொண்டேன். ஆஹா! இந்தத் தாயின் ஆஹ்வானம் எவ்வளவு கம்பீரமானது! எவ்வளவு கருணை ததும்புகிறது! தொண்டை அடைத்து வருகிறது! உன்னால் மனதினால் கூடக் கற்பனை செய்துகொள்ள முடியாதே! என் பாபங்களுக்கு பிராயச்சித்தம் செய்துகொள்ளத் தொடங்கி விட்டேன். நீயும் உன் பாபங்களுக்கு பிராயச்சித்தம் செய்துகொள்ள வேண்டும் என்று உனக்கு சொல்லத்தான் வந்தேன்.

மஹரா :—என் பாபங்களா?

ஸகர :—ஆமாம், உன் பாபங்களுக்குத்தான். நானாவது என் ஸ்வஜனங்களை மட்டில் விட்டு முகலாயர்களின் அடிமையாக வாழ்ந்தேன். நீயோ, உன் மதத்தையே விட்டு விட்டு முஸல்மானாகவே ஆகிவிட்டாய்! உன் பாபங்களுக்கு எல்லையே இல்லை.

மஹரா :—பாபம் செய்ததாக எனக்குத் தெரியவில்லை. இஸ்லாம் மதம் உண்மையான உயர்ந்த மதம் என்ற நம்பிக்கை உண்டாகி, நான்............

ஸகர :—அட மஹராபத்! உனக்காவது நம்பிக்கையாவது? நீ குரானைப் படித்திருக்கலாம்; அதை ஹிந்துமதம் ஆக்ஷேபிக்கவுமில்லை, நிந்திக்கவும் இல்லை. இருந்தாலும், நீ உன் மூதாதையோரின் மதத்தைவிட்டு வேறு மதத்தில் சேருமுன், நம் மதத்தின் மூலக்கிரந்தங்களை படித்துப் பார்த்ததுண்டோ? வியாஸர், கபிலர், சங்கராசாரியார் முதலானவர்களுடைய உபதேசத்தை கவனித்ததுண்டோ? உன்னைப் போன்ற அக்ஷரஞானமும் இல்லாத மூடனுக்கு இந்த தர்மாதர்ம விசாரங்கள் என்ன தெரியும், எப்படித்தான் உண்டாகும்? எந்த தர்மத்தின் மூலமந்திரமே பிரவிருத்தியை அடக்கி ஆத்மஜயம் அடைவதோ, எந்த மதத்தின் அந்திம விகாஸம் ஸர்வபூத தயையோ—அதுவும் மனுஷ்ய மாத்திர தயையன்று, சிற்றெறும்பு வரையில் விகஸிக்கும் விசேஷ தயையோ-அப்பேர்ப்பட்ட சிறந்த மதத்தை, சற்றும் யோஜிக்காமல் விட்டுவிட்டு, வேறு மதத்தில் சேர்ந்துகொண்டு என்ன மஹாபாபம் செய்துவிட்டாய், தெரியுமா?

மஹரா:—தாங்களே தர்மோபதேசம் செய்ய வந்துவிடுவதென்றால் ஆச்சரியமாக இருக்கிறதே. அதிலும் இவ்வளவு நாள்..............

ஸகர :—ஆமாம், இவ்வளவு நாட்களாக பண ஆசையைத் தவிர வேறு ஒன்றையுமே அறிந்திராத நானே என் மதத்தின் மேன்மையைக் கண்டுகொண்டு அதற்காக உழைக்க முற்பட்டுவிடுவது என்றால், நீ ஆச்சரியப்படவேண்டியதுதான். ஆயினும், நீ ஓர் விஷயம் கவனித்திருக்கிறாயா? மனித இருதயமே அனேக தந்திக்கம்பிகள் கொண்ட ஓர் வீணை. ஓர் கம்பியாவது உயர்ந்த ஸ்வரம் பேசும். எப்பொழுதாவது ஏதோ சேர்க்கையினால் அந்தக் கம்பி சப்திக்க ஆரம்பித்துவிட்டால், உடனே அந்த க்ஷணத்திலேயே இருதயம் முழுவதுமே ஓர் கலக்கம் ஏற்பட்டுவிடும். இந்த நீசமான 'தன் நலம்' என்பதை உதறி எறிந்துவிட்டு விசால நோக்கங்கொண்டு விஸ்தரிக்க ஆரம்பித்துவிடும். அன்று இந்த விஷயத்தை வெகு அழகாக எனக்கு போதித்தாள் கல்யாணி.

மஹரா :—கல்யாணியா?

ஸகர :—ஆம், இன்றும் ஸங்கீதம்போல் என் காதுகளில் ஒலித்துக்கொண்டு இருக்கி

றது அவள் உபதேசம். மஹாபத்! கல்யாணியை அவள் தகப்பனார் வீட்டை விட்டுத் துரத்திவிட்டாரே, தெரியுமோ உனக்கு?

மஹா :—வீட்டைவிட்டுத் துரத்திவிட்டாரா? ஏன் என்ன குற்றம் செய்தாள்?

ஸகர :—மதம் மாறின உன்னை இன்னும் பூஜித்து வருகிறாளே யென்றுதான்.

மஹா :—என்ன! ஹூம்...அவளை எங்கு கண்டீர்கள்?

ஸகர :—ஓர் பாழுங்குடிசையில் வரும் வழியில் கண்டேன்.

மஹா :—தந்தையே! இதுதானோ உங்கள் உதாரமான அதி உதாரமான ஹிந்துதர்மம்? முஸல்மான்களிடம் இவ்வளவு துவேஷமா, இவ்வளவு வெறுப்பா! கல்யாணியின் பக்திக்கு வெகுமானம் 'வீட்டைவிட்டுப் போ' என்ற கடும் உத்தரவுதானா?......தந்தையே! நான் பிராயச்சித்தமா செய்துகொள்ளவேண்டும்? ஆஹா! அவசியம் செய்துகொள்ளுகிறேன். நான் முஸல்மானாகப் போய்விட்டேனே என்பதற்காகவன்று; நான் ஓர் ஸமயம் ஹிந்துவாகவே இருந்துவிட்டேனே, என்பதற்காக, செய்துகொள்கிறேன் இதோ பிராயச்சித்தம்.

ஸகர :—மஹாபத்!

மஹா :—ஹிந்துக்களிடம் ஏதோ கொஞ்சம் நஞ்சம் வைத்திருந்த அனுகம்பையையும், இதோ தூர அகற்றினேன். இன்றுமுதல் நான் முழு முஸல்மான்; ஒவ்வொரு நரம்பும் தோலும் முஸல்மான்.

ஸகர :—மஹாபத்! மஹாபத்!

மஹா :—தந்தையே! ஏன் வீணாக? உங்களுக்குத்தான் தெரியுமே...நான் அதிகம் பேசுவதில்லை. ஆனால் சொன்னபடியேதான். பிரதிக்ஞை செய்துவிட்டால், கொடூரமாகவே இருப்பேன், தெரியாதா?

ஸகர :—மஹாபத்! மஹாபாத்! இதைக் கேளேன்.

மஹா :—என் ஸ்வபாவம்தான் தெரியுமே உங்களுக்கு. வேண்டாம், உங்கள் ஸமஸ்த உபதேசமும், ஸமஸ்த யுக்திகளும், ஸமஸ்த ஆதேசங்களும் இனி வீண்; போங்கள்.

ஸகர :—மஹாபத்கான்! இவ்வளவு அநீதா கதியா உனக்கு? ஆனால் போ. சா, இந்தப் பாழுங்கிணற்றிலேயே...மிலேச்சன்! குலாங்காரபதிதன்! (ஸகாஸிம்ஹர் போய்விடுகிறார்; மஹாபாத்கான் மிகவும் கொந்தளிப்பு அடைந்து உலவுகிறார்.)

மஹா :—(சற்று நேரம் கழித்து) இவ்வளவு துவேஷமா? இவ்வளவு ஆக்ரோசமா? அதனால் தான் இந்த ஜாதி இப்படி அழிகிறது. ஒன்றுக்குப் பத்தாக இவர்களை முஸல்மான்கள் வெறுக்கின்றார்கள்; நசுக்குகின்றார்கள். இதுதான் இவர்கள் உதாரமான, அதி உதாரமான, ஸநாதன தர்மமோ? முஸல்மானிய மதம் தாழ்ந்ததோ உயர்ந்ததோ, அதன் மஹத்துவம் இதுதான்—வேறு மதஸ்தனையும் தனக்குள் அழைத்துக்கொண்டு மார்புடன் தழுவிக் கொள்கிறது, அன்புடன். அப்படிச் செய்யுமா ஹிந்து மதம்? ஆயிரம் தபஸ் செய்தாலும் அன்யமதஸ்தன் வந்து சேர்ந்துகொள்ள முடியாது. அவ்வளவு கர்வம்! அவ்வளவு அஹங்காரம்! அவ்வளவு பொறாமை! இந்த அஹங்காரத்தை நான் உடைத்து பொடிப் பொடியாகச் செய்தாலோ? ஏன்? ஆம், அதுதான் ஸரி. மஹாராஜ்! மேவாரின்மேல் படையெடுக்கத் தயார். பாத்ஷாவிடம் சென்று தெரிவித்து விடுங்கள். வேண்டிய சித்தங்களுடன் அவசியம் வந்து விடுங்கள். (கஜஸிம்ஹர் திடுக்கிட்டுப் புரியாமல் பார்க்கிறார்.)

மஹா :—ஏன் ஆச்சரியப்படுகிறீர்கள்? மேவாரை நாசம் செய்யப்போகிறேன். ஏன், தெரியுமா?

கஜ :—பாதுஷாவின் உண்மையான ஸேவகான்றோ தாங்கள்!

மஹா :—இல்லை இல்லை, அதனால் இல்லை. ஹிந்துமதத்தையே நிர்மூலம் செய்வதற்காக, உங்கள் ஜாதியையே மண்ணோடு மண்ணாகச் செய்து முடிப்பதற்காக. உங்கள் பெயர்கூட மிஞ்சாமல், இருந்த இடங்கூட தெரியாமல்

போகவேண்டும் என்றுதான் இதோ எடுக்கிறேன் கத்தியை. தெரிந்ததா? போங்கள், பாதுஷாவிடம் தெரிவித்துவிடுங்கள்.

காட்சி 5.

(பாதுஷா ஜஹாங்கீரின் தர்பார்; பாதுஷா ஸிம்ஹாஸனத்தில் வீற்றிருக்கிறார்; ராஜா ஸகரஸிம்ஹர் வருகிறார்.)

ஜஹாங்கீர்:—வாருங்கள் வாருங்கள், ராஜா ஸாஹேப்!

ஸகர:—ஸலாம், சக்ரவர்த்தி!

ஜஹாங்:—தங்களை மேவார் அரசனாகச் செய்து சித்தூருக்கு அனுப்பினோம். தாங்கள் சித்தூர் கோட்டையையே ராணா அமரஸிம்ஹரிடம் ஒப்பிவித்துவிட்டார்களாமே, வாஸ்தவமா?

ஸகர:—ஆமாம்.

ஜஹாங்:—யார் உத்தரவின்மேல் அப்படிச் செய்யப்பட்டது?

ஸகர:—உத்தரவை எதிர்பார்க்கவில்லை நியாயமாக அது அமரஸிம்ஹரைச் சேர்ந்தது தானே என்று அவரிடமே கொடுத்துவிட்டேன்.

ஜஹாங்:—அந்த நியாயவிசாரத்தைத் தாங்களே செய்துவிட்டீர்களோ?

ஸகர:—ஆமாம். அக்பர் பாதுஷா நேராகச் சண்டையிட்டு சித்தூரைப் பிடித்துவிடவில்லை. வஞ்சகமாகத் தான் கைப்பற்றிக்கொண்டார் என்று கேள்வி. அரசன் ஜயமல்லை கபடமாகக் கொன்று...........

ஜஹாங்:—எவ்வளவு நாளாக தாங்கள் இம்மாதிரி சரித்திர நியாய அநியாயங்களை பரிசோதிக்கத் தலைப்பட்டீர்கள்?

ஸகர:—சித்தூர் வாஸத்தால் திடீரென்று என் கண்முன் மூடியிருந்த படுதா விலகிற்று. பகவான் ராமசந்திரர் காலத்திலிருந்து நாளது வரையிலுள்ள மேவார் சரித்திரம், கண்முன் கோவையாக வந்து நின்றது. பாப்பாராவலுடைய விஜய கௌரவம், ஸகரஸிம்ஹர், சூண்டாஜீ முதலியவர்கள் தேசத்திற்காக உயிரை விட்டது, கும்பரின் வீரச்செயல்கள் யாவும் அற்புதமாக காட்சி அளித்தன. பிறகு ஓர் பெரிய பனிமூட்டமாக மூடிற்று. அந்த இருளிலிருந்து கிழிக்கொண்டு பிரகாசித்தது பிரதாபஸிம்ஹரது—என் ஸொந்த ஸஹோதரனை பிரதாபஸிம்ஹரது உருவிய கத்தி. எனக்கு என் தவறுகள் தெரிந்தன. வெட்கம் என்னை வாட்ட ஆரம்பித்தது. அதே வம்சத்தில் பிறந்த நான், அவர் விரோதிகளுடன் வாழ்ந்து வருவதை நன்றாக பரிசோதித்துப் பார்த்தேன். என் செய்கை எவ்வளவு ஹீனமானது என்று புலப்பட்டது. மற்ற ஒரு விஷயமும் அப்பொழுதுதான் எனக்கு உண்மை உருவத்தில் விளங்கிற்று.

ஜஹாங்:—சொல்லுங்கள், கேட்போம், அதையும்.

ஸகர:—அது புராணக் கதையன்று, சரித்திர ஆராய்ச்சியும் அன்று; என் கண்முன்பே, என் அருகிலேயே நடந்து வருவது அது. அதை யதார்த்தமாக இப்பொழுதுதான் தெரிந்து கொண்டேன். என் பெண்—இதே முகலாய தாஸனை என்னுடைய பெண், தன் தேசத்திற்காக பாடுபடுகிறாள். கிழிந்த ஆடையும் அரை வயிறுக் கஞ்சியுமாக, காடும் நாடுமாக அலைகிறாள். எந்த தேசத்தின் ஹிதத்திற்காக அவள் இவ்வளவு துன்பங்களை ஏற்றுக்கொள்ளுகிறாளோ, அதே தேசத்தை நசுக்கி அடிமையாகச் செய்யவேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும் முகலாயர்களுக்கு உதவியாக அவள் தகப்பனை நானே நிற்கின்றேன். இதை தெரிந்துகொண்டேன். உடனே கண்களில் நீர் ததும்பிற்று; தொண்டை அடைத்துக் கொண்டது; வெட்கம், கர்வம், ஸ்வதந்திரம், அன்பு—மாறி மாறி இருதயத்தை கவர்ந்துகொண்டன. என்னால் ஒரு க்ஷணமும் இருக்கமுடியவில்லை. என் ஸஹோதரனுடைய குமாரனை ராணா அமரஸிம்ஹருக்கு சித்தூரை விட்டுவிட்டு, நான் வெளிக்கிளம்பிவிட்டேன்.

ஜஹாங்:—ராஜா ஸாஹேப்! இறக்கத் தயாராகித் தானே வந்திருக்கின்றீர்கள்?

ஸகர :—ஸந்தேஹமின்றி. முற்றிலும் தயார்! சாகப் பயந்து நடுங்கிய காலமெல்லாம் போய்விட்டது; தத்துவத்தைக் கற்று உணர்ந்துவிட்டேன்.

ஜஹாங் :—அது என்ன தத்துவம்?

ஸகர :—தியாகம் என்பதுதான். தன் நலத்தைக் கருதாமல், ஈசுவரார்ப்பணமாக, அன்பு, பக்தி, தயவு ததும்ப, பிறருக்கு உதவிசெய்து உயிரை இழப்பது. கத்தியைப் பிடித்து அறியாத அதே கைகளினல், அன்று எளியவர்களின் உதவிக்காக கத்தியை சுழற்றினேன். கொள்ளைக்காரர்களின் கூரிய வாளின் காயத்தையும் என் தோளில் புஷ்பமாலையாகவே ஏற்றேன்.

ஜஹாங் :—ஆகையால்?

ஸகர :—ஆகையால் என் பழைய குற்றங்களுக்கு பிராயச்சித்தம் செய்துகொள்ளப் புறப்பட்டேன். தங்களிடம் அதற்காகத்தான் வந்தேன். அன்பையே உயிராகக் கொண்டவனுக்கு மரணத்தினின்றும் பயம் ஏது? ஆத்மோத்ஸர்க்கம் செய்யக் கற்றுக்கொண்ட பிறகு கவலை ஏது? ஸந்தேஹம் ஏது?

ஜஹாங் :—ரொம்ப ஸரி! மரணத்துக்குத் தயாராகலாம். (ஒரு சோப்தாருக்கு ஜாடை காட்டுகிறர்; அவன் ஸகாஸிம்ஹர் அருகில் வருகிறன்.)

ஸகர :—சக்கரவர்த்தி! இதற்குக் கொலையாளியோ வேறு ஒருவரோ வேண்டாம்! (இடுப்பிலிருந்து கத்தியை எடுத்து மார்பில் ஒரே குத்தாகக் குத்திக்கொள்கிறர்; கீழே விழ்கிறர்.) என் பாபங்களுக்கு இதுதான் பிராயச்சித்தம்.

(தொடரும்)

ஊருபங்கம்.

(வ. வேணுகோபாலன்.)

(மஹாகவி பாஸரது நாடகத்தைத் தழுவி எழுதியது.)

[நாடகப் பாத்திரங்கள்]

துரியோதனன்	... திருதராஷ்டிரன் புதல்வன்.	அசுவத்தாமா	... துரோணரது புத்திரன்.
திருதராஷ்டிரன்	... துரியோதனன் தந்தை	காந்தாரி	... திருதராஷ்டிரன் மனைவி.
பலராமர்	... யாதவகுல அரசர்.		
துர்ஜயன்	... துரியோதனன் புதல்வன்.	மானவி, பௌரவி	... துரியோதனனது மனைவியர்.

மூன்று யுத்த வீரர்கள்.

நாந்தி சுலோகம்.

மீனுமை கோலநெடு நரசிங்கமாகிநிலம் விரகாலளந்த குறளாய்
ஆனுது சீறுமழு வல்வில்லு வெல்லுமுனை யலமுற்ற செங்கையவராய்
வானுடர் வந்துதொழ மண்ணுடர் யாவரையும் மடிவிக்க வந்த வடிவாய்
நாலுவிதங்கொள்பரி யாளாகி நின்றருளு நாராயணுயநமவே.

முதல் அங்கம்.

(சூத்திரதாரன் பிரவேசம்)

மங்கள சுலோகம்.

சூத்திர: —

பேர்வில் த்ரோண பீஷ்மனும் அணையையும்
ஜயத்ரதப் பேர்கோள் ஜலப்பெருக் கோழுக்கையும்
காந்தார மன்னனும் காணுெணு மடுவையும்
பெருந்தேர் கர்னனும் பாய்ந்திடும் அலையையும்
புரவித் தாமா வெனும்பெரு மீனையும்
வெற்றிவேற் கிருபனும் விடமுதலையையும்
துர்யோத ஞதி நூற்றுவ ராகிய
அம்பருத் தூணியாம் ஆற்றுப் பெருக்கையும்
ஆய இவைகளை அடையக் கொண்ட
பாதகத் தன்மைதேர் பகையெனும் நதியினின்றும்
அம்புதேர் காண்டீப அருச்சுனன் றன்னை
கருணை கொண்டு காத்தருள் கண்ணனும்
ஆதிநா ராயணச் சோதிநின்
அடியினை அகங்கொள அலக்கண் தீருமே.

இதென்ன! ஏதோ பெருஞ்சப்தம்! இதோ, கவனிக்கிறேன்.

(திரைக்குள்)

இங்கே இருக்கிறோம்; இங்கே இருக்கிறோம்.

சூத்திர :—(உட்பக்கம் திரும்பி) ஓஹோ! தெரிந்து கொண்டேன்.

(பாரிபார்சுவகன் வெளிவருகிறான்)

பாரிபார்சுவ :—நண்பரே! என்ன இது! எங்கிருக்கிறார்கள்? நாராசபாணங்களாலும் அம்பறுத்தூணிகளாலும், தோமரம், ஈட்டி, முதலியவற்றாலும் அலங்கோலம் செய்யப்பட்டு, யுத்தாங்கத்தில் சண்டை செய்கிறவர்களாய், உள்ள இவர்கள்! தங்கள் ஆத்மாவை, ஸ்வர்க்கத்திற்கு ஹோமம் செய்யப்போகிறார்கள் போலிருக்கிறது விழுப்புண் பட்ட மார்பையுடைய இவர்கள். இப்பொழுது தங்களுடைய வீரியத்தை ஒருவருக்கொருவர் சோதித்துக் கொள்கின்றனர் என்று எண்ணுகிறேன்.

சூத் :—(கை தட்டி) நண்பா! நீ இன்னும் அறிந்து கொள்ளவில்லையா? வீரர்களின் சரீரத்தால் நிரம்பப்பட்ட இந்த யுத்த பூமியைப் பார்! இதோ! தலையில்லாது முண்டமாய் உருண்டு கிடக்கும், யானைகளையும் குதிரைகளையும் பார்! இவைகள், துரியோதனனைத் தவிர மற்றப்பிள்ளைகளையும் பேரர்களையும் இழந்த திருதராஷ்டிரன் பக்ஷமும், கிருஷ்ணனையும் பாண்டவர்களையுமே மீதியாகக்கொண்ட யுதிஷ்டிரன் பக்ஷமும், இங்கு சண்டை செய்ததில் கொல்லப்பட்டு குவிக்கப்பட்டவைகள். இதோ! ஒரு யானை தலையில்லாது நின்று கொண்டிருக்கிறது பார்! இதோ ஒரு யானை தும்பிக்கையில் சுருட்டப்பட்ட மனிதனுடன், உடலில்லாமல் கிடக்கிறது. இதோ! பாதி முகமில்லாத குதிரைகளைப் பார். கையில் கத்தி பிடித்து காலில்லாமல் நிற்கும் வீரர்களைப் பார், இவைகளெல்லாம் ஒரு சித்திரப்படம் போல் இருக்கின்றன, பார். ஹா! என்ன கொடுமை, இதோடு இன்னும் யுத்தம் முடிந்தபாடில்லை. பீமன், துரியோதனனைத் துரத்திச் சென்றிருக்கின்றான்.

(மூன்று வீரர்கள் வந்து கொண்டிருக்கின்றனர்)

(திரைக்குள்)

எல்லோரும் :—இங்கே இருக்கிறோம், இங்கே இருக்கிறோம்.

சூத் :—ஹா! இதோ! வீரர்கள்! நாம் ஓடிப் போய் விடுவோம்.

(பாரிபார்சுவகனும் சூத்திரதாரனும் ஓடிவருகின்றனர்).

(மூன்று வீரர்கள் வெளி வருகின்றனர்)

முதல் வீரன் :—நண்பர்களே! நாம் வந்திருக்கிற இந்த யுத்த பூமியானது, வீரர்களுக்கு தங்கள் தங்கள் பலத்தை வெளிக் காட்டும் இடமாகவும் அப்ஸரஸ்ஸுகளுக்கு சுயம்வர மண்டபமாகவும், அரசர்கள் பிற் காலத்தைக் கழிக்குமிடமாகவும், வீரர்களின் பிராணனை ஓமம் செய்யும் இடமாகவும் அமைந்திருக்கின்றதல்லவா?

இரண்டாம் வீரன் :—நன்று சொன்னாய், நண்பா! யானைகளின் சரீரங்களால் காடுமூடாக்கப்பட்டதும், நாலாபக்கங்களிலும் கழுகுகளாலும், நரிகளாலும், அரண் செய்யப்பட்டதுமான இப்பூமியில், கோடிக்கணக்கான வீரர்கள் இதுவரையில், எதிர்முகமாக சண்டை செய்து வீரஸ்வர்க்கம் அடைந்தார்கள். என்ன ஆச்சரியம்!

மூன்றும் வீரன் :—நண்பர்களே! நீங்கள் இருவர் சொன்னதும் ஏற்றதே! அறுத்துத் தள்ளப்பட்டு தொங்குகிற யானைகளின் துதிக்கையை யூபஸ்தம்பமாகக்கொண்டு நாலாபக்கங்களிலும் குவிந்து கிடக்கிற பாணங்களை தர்ப்பங்களாகக் கொண்டு கழுத்து வெட்டப்பட்ட யானைகளை சயனங்களாகக் கொண்டு, ஒவ்வொரு வீரனும் தன் உள்ளிருக்கும் கோபத்தை அக்கினியாகக் கொண்டு ஒடிந்து விழுந்து மேலே தொங்கிக்கொண்டிருக்கும் ரதத்தினது துவசத் துணிகளை அசுமானகிரிகளாகக் கொண்டு, ஒருவரை ஒருவர் எதிர்த்துப் பேசும் வீர மொழிகளையே மந்திரங்களாகக்கொண்டு கீழே விழுந்து கிடக்கும் வீரர்களை பசுக்களாகக் கொண்டுள்ள இந்த யுத்த பூமியானது பல யாகசாலைகளைப் போன்று விளங்குகிறது, பாருங்கள்!

முதல் வீர :—நண்பர்களே! இதோ, பாருங்கள், அரசர்கள் நீராடும்பொழுது அவரது மேலுள்ள ஆபரணங்களை சேவகர்கள் கழற்றி வைப்பது போல, கழுகுகள் தங்களுடைய ஆகாரத்திற்காக அரசர்கள் மேல் அலங்கரிக்கப்பட்ட ஆபரணங்களை மூக்காலே தூக்கி எறிகின்றன. என்ன விந்தை யிது!

இரண்டாம் வீர :—அரசன் தனது ராஜ்யத்தில் யுத்தத்திற்குச் சித்தமாக வைத்திருக்கும் பளபளப்பான ஆயுதங்களையும், கொழுத்த குதிரை யானைகளையும் போல, இதோ! இந்த யுத்தரங்கத்தில் சேனைகளும், ஆயுதங்களும் விளங்குகின்றன பாருங்கள்!

மூன்றும் வீர :—இதோ, மற்றோர் காட்சியைப் பாருங்கள். த்வஜஸ்தம்பங்களினின்று அறுக்கப்பட்ட பூமாலைகளால் அலங்கரிக்கப்பட்டு, தலையில்லா முண்டமாய் ரதத்தின்மீது உட்கார்ந்திருக்கும் ஒரு ராஜனை, நரிகள், ஆகாரத்திற்காக, தேர்த்தட்டிலேறி மாப்பிள்ளை

யை பெண்வீட்டார் சந்தோஷத்துடன் பல்லக்கிலிருந்து இறக்குவது போல் இறக்குகின்றன.

எல்லோரும் :—ஹா! இது என்ன கொடூரமான யுத்தம்! எவ்வளவு யானைகள், குதிரைகள் கொல்லப்பட்டிருக்கின்றன! எவ்வளவு ஆயுதங்கள் துண்டிக்கப்பட்டு சிதறிக் கிடக்கின்றன. ஹா! இப்பூமியைப் பார்த்தால் மிகுந்த பயமுண்டாகிறது!

முதல் வீர :—இதோ பாருங்கள்! கால் முறிந்து விழுந்திருக்கிற தேர்ப்பாகர்களை, இந்த ரத்த ஆற்றில் யானைகள் தத்தம் வழிப்படி இழுத்துச் செல்கின்றன. இதோ! முன்னைப் பழக்கத்தால், வீரர்கள் தலையில்லாதிருக்கும் பொழுதே முண்டமாய் ஓடுகின்றனர்; உடலில்லாத யானைத் துதிக்கையானது இதோ ஓடும் ரத்தத்தை உறிஞ்சுகின்றது, பாருங்கள்

இரண்டாம் வீர :—இதோ பாருங்கள், இலுப்பைமொட்டுப்போன்ற கண்களையுடையதும் பரந்த இறக்கைகளை யுடையதுமான பருந்துகள், மாமிசத்தால் உண்பிக்கப்பட்ட பனை விசிறிகள் போல், உலாவுகின்றன.

மூன்றாம் வீர :—இந்த காட்சியைப் பாருங்கள்! சூரியப் பிரகாசத்தால், இந்த யுத்த பூமி நன்றாக ஜ்வலித்துக்கொண்டிருக்கிறது. பிரகாசம் பொருந்திய, ஈட்டி, கத்தி, கேடயம், முதலிய ஆயுதங்களோடு கூடினதும் ரத்த ஆறு ஓடுகின்றதுமான இந்த யுத்த பூமியானது நக்ஷத்திரங்களோடு கூடின செவ்வானமானது, கீழே விழுந்துவிட்டாற்போன்று தோன்றுகிறது, பாருங்கள்.

முதல் வீர :—ஹா! இறந்த முகத்தை யுடைய க்ஷத்திரியர்களைப் பாருங்கள்! எவ்வளவு பிரகாசம், வீரத்தால் ஏறிட்டு நிற்கும், புருவத்தையும் கண்களையும் பாருங்கள். ஹா! இறந்த இவர்களுடைய கோபத்தோடு கூடிய கண்களைப் பார்த்தால் பயமுண்டாகிறது, பாருங்கள்.

இரண்டாம் வீர :—இப்படிப்பட்ட க்ஷத்திரியர்களுக்குக்கூட மரண முண்டாகிறதே, ஐயோ!

மூன்றாம் வீர :—இப்போர்க் கொத்தவர்களை எந்த வீரன் கொன்றானோ! ஹா, அவன் யாராயிருக்கலாம்!

முதல் வீர :— பாண்டவர்களுள், யாரால் கொல்லப்பட்டனரோ, தெரியவில்லை.

இரண்டாம் வீர :—யாரென்று கேட்பானேன், இவர்மேல் தைக்கப்பட்ட அம்புகளைப் பாருங்கள்! காண்டவவனத்தை எரிக்க உபயோகப்பட்டதும், நிவாத கவசர்களைக் கொல்ல உபயோகப்பட்டதும், பரமசிவனோடு சண்டையிட்டு வெற்றியடைந்ததுமான அம்புகளாலேயே இவர்களுக்கு வீரசுவர்க்கம்; தெரிந்ததா!

எல்லோரும் :—ஹா என்ன சப்தம்! மலைகள் மீது விழுந்த இடியா! அல்லது மேக சப்தமா!

மூன்றாம் வீர :—இதோ! பின்னே பாருங்கள்! பெருங்கூட்டம்.

(எல்லோரும் ஒன்று கூடி நிற்கின்றனர்.)

முதல் வீர :—இதோ! கோபத்தால் பொறி பறக்கப் பார்க்கும் மத்தியமனான பீமனுக்கும், தன்னுடைய நூறு சகோதரர்களையு மிழந்த துரியோதனனுக்கும் வியாசர், பலராமன், கிருஷ்ணன் முதலியவர்கள் முன்னிலையில், நடக்கும் கதாயுத்தமல்லவா!

இரண்டாம் வீர :—என்ன ஆச்சர்யம், தன்னந்தனியாய் நமது துர்யோதனன் மட்டிலும் அகப்பட்டு கொண்டான். ஐயோ! இதென்ன அடி! என் உடம்பு வலி எடுக்கிறதே! இருவரும் சமமான ஜோடிதான். இவர்கள் சரீரம் என்ன, கல்லாலிழைக்கப்பட்டதா? வச்சிரமா? இவ்வளவு அடிக்கும் ஒருவராவது அசையவில்லையே!

மூன்றாம் வீர :—தன் குருவான பலராமர் தலையை யசைப்பதைப் பார்த்து, தானும் தலையை அசைப்பவனும், அடியிலிருந்து தப்புவதற்காக தேஹத்தை அடிக்கடி குட்டையாகச் செய்து கொள்பவனும் தோளிலிருந்து ஒழுகும் ரத்தத்தோடு கூடினவனும் மலை போன்ற மார்பையுடையவனுமான நம் துரியோதன மஹாராஜாவைப் பாருங்கள்!

முதல் வீர :—சகல அவயவங்களிலும் ரத்தத்தோடு கூடினவனை பீமனைப் பாருங்கள். நெற்றியிலிருந்தும் மார்பிலிருந்தும் ரத்தம் ஊற்றைப்போன்று பெருகுகின்றது, பாருங்கள். செங்கற்கள் நிரம்பிய மேருமலைபோல் நிமிர்ந்து சண்டை செய்கிறான், பாருங்கள்!

இரண்டாம் வீர :—இதோ, பீமன் வளைந்து நின்று கதையைச் சுற்றுகிறான். சிம்மம்போல் கர்ஜனை செய்கிறான்! ஹா! துரியோதனன் மண்டை உடைந்தது.

முதல் வீர :—இதோ துரியோதனன் பீமன் அடியினின்றும் தப்பினான். இட சாரியாய் வல சாரியாய் இருவரும் அணுகுகிறார்கள் பாருங்கள். என்ன நடக்குமோ! எனக்கு ஒரே மயக்கமுண்டாகிறது!

மூன்றும் வீர :—இதோ துரியோதனன் பீமனைத் தலையில் அடித்தான். ஹா! மண்டை உடைக்கப்பட்டு ரத்தப் பெருக்கோடு, பீமன் கீழே விழுகிறான், பாருங்கள். என்ன கஷ்டம்!

முதல் வீர :—இதோ பாருங்கள்! கீழே விழுந்த பீமனைப் பார்த்து, வியாசர் மூக்கில் ஒரு விரலை வைத்துச் சிரிக்கிறார்! இப்பொழுதா சிரிப்பது?

இரண்டாம் வீர :—இதோ பார். யுதிஷ்டிரர் தைர்யமிழந்து நடுங்குகிறார்! விதுரர் வருத்தத்தால் கண்ணீர் விடுகிறார். என்ன பரிதாப நிலை! ஹா! ஐயோ!

மூன்றும் வீர :—ஹா! அர்ச்சுனன் காண்டீபத்தை எடுக்கிறான். கிருஷ்ணன் ஆகாயத்தைப் பார்க்கிறார்.

எல்லோரும் :—இதோ பாருங்கள், பலராமர் தன் சிஷ்யனிடமுள்ள பிரியத்தால் கலப்பையைத் தோளில் வைத்துப் புறட்டுகிறார்.

முதல் வீர :—இதோ பாருங்கள். துரியோதனனது கொழுப்பை! பலராமரது அபிமானத் துணிவினால், வஞ்சனையோடு கூடின விநயத்தோடு சாஹசம் செய்து கீழே விழுந்து கிடக்கிற பீமனைப் பார்த்து, ''ஏ பீமா! யுத்த காலத்தில் வன்மை யிழந்து எளிய நிலைமையிலுள்ள வீரர்களை நான் கொல்லமாட்டேன்; பயத்தை விடுவாயாக'' என்று சொல்லுகிறான். ஹா! என்ன கர்வம்! இதோ! எழுந்தான் பீமன், இனி விடமாட்டான்.

இரண்டாம் வீர :—இங்கே பாருங்கள்! ஸ்ரீ கிருஷ்ணன் தன் தொடையைத் தட்டிக் காட்டி பீமனுக்கு ஏதோ சமிக்ஞை செய்கிறான். இது ஏதோ சூதாயிருக்கிறதே!

மூன்றும் வீர :—ஹா! இந்த சமிக்ஞையால் பீமன் உத்ஸாக மடைந்திருக்கிறான். புருவத்தை நெறித்துக் கொள்கிறான். இதோ கைகளை உதறிக்கொண்டு கதாயுதத்தை எடுத்துச் சுற்றுகிறான், பாருங்கள்! தன் தகப்பனை வாயுவினால் புதிதாகப் பலம் பெற்றவன்போல் தோன்றுகிறது.

முதல் வீர :—ஹா! இதென்ன! மறுபடியும் கதாயுத்தம் ஆரம்பமாகிவிட்டதே! இப்போது பலமாகப் போடுகிறார்கள். பீமனுக்கோ அல்லது துரியோதனனுக்கோ.........

இரண்டாம் வீர:—இதோ பாருங்கள்! துரியோதனனுடைய தொடையில் பீமன் கதையால் ஓங்கி அடிக்கிறான்.

எல்:—ஹா! மஹாராஜா விழுந்துவிட்டார். தொடை முறிந்து விட்டது!

மூன்றும் வீ :—அடிபட்டு ரத்தம் கக்கி விழுகிற துரியோதனனைப் பார்த்து வியாசர் சட்டென்று எழுந்திருக்கிறார், பாருங்கள். பீமனால் தன் சிஷ்யன் அடிபட்டு விழுந்ததைக் கண்டு கோபமுற்ற பலராமரைப்பார்த்து வியாசர் கண்ஜாடையால் பீமனை அப்புறம் கொண்டு போகச் சொல்லுகிறார். இதோ கிருஷ்ணனும் பாண்டவர்களும் பீமனைச் சுற்றிக்கொண்டு அப்புறம் கூட்டிச்செல்கிறார்கள், பாருங்கள்!

முதல் வீர :—பீமன் அழைத்துச் செல்லப் படுவதைக் கண்டு பலராமர் கோபத்தோடு பார்ப்பவராய், மார்பிலுள்ள மாலையை பின்புறம் தள்ளி விட்டுக்கொண்டு வஸ்திரத்தைத் தூக்கிக் கட்டிக்கொள்கிறார், பாருங்கள்!

எல் :—வாருங்கள்! துரியோதன மஹாரா ஜாவைப் பார்ப்போம். என்ன நடக்கப்போ கிறதோ! [எல்லோரும் துரியோதனனும் பல ராமரும் இருக்குமிடம் செல்கின்றனர்.]

முதலங்கம் முடிவு

2-ம் அங்கம்.

பல :—(கோபத்துடன்) ஏ வீரர்களே! அர சர்களே! ஹா! என்ன அநியாயம் இது!! இந்த பீமனின் செய்கையைப் பார்த்தீர்களா! எதிரிகளின் உயிருக்கு யமனை என்னுடைய கலப்பையை, பீமன் மறந்துவிட்டான். என் னையும் மறந்துவிட்டான்! துரியோதனின் பிரி யத்திற்குப் பாத்திரமானவன் யான் என்பதை பீமன் அறியவில்லை. ஹா! இதோ பீமனல் அடிபட்டு இறக்கும் தறுவாயில் பூமியில் கிடக் கிறான் துரியோதனன்! (துரியோதனனைப் பார்த்து) ஏ துரியோதனா! ஒரு முகூர்த்த நேரம் உன் உயிரைத் தாங்கிக்கொள். உன் கண்ணெதிரிலேயே இதோ பயந்து ஓடும் பீமனை எனது கலப்பையாற் பிளந்து, உனக்கு முன்பே அவனை வீரசுவர்க்கம் அனுப்புகி றேன். (கோபத்துடன் கையோடு கையைத் தட்டுகிறார்.)

[திரைக்குள்]

பொறுத்துக்கொள்ளவேண்டும், பலராமரே! பொறும்!!

பல :—என்ன? என் கண்முன் பீமனல் துரியோதனன் வஞ்சிக்கப்படப் பார்த்திருப் பேனா? ஹா! அம்ருதம் கடைந்த காலத்தில் தேவர்களாலும் அசுரர்களாலும் கயிறாக உப யோகிக்கப்பட்டு பின்பு நகரமுடியாமல் விழு ந்து கிடந்த வாசுகி என்னும் பாம்பைப் போ லானான் துரியோதனன்! ஐயோ!

துரி :—(பலராமர் சொல்லைக் கேட்டு சற்று நகர்ந்து, அவரைப் பார்த்து வணங்கி) எனது குருவே, வணக்கம். பீமனல் அடிக்கப்பட்டு விழுந்து கிடக்கும் நான் இதோ உங்கள் பா தங்களை வணங்கி கேட்டுக்கொள்ளுகிறேன். முதலில் தாங்கள் கோபத்தை விட்டுவிடவேண் டும். யுத்தமோ முடிந்துவிட்டது! என்னு டைய வீர்யமும் அழிக்கப்பட்டது. எமது கௌரவ குலத்திற்குத் தர்ப்பணம் செய்யவா வது பாண்டவர்கள் காப்பாற்றப்படவேண்டும்.

பல :—என் மனம் சகிக்கவில்லை, துர்யோ தனா! கொஞ்ச நேரம் பொறு, பாண்டவப் பூண்டை ஒழித்துவிடுகிறேன்.

துரி :—ஹா! நீங்கள் என்ன காரியம் செய் யப் போகிறீர்கள்?

பல :—(கோபச்சிரிப்புடன்) யான் செய்யப் போவதையா கேட்கிறாய்? யான் ஒன்றும் செய்யப் போவதில்லை. எனது கலப்பையே உனக்குத் துணையாகப் பாண்டவர்களை சுவர் க்க யாத்திரைக்கு அனுப்பப்போகிறது.

துரி :—என் பிரியமுள்ள குருவே! வீராதி வீரரே! வேண்டாம், வேண்டாம். பீமன் அவன் செய்த சபதத்தை நிறைவேற்றிவிட் டான். இனி என்ன? யானும் போய்விட் டேன். என் ஸஹோதரர் நூற்றுவரும் போய்விட்டனர். இனி யாது செய்யினும் பலனில்லை.

பல :—துரியோதனா! இல்லை. என் முன் னையே நீ வஞ்சிக்கப்பட்டது எனக்கு ஸஹிக்க முடியவில்லை.

துர் :—பிரபோ! யான் பீமனல் வஞ்சிக்கப் பட்டேனென்று எண்ணுகிறீர்கள்?

பல :—அதற்கென்ன ஸம்சயம்?

துர் :—குருவே! யான் பீமனல் வஞ்சிக்கப் பட்டேன் என்றால், யான் ஒருபொழுதும் ஜயிக்கப்பட்டவனாக மாட்டேன். நீங்கள் எண்ணியது தவறு. யான் பீமனல் ஜயிக்கப் படவில்லை.

பல :—துரியோதனா! என்ன நீ பேசுவது ஸரியில்லையே! பின் நீ யாரால் வஞ்சிக்கப்பட் டாய்? பீமனாலே தான் வஞ்சிக்கப்பட்டாய் என்று நினைக்கிறேன்.

துரி :—(சிரித்துக்கொண்டு) ஹா! எவன் ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் என்னும் மூன்று தொழிலையும் செய்கிறானே, எவன் திருப்பாற் கடலில் சயனித்திருக்கிறானே, எவன் உம்முடைய தம்பியாக வேறுருவங்

கொண்டிருக்கிறானோ—அந்த ஸ்ரீகிருஷ்ணபகவானாலேயே நான் யமனுக்குத் தானம் செய்யப்பட்டேன். அவனாலேயே நான் ஜயிக்கப்பட்டேன்.

(திருதராஷ்டிரனும், காந்தாரியும் தேவிகளும் துர்ஜயனால் வழிகாட்டப்பட்டு துரியோதனனைத் தேடி வருகிறார்கள்.)

(திரையில் ஒரு சப்தம்.)

வழிவிடுங்கள்! வழிவிடுங்கள்!!

பலராமர் :—(திருதராஷ்டிரன் முதலியவர்கள் வருவதைப் பார்த்து) ஹா! என்ன பரிதாபகரமான காட்சி! இதோ கோலாஹலத்துடன் கண்ணும் கண்ணீருமாக, துடித்துக்கொண்டு கண்ணில்லாதவர்களாய் திருதராஷ்டிரனும், காந்தாரியும், துர்ஜயனால் வழி காட்டப்பட்டு வருகிறார்கள்! இதோ நூற்றுவரைப் பறிகொடுத்த தேவிமார்கள் அலறிக்கொண்டு வருகிறார்கள்! இக்கோரமான காட்சியைப் பார்க்கும்படியாயிற்றே! பிள்ளைகளிடம் பாகம் செய்து கொள்ளப்பட்ட கண்களையுடையவனும் ஆண் யானை போன்ற நடையுடையவனும் திருதராஷ்ரன் பிரலாபித்துக் கொண்டு வருகிறான்! ஐயோ! என்ன கஷ்டமிது!

(எல்லோரும் அருகில் வருகின்றனர்.)

திருதராஷ்டிரன் :—(அழுது கொண்டே) ஹே! துரியோதனா! எங்கிருக்கிறாய்?! என தருமைப் புத்திரா! எங்கிருக்கிறாய்!?

காந்தாரி :—(அழுகையும்) ஐயோ! துரியா? என்னை விட்டு எங்கு சென்றாய் நீ! எங்கிருக்கிறாய்?

தேவிகள் :—ஹா! ஆர்யசிம்மமே! எங்கிருக்கிறீர்? நாங்கள் என்ன கதி.........ஹா!

திரு :—என்ன கஷ்டம்! என் ஹிருதயமே வெடித்து விடும் போலிருக்கிறதே! ஐயோ! இதை விட ஒரு துக்கம் உலகில் உண்டா? ஐயோ, துரியோதனா?

காந் :—ஐயோ, இன்னும் எனது உயிர் போக வில்லையே! நான் மஹா துரோகி!

தேவி :—பிராண நாயகா! பிராண நாயகா!! ஐயோ! நாங்கள், என்ன கதி!...........மஹா வீரரே! வாய்திறந்து ஒரு வார்த்தை!.........

துரி :—(வருத்தத்துடன் படுத்தபடி) ஹா! என்ன கஷ்டம்! இது! இனி அழுவதால் பலன் என்ன? எனக்கு துக்கம் தாங்க முடியவில்லையே! ஹா! எனது ராஜஸ்திரீகள் அழுவதைப் பார்க்க என் மனம் வெதும்புகிறதே! பீமனால் கதை கொண்டு அடிக்கப்பட்டபோது அதனாலுண்டான வலியையும் க்ஷமாளித்து விட்டேன். ஆனால் எனது அந்தப்புர ஸ்திரீகள் யுத்தகளத்தில் வந்து பலர் முன்னிலையில் அழும் காட்சி, என்னுள்ளத்தை பிளக்கின்றது. இவர்கள் என்றைக்கும் அந்தப்புரத்தினின்றும் வெளிவராதவர்கள்! இன்று வரும்படியாயிற்று! அழும்படி ஆயிற்று! ஹா! இவ்வருத்தமானது பீமன் கதையடியைக் காட்டிலும் என்னை அதிகம் துன்புறுத்துகிறது!

திரு :—காந்தாரி! என்ன செய்கிறாய்! குலத்தின் மானத்தைக் காத்து புகழ் கொண்ட துரியோதனனை நீ பார்க்க வில்லையா?

காந் :—(அழுதுகொண்டு) பிரபோ! பார்க்க முடிய வில்லையே!

திரு :—துர்ப்பாக்கியவதி! எனக்குத்தான் என்றைக்கும் பார்க்கக்கொடுத்துவைக்கவில்லை. நீ ஏன் பார்க்கமுடியவில்லை! ஐயோ மானமும் வீரமும் கொண்ட நூறு பிள்ளைகளையும் பறிகொடுத்த எனக்கு ஒரு தடவையாவது பிள்ளை கையில் பூமியில் தர்ப்பணம் செய்ய கொடுத்து வைக்கவில்லை! என் விதியே இது!!

பலரா:—திருதராஷ்டிரா, பதிதர்மத்தின்படி கண்களை மறைத்துக் கட்டியவளாய் பிள்ளை பேரன்களை இழந்து பிரலாபிக்கும் காந்தாரியும் உன்னைப்போல் துர்ப்பாக்கியசாலியே!

காந் :—(மறைத்துக் கட்டிக் கொண்ட கண்களுடன்) புத்திரா துர்யோதனா! பதில் சொல்லடா? நூறு பிள்ளைகளைப் பறிகொடுத்த உன் தந்தையாரும் துர்ப்பாக்கியசாலியே! ஐயோ!

திரு :—துரியோதனா! உன்னுடைய பதினெட்டு அக்குரோணி சேனைகளையும் பறிகொடுத்துத் தன்னந்தனியே இருக்கின்றாயா? எங்கிருக்கிறாய?

துரி :—(படுத்தபடி) தந்தையே! இதோ கிடக்கிறேன்; தனியாகத்தானிருக்கிறேன்.

இன்னும் சிறிது நேரத்திற்கெல்லாம் பதினெட்டு அக்குரோணிகள் எங்கிருக்கிறதோ அங்கு போய் விடுவேன்.

திரு :—அடே வணங்காமுடிமன்னு? என்னை இப்பொழுதாவது நமஸ்கரி! என் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்.

துரி :—(அழுது கொண்டு எழுந்து திடீரென்று கீழே விழுகிறுன்.) ஹா! கஷ்டம் எழுந்துவர முடியவில்லை. இது இரண்டாம் முறை. பீமனல் என் தொடை முறிக்கப்பட்டதல்லாமல், எனது தந்தையையும் பெரியோர்களையும் நமஸ்கரித்து ஆசீர்வாதம் பெறும் நன்மையும் அபகரிக்கப்பட்டது! யான் அனுதையானேன், தந்தையே!

காந் :—ஏ! துர்யோதன பத்நிகளே! கணவனை சரணுகதியாக அடையுங்கள்.

தேவி :—அம்மா! (அழுகையுடன்) பிராணநாதா! அடைக்கலம். (துரியோதனன் பாதத்தில் விழுகிருர்கள்.)

திரு :—என்னுடைய வஸ்திரத்தைப் பிடித்துக்கொண்டு வழிகாட்டுபவன் யார்? எந்த வீரன்? நாமதேய மென்ன?

துர்ஜ:—(சிரித்துக்கொண்டு) தாத்தா! நான் தான் பேரன் துர்ஜயன்.

திருத :—பேரா! உன் அப்பாவைப் பார்த்தாயா?

துர்ஜ :—பார்க்கவில்லை தாத்தா! ஆனல் இப்போது நான் மிகவும் களைப்படைந்திருக்கிறேன்.

திருத :—துர்ஜயா! ஆனல் அப்பாவின் பக்கல் உட்கார்ந்து களைப்பாறு.

துர்ஜ:—ஸரி, தாத்தா. நான் போய் களைப்பாறுகிறேன். (துரியோதனனிடம் போகிறுன்.)

துரி :—(துர்ஜயனைப் பார்த்துவிட்டு) கஷ்டமே! இவன்கூட வந்துவிட்டானு? ஐயோ! எல்லா வருத்தத்தையும்விட புத்திரவாஞ்சை என்னை அதிகமாகக் கொளுத்துகிறது. துக்கமே தெரியாதவனுயிற்றே! இவனேன் இங்கு வரவேண்டும். ஐயோ!

துர்ஜ :—அப்பா! ஏன் இந்த அலங்கோலத்துடன் பூமியில் படுத்திருக்கிறீர்கள்?

துரி:—குழந்தையே! நீயேன் இங்கு வந்தாய்?

துர்ஜ :—அப்பா! தங்களைக் காணும் விருப்பத்தால் வந்தேன்.

துரி :—இப்பொழுது பார்த்துவிட்டாய். ஐயோ! என்ன பாபம் செய்தேன். இதோ புத்திரவாஞ்சை என்னை விட்டுப் பிரிகிறது.

துர்ஜ :—அப்பா! எனக்கு களைப்பாயிருக்கிறது. உங்கள் பரந்த மார்பில் உட்கார்ந்து சற்று களைப்பாறுகிறேன். (துர்யோதனன் மார்பில் ஏறுகிறுன்.)

துரி:—(தடுத்து) என்ன விபரீதம்! துர்ஜயா, வேண்டாம். நீ எனக்குப் புத்திரனு? ஐயோ! காலத்தால் எல்லாம் மாறுபாடடைகிறது. தண்ணீர் சுடுகிறது; சந்திரன் நெருப்பாகிறுன்; உறவினர் பகைவர்களாகிறுர்கள்! உண்மைத் தோற்றமே இது! குழந்தையான என் புத்திரனும் எனக்கு விபரீதம்! ஹா! ஹா!! (தன் தலையிலடித்துக் கொள்கிறுன்.)

துர்ஜ :—(எழுந்திருந்து) அப்பா! ஏன் என்னை இவ்விதம் தடுத்து வருத்தமாகப் பேசுகிறீர்கள்?

துரி :—இன்றுமுதல் என்னை மறந்துவிடு. தாத்தாவின் மடியில் போய் உட்கார்ந்து கொள்; நான் வேறிடம் போகிறேன்.

துர்ஜ :—எங்கு போகப்போகிறீர்கள், தந்தையே?

துரி:—உன் சித்தப்பா தொண்ணூற்றொன்பது பேரும் எங்கு போயிருக்கிறுர்களோ அங்கேதான் போகிறேன்.

துர்ஜ :—தந்தையே! நானும் சித்தப்பாக்களைப் பார்க்க வருகிறேன்; என்னையும் அழைத்துச் செல்லுங்கள்.

துரி :—குழந்தாய்! பீமனிடம் போய்ச் சொல்லப்பா.

(378-ம் பக்கம் பார்க்க.)

கீதப் பகுதி

*சங்கீதம் எனக்கு பிடிப்பதேன்?

(R. ஸ்ரீநிவாஸன் M.A.,)

உலகில் உள்ள எல்லோரையும் ஈடுபடுத்தும் சக்தி சங்கீதத்திற்கு உண்டு. ஆனால் பற்பல பேர்கள் அதைப் பற்பல விதங்களில் அனுபவிக்கிறார்கள். "லோகோபின்னருசி:" அதாவது: "வெவ்வேறு நோக்கங்களையுடையது இவ்வுலகம்" என்கிற விஷயம் சங்கீத உலகிற்கும் உரியதே. "ஒரு சங்கீதக் கச்சேரிக்கு வருகிறவர்கள் எதற்காக வருகிறார்கள்? எதை மிகவும் அனுபவிக்கிறார்கள்? அந்தக் கச்சேரியின் பலவித பாகங்கள் அவர்களை எப்படி எப்படித் தாக்குகின்றன?" என்பதை கவனிப்போமானால், பல விஷயங்கள் வெளியாகும். நம்முடைய கர்நாடக சங்கீதக் கச்சேரிகளில் பெரும்பாலும் ஜனங்கள் விரும்புவது கீர்த்தனைகளே. ராகம், லயம், சாகித்தியம், பக்திரசம் முதலியவைகள் கீர்த்தனைகளில் அடங்கி இருக்கின்றன. ஆனால் சில பண்டிதர்கள் ஒரு கச்சேரியை அனுபவிப்பது தங்களுடைய அறிவினாலே (Intellectual) தான் என்பதையும் கான்கிறோம். அவர்கள் எப்பொழுதும் குற்றம் கண்டு பிடிப்பதிலேயே உஷாராயிருப்பார்கள். அவர்களுக்கு அபூர்வ ராகங்களின் ஆலாபனைகள், கஷ்டமான தாளங்களில் பல்லவிகள் முதலியவைகள்தாம் திருப்தியைக் கொடுக்கும். இன்னும் பலர் ஒரு கச்சேரியின் கடைசியில் பாடப்படும் சில்லறைத் துக்கடாக்களை எதிர்பார்த்துக்கொண்டு இரண்டு மணி நேரம் மிக்க சிரமத்துடன் உட்கார்ந்துகொண்டு இருப்பார்கள். மற்றும் சிலர் மிருதங்கம் கிஞ்சிரா, முதலிய தாளவாத்தியங்களையே மிகவும் அனுபவிப்பதுமுண்டு.

இவ்வெல்லாக் காரணங்களைக் கொண்டு நான் சங்கீதத்தை அனுபவித்தாலும் எனக்கு சங்கீதத்தில் உள்ள பற்றுதல் இவைகளை எல்லாம் கடந்து, சங்கீதத்தில் அந்தர்லயமாயிருக்கும் அதனுடைய விசேஷ தன்மையைக் கொண்டுதான். பண்டிதனானாலும் பாமரனானாலும், குழந்தையானாலும் வயோதிகனானாலும், மிருகமானாலும் மனிதனானாலும், சகல ஜீவராசிகளுடைய இருதயத்தைத் தாக்கி

* இது 9-5-1940 அன்று, திருச்சி அகில இந்திய ரேடியோ நிலையத்தில் பேசப்பட்டு, அனுமதி அச்சிடப்பட்டது.

ஒரு விதமான நுண்ணிய உணர்ச்சியை எழுப்பும் திறன் சங்கீதத்திற்கே உரியது. ஒரு பாட்டுக் கச்சேரி இவ்வித உணர்ச்சியைக் கொடுக்க முடியாவிட்டால், அதில் ஏதோ குறை இருக்கிறது என்பது நிச்சயம். சங்கீதம் முதலிய பலவித கலைகள் மூலமாக ஒரு மனிதனுடைய அந்தரங்க அனுபவங்களைத் தெளிவாக வெளியாக்கலாம். ஒரு மனிதனின் இந்திரியங்கள் மனம் முதலியவைகளைக் கடந்து அவனது ஆத்மாவில் ஆழ்ந்துகிடக்கும் சில சூக்ஷ்ம அநுபவங்களை வெளிப்படுத்துவது இக்கலைகளைக் கொண்டு சாத்தியமாவதைப்போல் வேறு வழிகளால் முடியாது. நமது எண்ணங்களைச் சொற்களைக் கொண்டு வெளியிடுவதுபோல், நமது ஆத்மீகமான நுண்ணிய அனுபவங்களை வெளியிடுதலே சங்கீதத்தின் தனிப் பெருமை. அவ்வனுபவங்கள் வாக்கையும் மனதையும் கடந்திருப்பதால் அவைகளை ஒவ்வொருவரும் தாம் தாம் உணர வேண்டுமேயல்லாது வேறொருவர் சொல்லி அனுபவிப்பது கஷ்டம். இவ்விதம் நன்கு வெளிப்படுத்த முடியாத சூக்ஷ்மமான அவாங்மனஸகோசரமாய் இருக்கும் அனுபவமே இந்திய சங்கீதத்தினுடைய விசேஷப் பெருமையாகும்.

"பசுர்வேத்தி சிசுர்வேத்தி வேத்தி கானரஸம் பணி:" என்ற மூத்தோர் மொழியை நாம் கேட்டிருக்கிறோம். அது மிகவும் உண்மையானது. களங்கமற்ற உள்ளமுடைய பசு, குழந்தை ஆனாலும் சரி, குரூர சுபாவமுடைய பாம்பு, புலி முதலியவையானாலும் சரி, இசையின் இனிமையில் ஈடுபடும். ஒரு தாலாட்டு ஒரு குழந்தையைத் தூங்கச் செய்யாமற் போனால், அத்தாலாட்டின் இசையில் ஏதோ குறை இருக்கிறது என்பது திண்ணம். அம்மாதிரியே ஒரு வித்வான் நாகசுரத்தைக் கொண்டோ, புல்லாங்குழலைக் கொண்டோ கோபத்துடன் சீறிப் படமெடுத்தாடும் ஒரு கோர சர்ப்பத்தின் ஆவேசத்தை அடக்கமுடியாமற் போனால், அவன் தன் இசையைச் சீர்திருத்திக்கொள்ள வேண்டுவது அவசியம். அதுபோலவே ஒரு சங்கீத வித்வான் தன் கச்சேரி கேட்க வருபவரில் பெரும்பான்மையோரைச் சந்தோஷப்படுத்த முடியாமற்போனால், அவன் தன் சங்கீதத்திலோ அல்லது கச்சேரி நடத்தும் முறையிலோ குற்றம் உண்டு என்பதை உணர்ந்து அவைகளைச் சீர்திருத்த வேண்டுவது அவசியமே. நமது சங்கீதம் பிரம்மாவினிடத்திலிருந்து உற்பத்தியாகி, ரிஷிகள் மூலமாக உலகில் பரவிற்று என்பதுபோன்ற கதைகளை நீங்கள் கேட்டிருப்பீர்கள். எனக்கு சங்கீதத்தில் உள்ள விருப்பத்திற்கும் இக் கதைகளுக்கும் விசேஷ சம்பந்தமில்லை. நான் இப்படிச் சொல்வதனால் எனக்கு இக் கதைகளில் நம்பிக்கை இல்லை என்று நினைக்கக்கூடாது. நான் சற்று முன்பு கூறிய மாதிரி, நமது சங்கீதத்தில் நிறைந்திருக்கும் அதீந்திரிய அனுபவமே என் அவாவிற்கு ஆதாரம். இவ்வுலகத்தில் எல்லாவற்றிற்கும் அடிப்படையாய் இருப்பது ஸ்பந்தனங்களே (சலனங்களே) என்று தத்துவஞானிகள் கூறியுள்ளனர். ஒரு அளவிற்குள் அமைந்த ஸ்பந்தனங்களே நம் புலன்களால் அறியக்கூடியவை. சில ஸ்பந்தனங்கள் ஓசையாகவும், மற்றும் சில ஒளியாகவும், வேறு சில வேறு உணர்ச்சிகளாகவும், இந்திரியங்களுக்குப் புலப்படுகின்றன. சப்தரூபமாக நாம் உணருகின்ற சங்கீதம் நம்முட் புகுந்து இந்திரியங்களைக் கடந்து நிற்கும் மனம், புத்தி, ஆத்மா முதலிய விபாகங்களைத் தாக்கி அதன் மூலமாக ஆத்மீக உணர்ச்சிகளை எழுப்புகின்றது. இந்திரியங்களுக்கு யாதொரு சம்பந்தமும் இல்லாததாகக் கருதப்படும் சில உணர்ச்சிகளை ஒரு மனிதன் இந்திரிய அனுபவ மூலமாக அடைவது அனுபவ சித்தாந்தமான விஷயம். மனிதன் கேவலம் இந்திரியங்கள் மட்டுமல்ல; நமது ஸ்தூல சரீரம் நம்மில் ஒரு மிகச் சிறிய பாகமேயாகும். மனிதனுக்கு நாம் கண்ணால் காணும் சரீரத்தைத் தவிர காமம், மனம், விக்ஞானம், புத்தி முதலிய பல பாகங்களுண்டு. இவைகளை நன்கறிவது சாதாரண மனிதனுக்கு சாத்தியமில்லாமல் இருந்தாலும், புத்தியுள்ளவர்கள் ஒரு மனிதனுடைய ஜீவியத்தில் இவைகளுக்கு உள்ள உயர்ந்த ஸ்தானத்தை அறியலாம்.

ஒரு மனிதனுடைய எண்ணங்களைச் சொற்களைக் கொண்டு வெளியிடுவதற்கும் மனோபாவங்களை சங்கீத மூலமாக வெளியிடுவதற்கும் நிரம்ப வித்தியாசம் உண்டு. சொற்கள் சம்பிரதாயத்தைச் சார்ந்தவை. ஒரே விஷயத்தைப் பற்பல பாஷைகளில் பற்பல சொற்களைக் கொண்டும் சில சமயத்தில் ஒரே பாஷையில்

வெவ்வேறு சொற்களைக்கொண்டும் வெளிப்படுத்துகிறோம். நாம் சொற்களை உபயோகிக்கும் போது கேட்பவர்களுக்கு அறிந்தோ அறியாமலோ தவறான அபிப்பிராயங்களைக் கொடுக்க நேரிடலாம். ஆனால் சங்கீத மூலமாக வெளிப்படும் மனோவிகார உணர்ச்சி அத்தகைய தவறுதலுக்கு ஒருகாலும் இடங்கொடாது. ஆகையால் ஒரு மனிதனுடைய அந்தரங்கத்தை சங்கீத மூலமாக அறிவது சொற்கள் மூலமாக அறிவதைக்காட்டிலும் சிறந்ததாகவும் உண்மையாகவும் இருக்கும். இதற்கு ஒரு உதாரணம் கூறுகிறேன். ஒரு மாம்பழத்தின் தன்மையை வெளிப்படுத்துவதற்கு பல விதமான வார்த்தைகளை உபயோகிக்கலாம். வார்த்தைகள் செவிகளுக்கு வெவ்வேறு ஒலிகளாக தோன்றுகின்றன. ஆனால் மாம்பழத்தின் சாற்றை அருந்துவது எப்படி ஒரேவிதமான அனுபவத்தை எல்லோருக்கும் கொடுக்குமோ அதே மாதிரி சங்கீதத்தால் வெளிப்படுத்தப்படும் மனோபாவங்கள் ஒரே விதமான உண்மையான அனுபவத்தை எல்லோருக்கும் கொடுக்கும். இது கவனிக்கத்தக்க விஷயமாகும். ஒரு மனிதனுடையவோ அல்லது தேசத்தினுடையவோ ஆத்மாவின் உண்மையான நோக்கம் அதனுடைய கலைகளின் மூலம் தான் நன்கு விளக்கப்படும். ஒரு தேசத்தில் கலைகளைக் கொண்டு அத்தேசத்தின் ஆத்மாவுடைய உண்மையான நிலையை அறியக்கூடும். ஆகையால் அத்தேசத்தின் சங்கீத முறையை மாற்றினோமானால் அதனுடைய பிரத்தியேக நோக்கங்கள் மாறவும் கூடும். இக்காரணம்பற்றியே ப்ளேடோ (Plato) என்ற கிரேக்க தேசத்து தத்துவஞானி கூறியிருப்பதாவது: "ஒரு தேசத்தினுடைய இசைமுறையை மாற்றுவதாயிருந்தால் மிகவும் ஜாக்கிரதையாகச் செய்ய வேண்டும்; ஏனெனில், அப்படிச் செய்வதால் அத் தேசத்தின் செழிப்புக்கு ஆதாரமாயிருக்கும் ஸ்தாபனங்கள் மாறுபடக்கூடும்.'' உயர்ந்த கர்நாடக சங்கீதத்தை நான் கேட்கும் போது நமது தாய்நாட்டின் ஜீவனோடு கலந்து கொண்டு அவ்வன்னையின் அனுபவங்களை நான் அனுபவிப்பதுபோல் வெகு தடவைகளில் உணர்ந்திருக்கிறேன். நம்முடைய விசேஷத் தனிமையை வெளிப்படுத்தும் ராக ஆலாபனை முறையில் இந்திய நோக்கத்திற்கு ஆதாரமாய் விளங்கும் பரலோகப் பற்றுதலும், மனிதனுள் ஈசன் பிரகாசிக்கிறான் என்ற கொள்கையும் சூசிப்பிக்கப்படுகின்றன. மனிதன் உண்மையில் ஈசனே. தான் ஈசன் என்பதை தானே அனுபவிக்கக்கூடும். இவ்வுலகில் காணும் மற்றவைகள் எல்லாம் இவ்வுணர்ச்சியைப் பெற உதவிகளேயாகும். அம்மாதிரியாகவே நமது சங்கீதத்தில் பாடகன்தான் தலைவன். அவனைப் பின்பற்றியே மற்ற வாத்தியங்கள் நிற்கின்றன. சங்கீத வித்வான் தன்னுடைய மனோதர்மத்தைக் கொண்டு ஒரு சங்கீதப் பிரபஞ்சத்தை சிருஷ்டிக்கக் கூடும். அதில் லயித்து ரமிக்கக்கூடும். இவ்விதம் தடை இல்லாமல் ஓங்கும் மனோதர்மம் பிரகாசிப்பது நமது இந்திய சங்கீதத்தின் தனிப் பெருமையாகும்.

ஒரு மனிதனுடைய மனோவிகாரங்களை வெளிப்படுத்த சங்கீதத்தைவிட உயர்ந்த வழியைக் கைப்பற்றுவது அரிது. மனோபாவங்களை சாஸ்திரக்ஞர்கள் சௌகரியத்திற்காக சில வகுப்புகளாக பிரித்திருந்தாலும் ஒரு கிலுப்தமான முறையில் அவைகளை வகுப்பது கடினம். சில பொதுவான வித்தியாசங்களையே நாம் உணர முடியும். வார்த்தைகள் கொண்டோ, அபிநயம் கொண்டோ நன்கு வெளிப்படுத்த முடியாத சில நுண்ணிய மனோவிகாரங்களை சங்கீதத்தைக்கொண்டு வெளிப்படுத்த முடியும். சாந்தி, பிரபத்தி (சரணமடைதல்) முதலிய பாவங்களை சங்கீதத்தின் உதவியில்லாமல் வெளிப்படுத்துவது கடினம் என்பது என்னுடைய அனுபவம். ஆன்றோர்கள் கூறியிருக்கும் நவரசப் பிரிவுகளை நாம் ஒப்புக்கொண்டாலும் சரி, ஒப்புக்கொள்ளாவிடினும் சரி, சிற்சில ராகங்கள் சிற்சில மனோவிகாரங்களை எழுப்புவதற்கு அனுகூலமாய் இருக்கின்றன என்பதில் சந்தேகமில்லை.

இன்னும் பொது ஜனங்களால் அறியப்படாத சில விசேஷ குணங்கள் சங்கீதத்தில் காணப்படுகின்றன. இக்காலத்தில் நிறங்களைக் கொண்டு சில வியாதிகளை தீர்க்க முடியும் என்பதை நாம் கேட்டிருக்கிறோம். சில பைத்திய ஆஸ்பத்திரிகளில் சில புத்தி மாறாட்டங்களுக்கு நிறங்களை உபயோகப்படுத்தலாம் என்பதைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். அதே மாதிரி பலவித இசைகளைக் கொண்டு சில

வைத்தியங்களுக்கு அநுகூலம் ஏற்படக்கூடும் என்று எண்ணுவதில் ஒரு தவறும் இல்லை. சாதாரண நிலையை விட்டு அசாதாரண நிலையில் இருப்பதுதான் வியாதி என்று கூறப்படுவது. அசாதாரண நிலையை சாதாரணமாக்குவதுதான் வைத்தியம். அசாதாரணத்தை நீக்குவதற்கு சங்கீதத்தை உபயோகப்படுத்தலாம் என்பது என் கருத்து. சங்கீத அபிமானிகளும், சங்கீத வித்வான்களும் உற்சாகத்துடன் ஆராச்சி செய்யத்தகுந்த விஷயம் இது. ஒரு வைத்திய ஆஸ்பத்திரியில் 'தோடி' வார்டு, 'கல்யாணி' வார்டு, 'மோகனம்' வார்டு, என்கிறமாதிரி பல வார்டுகள் ஏன் இருக்கக் கூடாது? மேற்கூறிய ராகங்களைக்கொண்டு மாற்றக்கூடிய சில மனோவியாதிகள் உண்டென்று நாம் ஊகிக்கலாம். அடக்கமுடியாத பதட்டமுடைய பைத்தியக்காரர்களை ஒருவாறு 'நீலாம்புரி', 'எதுகுலகாம்போஜி' முதலிய ராகங்களைக் கொண்டு சாந்தப்படுத்த முடியும். அதேமாதிரி உற்சாகமில்லாமல் ஓய்வால் வருந்தும் சிலருக்கு 'அடாணா', 'பியாகட', முதலிய ராகங்களின் உதவியால் ஒரு புதிய உணர்ச்சியை உண்டாக்க முடியலாம். இது ஆராய்ச்சிக்கு தகுந்த ஒரு பெரிய விஷயம்.

கட்டுக்கடங்காதே சேஷ்டை யுடைய சுபாவங்களைச் சமனப்படுத்துவதில் இசைக்குள்ள திறத்தைக் காட்டுவதற்கு நான் ஒரு உதாரணம் கூறுகிறேன்; மாண்டிஸோரி என்ற புகழ் பெற்ற சீமாட்டி நடத்தும் பள்ளிக்கூடங்களில் ஒன்றில் ஒரு வகுப்பு மிகவும் துஷ்டத்தனம் உள்ளதாய் இருந்தது. அவ்வகுப்பில் உபாத்தியாயன் அவ்வகுப்பிற்கு சங்கீதமும் நடனமும் படிப்பித்தான். கொஞ்ச காலம் சென்றபின் அவ்வகுப்புக் குழந்தைகள் நல்ல ஒழுக்கத்துடன் இருப்பதைக் கண்டான். அவ்வகுப்பிலுள்ள ஒரு குழந்தையை நோக்கி 'நீ ஏன் இப்பொழுது முன்மாதிரி குதிப்பதில்லை' என்று கேட்டதற்கு அக்குழந்தை பதில் கூறியதாவது:—"குதிப்பது அழகாயில்லையே." குழந்தையின் இச்சிறு பதிலில் சங்கீதத்திற்கு உள்ள திறன் நன்கு வெளிப்படுகிறது.

மேலும் நம்முடைய சங்கீதத்தில் ஒரு தனிப்பெருமை, ஒரு தனி அழகு, ஒரு பிரத்தியேக ஆத்மீக சக்தி உண்டு என்பதை உணருவது கஷ்டமல்ல. கொஞ்சம் நமது செவிகளைப் பயிற்சி செய்வோமானால் இதை நன்கு உணரலாம். தன்னை மறந்து ஆழ்ந்த ஆனந்தத்தை அனுபவிக்கத் தகுந்த வழி இதுவே. நாலு ஐந்து மணி நேரம் நடக்கும் பாட்டுக்கச்சேரிகளை முழுவதும் கேட்டு நேரம் ஆனதை அறியாமல் இருந்திருக்கிறேன். அப்பொழுது எங்கே இருக்கிறேன், இவ்வளவு நேரம் ஆயிற்று என்கிற உணர்ச்சியே கிடையாது. கச்சேரி முடிந்து இவ்வுலக ஞாபகம் வரும்போது எங்கேயோ சுவர்க்கத்திலிருந்து கீழே தள்ளப்பட்டதுபோல் உணர்ந்ததுண்டு. இவ்வித அனுபவம் நான் வேறொன்றிலும் அடைந்ததில்லை. சங்கீதம் நம்முடைய ஆத்மாவை உயர்தர நிலைக்குப் பக்குவப்படுத்துகிறது. அதனுடைய இனிமைக்கு நாம் ஈடுபட்டு இருக்கும்போது நம்முடைய சுபாவம் ஒரு வித விரிவையும் அமைதியையும் அடைகிறது. அப்பொழுது ஈசன் அருள் நம்மேல் பொழிந்து, நம்முட் கலந்து நம்மைப் பரிசுத்தமாக்க வழி ஏற்படுகிறது. ஒரு உண்மையான உயர்தர கச்சேரியைக் கேட்டோமானால் ஒருவித மன எழுச்சியும் ஆனந்த உணர்ச்சியும் ஏற்படும். இக்காரணங்களைக் கொண்டே நான் சங்கீதத்தை அளவற்ற அன்புடன் விரும்புகிறேன், போற்றுகிறேன், அதற்கு அடிமையாகிறேன், அதைத் தெய்வம் என்று கொண்டாடுகிறேன்.

*வாத்யேச்வரீ வீணை.

(டாக்டர் வே. ராகவன்.)

1.

ஸத்யலோகத்தில் ப்ரம்மதேவரின் அந்தப்புரம்; ஸரஸ்வதீ தேவி ஏதோவொரு வாத்யத்தை வைத்துக் கொண்டு, அதனுடைய தந்திகளை இரண்டு மீட்டு மீட்டுகிறாள்; நல்ல கார்வையோடு தந்திகளின் நாதம் சுழலுகிறது. அப்பொழுது அவளுடைய புதல்வர் நாரதர் வருகிறார்.

நாரதர் :—என்ன இது, இதுவரையிலும் நாம் கேளாத இனிமையோடு ஸ்வரங்கள் மிகவும் அழகாய் எங்கிருந்தோ ஒலிக்கின்றனவே? நாம் இதுகாறும் கேட்டு வந்த சாரீரங்களிலிருந்து எழும்பும் இசைபோல் இல்லாமல் தனித்ததோர் சக்தியையல்லவா இது உடைத்தாயிருக்கிறது! சற்றுக் கேட்போம்.

(ஸரஸ்வதீ மேலும் தனது தந்த்ரீவாத்யத்தில் கொஞ்சம் வாசிக்கிறாள்; நாரதர் ப்ரமித்துக் கேட்டுக்கொண்டு நிற்கிறார்; பிறகு அன்னையை அணுகிக் கேட்கிறார்.)

நா :—(தனக்குள்) இதென்ன அற்புதமான புது விசையென்று அன்னையைக் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும். (வெளிப்படையாக) அம்மா!

(ஸரஸ்வதீ தன் மைந்தன் ஸங்கீதாசார்யர் நாரதர் வந்திருப்பதைப் பார்க்கிறாள்.)

சரஸ்வதீ :—நாரதா வா, வா; உன்னைத்தான் நினைத்துக் கொண்டிருந்தேன்; நீ தான் சிரஞ்சீவி.

நா :—நான் சிரஞ்சீவிதான் அம்மா! எனக்கு அழிவு ஏது? அதுவும் உன்னிடம் முன் நாத வித்தியாமிர்தத்தை நான் பருகினபிறகு எனக்கு அழிவின்மை ஸித்தித்து விட்டது. ஆனல், இதோ புதிதாய் ஒரு ஆச்சர்யமான இசையை உண்டுபண்ணிக் கொண்டிருக்கிறாயே, இதென்ன?

ஸர :—நாரதா! நேற்று உன் தந்தையான ஹிரண்யகர்ப்பர் பதஞ்சலி மஹரிஷிக்கு யோக ரஹஸ்யங்களை உபதேசித்துக் கொண்டிருக்கையில் அனாஹத நாதாநுஸந்தானம் என்ற நாதோபாஸனையை விளக்கிக்கொண்டிருந்தார். அப்பொழுது ப்ரபஞ்சத்தில் வெளியில் கூக்குரலாய் நாற்புறமும் எழும் விகாரமான சத்தங்களிலிருந்து செவியை விலக்கி உள்ளே அனாஹதமாயிருக்கும் நாதத்தில் மனதை ஏகாக்கிரமாய் வைத்தனுபவித்தால் முதலில் ஸமுத்திரத்தின் கம்பீரமான கோஷத்திலாரம்பித்து கடைசியில் மெல்லிய தந்திகளிலிருந்து எழும் நாதமாயும் அதன் பிறகு கேவலம் வண்டுகள் முனகும் இசைபோலும் நாதானுபவம் ஏற்படும் என்று சொன்னர். அதைக் கேட்ட பிறகு தந்திகளைக் கொண்டு இந்த இசைக் கருவியொன்றை உற்பத்தி செய்து அதில் நல்லிசையை ஸாதனஞ் செய்து கொண்டிருக்கிறேன். (ஒரு மீட்டு மீட்டி ஒரு இழுப்பு இழுக்கிறாள்).

நா :—ஆகா! என்ன கார்வையோடுகூடிய நாதம்! இந்த வாத்திய அதிசயத்திற்கு என்ன பெயரிடப் போகிறாய் அம்மா?

ஸர :—இது வீணை! தந்த்ரீவாத்யம்; கம்பிகளையும் நரம்புகளையும் இழுத்துக்கட்டிய வாத்தியமாதலால், ததம் என்றும், நரம்புக் கருவி யென்றும் பெயர்.

நா :—இது கழுத்தை நீட்டிய ஆமையைப் போல அமைந்திருக்கிறதேயம்மா!

ஸர :—ஆமாம், இதற்குக் கச்சபீ வீணை யென்று பெயர்.

நா :—ஸரி, ஆனல் இதன் நாதம் மிகவும் மெல்லியதா யிருக்கிறது. நான் இனி இது மாதிரி ஒரு வாத்தியத்தோடு சேராத வாட்

---

* இது 22–4–40 அன்று சென்னை அகில இந்திய ரேடியோ நிலயத்தில் போடப்பட்டு அனுமதியுடன் அச்சிடப்பட்டது.

டுப் பாட்டுப் பாடமாட்டேன். தந்தியில் கலக்கும் சாரீர இனிமை என்னமாயிருக்கும் என்று நான் மனதிற்குள் ஊகித்துக் கொண்டு விட்டேன்.

ஸர:—இது என் சாரீரத்திற்கு எடுத்தது; நீ உன் சாரீரத்திற்கு ஏற்பச் செய்து கொள்ளேன்.

2.

தேவலோகத்தில் ஓரிடம்; நாரதர் ஒரு வீணையை மீட்டி வாசித்துக் கொண்டும் பாடிக் கொண்டும் இருக்கிறார். 'ஸ்ரீஸரஸ்வதீ நமோஸ்துதே' என்ற கீர்த்தனம்; கீர்த்தனத்திற்கு முன் கொஞ்சம் ஆரபியில் ஆலாபனமும் தானமும். கீர்த்தனம் ஆரம்பித்துப் பல்லவி மட்டும் பாடி வாசித்ததும் தம்புருவின் ப்ரவேசம்.

நா:—யாரது, தும்புருவா! தும்புரு, இதைப் பார்த்தயா! இது "மஹதீ" என்று நான் செய்த வீணை. நேற்று என் மாதா ஸரஸ்வதீ எனக்கு இந்த தந்த்ரீவாத்யத்தின் உபதேசத்தை செய்து வைத்தாள்.

தும்புரு:—இனி எப்பொழுதுமே பாடுபவருடைய குரல் இந்த தந்தியின் நாதத்தோடு சேர்ந்தே பாடவேண்டுமென்று எனக்குத் தோன்றிவிட்டது, நாரதா.

நா:—ஆமாம், நீ அதற்கு ஏற்ப உன் பெயருடையதாய் ஒரு தந்திவாத்தியத்தை ஏற்பாடு செய், தும்புரு.

தும்:—முதலில் 'கலாவதீ' என்று ஒரு வீணை செய்தேன்; ஆனாலும் தும்புருவாகிய நான் செய்த தம்புரு வாத்தியத்தை சுருதிக்கு வைத்துப் பாடாத பாட்டெல்லாம் இனிப் பாட்டே இல்லை என்று செய்வதற்காக மற்றொரு சுருதி வீணையையும் இதோ செய்கிறேன்.

(தம்புராவின் மீட்டு மாத்திரம் சிறிது நேரம் ஒலித்துக் கொண்டிருக்கவேண்டும்.) நாரதரே!

நா:—யாரது? ஓகோ, இதென்ன மஹரிஷிகள் அனேகம் பேர் வந்து கொண்டிருக்கின்றனர்!

ஒரு மஹரிஷி:—நாரதரே, நீர் மஹதீ யென்றொரு வீணை செய்து வாசித்துப் பாடி வருவதாகக் கேள்வியுற்றோம்; நாம் ப்ரம்ம தேவரையும் ஸரஸ்வதீ தேவியையும் தரிசனஞ் செய்யப்போயிருந்தபோது அங்கும் ஸங்கீத தேவதை உன் அன்னையிடம் இந்த வாத்தியத்தைப்பற்றி உணர்ந்தோம். அதன் மேல் நாம் செய்த வீணை இது; 'ஏக தந்த்ரீ' என்று பெயர்.

மற்றொரு ரிஷி:—நாரதரே! இது நான் செய்தது, இரண்டு தந்திகளுடையது; 'நகுலீ' என்று பெயர் வைத்தேன்.

மூன்றாம் ரிஷி:—இது ஏழு தந்தியுள்ளது; 'சித்ரா' என்றும் 'பரிவாதினீ' என்றும் பெயர் வைத்துக் கொள்ளலாம்.

மற்றவர்கள்:—(ஒவ்வொருவராக) இது என்னுடைய கற்பனை, விபஞ்சீ—மத்தகோகிலா, இதில் 21 தந்திகள் போட்டிருக்கிறேன்!

(பற்பல வகையாய் தந்தி நாதங்கள் சிறிது நேரம் சேர்ந்து வாசிக்கப்படும் கோஷம்.)

மஹரிஷிகளே, நகருங்கள், கின்னரர்களின் அரசன் நாரதரைக் காண வருகிறான்.

நாரதர்:—கின்னர அரசே, வரவேண்டும். நீயும் ஏதாவது வீணை யுண்டுபண்ணிக்கொண்டு வந்திருக்கிறாயா என்ன?

கின்னர ராஜன்:—இது மூன்று குடமுள்ளது; கின்னரீ என்று எங்களுடைய பெயரையுடையது.

(இப்படி ரிஷிகள் கூடி வீணாகான கோஷ்டியிலிருக்கும் போது ஜைமினி மஹரிஷி வந்து மிகவும் கோபித்தவராய் ஒரு பக்கம் நிற்கிறார்.)

நா:—ஜைமினே, ஏன் இப்படி கோபப்பட்டுக் கொண்டு தனித்து நிற்கிறீர்? நல்ல கான ரஸம் பிரவாஹமாய் பெருகுகிறது, அனுபவிக்கக் கூடாதா?

ஜைமினி:—நாரதா, நீ எப்பொழுதும் நல்வழியிலிருப்பவரின் புத்தியைக்கலக்கி விடும் குறும்பன். இப்படி மஹரிஷிகளுக்கு ஆளுக்கொரு சுரைக்காய் வாத்திய மொன்றைக் கொடுத்து அவர்களனைவரையும் யாகாதி கர்மங்களிலிருந்து விலகும்படி செய்து விட்டாயே!

நா :—(சிரித்துக் கொண்டு) ஜைமினே! ரிஷிகள் மட்டுமல்ல, இனி ஒருவரும் அக்னிஷ்டோமமோ, வாஜபேய, பௌண்டரீகாதி யாகங்களோ சிரமப்பட்டுச் செய்து கொண்டிருக்க வேண்டாம். அவ்வளவு யாகங்களுடைய பெயர்களையும் வைத்து இவ் வீணையில் சுத்த தானங்கள் நான் ஸ்ருஷ்டித்திருக்கிறேன்; அசுவமேத சுத்த தானம் வாசித்தால் அசுவமேதஞ் செய்த பலன்; ராஜஸூயம் என்னும் சுத்த தானத்தை வாசித்தால் ராஜஸூய பலன்.

ஜை :—இதென்ன யாகங்களை மிகவும் கேவலமாய் கேலி செய்து விட்டாயே! இதற்கா உன் தகப்பனார் வேதங்களை ஸ்ருஷ்டித்தார்? இதோ ப்ரம்மதேவரிடம் போய் நீ செய்யும் அக்கிரமத்தைப்பற்றிச் சொல்லுகிறேன்.

நா :—ஜைமினே, இதோ யாக்ஞவல்க்யர் வருகிறார், இவரிடம் புகார் செய்யலாம்.

ஜை :—யாக்ஞவல்க்யரே, ஆத்மஸாக்ஷாத்காரத்திற்கு வேண்டிய ஞானமொன்றே காக்கும், யாகாதிகர்மங்கள் காக்காது என்று நீர் ஞானமார்க்கம் ஏற்படுத்தினபோதுகூட எனக்கு அவ்வளவு தாபம் வரவில்லை; கேவலம் பாட்டைப் பாடி இந்த நாரதன் யாகங்களை விலக்கி விடுகிறானும்; இதோ பாருங்கள், சுரைக்காய் சுரைக்காயாக, கம்பிகளைக்கட்டி, ஏதோ புதிய வாத்தியமாம், எல்லா மஹரிஷிகள் மனதையும் கலைத்து விட்டானே!

யாக்ஞவல்க்யர் :—ஜைமினே! என் ஞான மார்க்கத்திற்கு ஏற்பட்ட வழிகளில் ஒன்று தான் இந்த நாதானு ஸந்தானம் என்பது. நல்லிசையைப் பழகி வருபவனுக்கு ப்ரம்மானுபவம் ஏற்படுமென்பது நிச்சயம். வீணா வாதனத்தின் உண்மையை உணர்ந்தவன் சிரமம் இன்றி மோக்ஷமடைகிறான்.

"வீணாவாதனதத்வஜ்ஞ: ச்ருதிஜாதிவிசாரத:|
தாளஜ்ஞ:ச அப்ரயாஸேன மோக்ஷமார்கம்
ஸ கச்சதி||"

உனது யாகங்களே இனி அவற்றுடன் சேரப்போகும் வீணை முதலிய இசைகளினால் சோபிக்கப்போகிறது. அசுவமேதம் முதலிய யாகங்களில் நல்ல வைணிகரை ஏற்படுத்தி வாசிக்கச் சொன்னால் யஜமானுக்கு ஒப்பற்ற செழிப்பும், சிறப்பும் உண்டாகும். லக்ஷ்மியின் உருவே இந்த வீணை. "ச்ரியா வா ஏதத் ரூபம், யத் வீணா." ஜைமினே, ஸாம வேதியாயிருந்தும், உமக்கு இவ்விசையின் அருமை விளங்கவில்லையா?

நா :—ஜைமினே, சிறிய ஸாமம் ஒன்றைச் சொல்லுமே, நான் இதோ வீணையில் உங்களை அனுஸரித்து வாசிக்கிறேன்.

யாக்ஞ :—ஜைமினே, பாடும், நானும் கேட்க ஆசைப்படுகிறேன்.

(ஜைமினி ஸாமம் ஒன்றைப் பாடுகிறார்; நாரதர் அதை அனுஸரித்து வீணையில் வாசிக்கிறார்).

ஜை :—ஆகா, எவ்வளவு அழகாயிருக்கிறது. இனி யாக கல்பத்தில் நான் வீணாகானத்தைச் சேர்த்து எழுதிவிடுகிறேன்.

3.

வேதகாலங்களில் நடக்கும் அச்வமேதம் ஒன்று; அதில் பூர்ச்சனைகளில் முதலாவதான உத்தர மந்தரையைத் தொட்டு வைணிகர் வாசிக்கின்றனர்; பிறகு யாகத்தைச் செய்யும் அரசனின் மேல் அவனிடம் கொடைகளைப் பெற்ற கக்ஷீவான் என்ற கவி பாடும் தானஸ்துதி.

இதைப் பாட்டிலமைத்து அதற்கு ஒட்டி வீணை வாசிக்கவும்.

சதம் ராஜ்ஞோ நாதமானஸ்ய நிஷ்கான்
சதமச்வான் ப்ரயதான் த்ஸத்ய ஆதம்
சதம் கக்ஷீவான் அஸுரஸ்ய கோநாம்
திவி ச்ரவோ அஜரமா ததான.

4.

ஹிமவத் பர்வதத்தில் நாடக சைலமென்று பரமசிவன் ஸந்த்யாகாலங்களில் தாண்டவம் செய்யுமிடம்; தாண்டவத்திற்காக ப்ரம்மதேவர் ஸ்ருஷ்டித்த பாட்டுகளைப் பாடவேண்டி தண்டு நந்தியிடம் பேசிக் கொண்டிருக்கிறார்.

தண்டு :—பரதா, உனது 'தத குதபம்' ஸஜ்ஜமாயிற்றா? 'ஆஸ்ராவணை' ஆரம்பிக்கலாமா? நந்தி, உன் புஷ்கரமத்தளம் சுருதி சுத்தமாயிற்றா?

நந்தி :—தண்டோ, ஆயிற்று; இன்று பகவானின் தாண்டவம் உம் கானத்தை யனு

சரிக்காமல் வேறு பக்தன் ஒருவனுடைய கானத்தை யனுஸரிக்கப் போவதாகக் கேள்வி.

தந் :—வேறு யாராயிருக்கக்கூடும்? இதோ வருகிறானே சிவ பக்த சிகாமணி லங்கேச்வரன், ஸாமகான வல்லவன், ராவணன்.

நந் :—லங்கேச்வரா, வரவேண்டும்.

ராவணன் :—கணச்ரேஷ்டர்களே, நமஸ்காரம். இதைப் பார்த்தீர்களா! ஏராளமான தந்திகளை அமைத்து, என் மாமன் மயனோடு கலந்து, நான் சிவனுடைய தாண்டவப் பணிக்கென்று தயாரித்த வீணை. எனது இருபது கைகளாலும் நான் இதை வாசிக்க, சிவபெருமான் தாண்டவம் ஆடவேண்டும்.

தந் :—இதோ பகவான் வரும் காற் சலங்கை ஒலி கேட்கிறது.

சிவன் :—ராவணா! இதென்ன புதிய வீணையொன்றை கொண்டு வந்திருக்கிறாய்? ஏக தந்திகளா இருக்கிறதே? ஸரிதான். நீ இருபது கைகளாலும் வாசிக்க வேண்டுமல்லவா? இதெற்கென்ன ராவண ஹஸ்தகம் என்று பெயரோ?

ரா :—தாங்கள் இட்டதே பெயர். இன்று தங்களுடைய தாண்டவத்திற்கு ஒரு ஸ்தோத்ர மொன்றையும் கவனம் செய்து கொண்டு வந்திருக்கிறேன்.

சிவ :—நடக்கட்டும் கானம்.

(ராவணன் தான் செய்து கொண்டு வந்திருக்கும் சிவ தாண்டவ ஸ்தோத்திரத்தைப் பாடி தனது வீணையில் வாசிக்கிறான்; சிவன் தாண்டவ மாடுகிறார்; அடவு சப்தங்கள் கேட்கின்றன; நந்தி புஷ்கரமத்தளம் வாசிக்கிறார். ராவணன் பாடும் ஸ்தோத்திரம்:

ஜடா கடாஹ ஸம்ப்ரம ப்ரமன் நிலிம்பநிர்ஜரீ-
விலோல வீசி வல்லரீ விராஜமான மூர்த்தனி||
தகத்தகத்தகஜ்ஜ்வலல் லலாட பட்ட பாவகே
கிசோர சந்த்ரசேகரே ரதி: ப்ரதிக்ஷணம் மம||

முதலிய ச்லோகங்கள்.

5.

(ராமனுடைய அசுவமேத மஹா மண்டபம்.)

ராமன் :—ஸுமந்த்ரரே, என்ன ஆச்சர்யமான கவிதை! கவிதையின் இனிமைக் கொப்பான இசை! இச் சிறுவர்களிருவரும் தந்த்ரீ நாதத்தில் லயித்துப்பாடுவது எப்படி இருந்தது!

ஸுமந்த்ரர் :—ராமா! நடந்து போன விருத்தாந்தமா அது என்று கூட உணராமல் நம் கண்முன் நடக்கும் நிகழ்ச்சியென்றே அனுபவித்து உருகினர் அனைவரும். வால்மீகி நல்ல சிஷ்யர்களைப் பிடித்துத்தான் தன் காவியத்தைப்பிரசாரம் செய்திருக்கிறார். ஆகா! நாதத்தில் நுழைந்தல்லவோ பாடுகின்றனர்.

ரா :—ஏன் இன்று குசலவர் இன்னும் வரவில்லை?

ஸும :—இதோ வருகின்றனர்;
(உடனே தந்தியின் மீட்டு கேட்கிறது.)

ரா :—தந்தியை இம் முனிகுமாரகர் மீட்டினதுமே எனது மயிர் சிலிர்க்கிறது. குழந்தைகளே, வாருங்கள்.

குசன் :—ப்ரபோ, ஸுப்ரபாதம், ஆரம்பிக்கலாமா?

ரா :—ஆயுஷ்மன், நாம் அனைவரும் கேட்பதற்கே ஏங்கிக் கொண்டிருக்கிறோம்; உமது ராமாயண கானத்தைத் தவிர எனக்கு வேறு நினைவு இல்லை.

குசன் :— லவா, ஆரம்பிக்கலாமா?

லவன் :—ஸரி.

(வீணையை வாசித்துக் கொண்டு குசலவர் ராமாயணத்தைப் பாடுகின்றனர். "ராமஸ் ஸத்புருஷோ லோகே" என்று அயோத்யா காண்டத்தில் 2-வது ஸர்கம் 29-வது ச்லோகத்தில் ஆரம்பித்து 34-வது ச்லோகத்தில் "காந்தர்வே ச புவி ச்ரேஷ்டோ பபூவ பரதாக்ரஜ:" என்ற அடிவரையிலும் பாடுகின்றனர். இதில் "காந்தர்வே ச" என்ற கடைசியடியை பல்லவியாய் வைத்துப் பாடுகின்றனர்.)



மொழிபெயர்ப்புப் பகுதி.

கதைக் கடல்.

மதனமஞ்ஜூகா என்ற ஆறுவது லம்பகம்.

மூன்றும் அலை.

(டாக்டர் வே. ராகவன்.)

(298-ம் பக்கத் தொடர்ச்சி)

மறு நாட்காலை; கலிங்கஸேனைக்கு விநோதத்தை அளிக்கக்கூடியதாய் தன் மாயாசக்தியைக் கொண்டு மரத்தால் செய்து உள்ளே அமைக்கப்பட்ட பல யந்திர பொம்மைகளோடு கூடிய பெட்டியொன்றை எடுத்துக்கொண்டு ஸோமப்ரபை வானவழியாய் கலிங்கஸேனையிடம் வந்தாள். அவளைக் கண்டதும் ஆனந்தக் கண்ணீர் ததும்ப, கலிங்கஸேனை எழுந்து அணைத்துக் கொண்டாள். பிறகு தன் பக்கத்தில் உட்கார்ந்த ஸோமப்ரபையைப் பார்த்துக் கேட்டாள்: "தோழி, உன் முகமாகிற நிறைமதியைக் காணாமல் உண்மையிலேயே இருளாயிருந்த நேற்றிரவு எனக்கு யாமங்கள் மூன்றல்ல, நூறு கொண்டது போல் போயிற்று. இது என்ன முன்பிறப்புச் சேர்க்கையோ நம்மிருவருக்கும், இப்படி இப் பிறப்பில் நேர்ந்திருக்கிறது! நீ தேவஸ்த்ரீயாயிற்றே, தெரிந்திருந்தால் சொல்லேன்."

அதைக் கேட்டு ராஜபுத்திரியிடம் ஸோமப்ரபை சொன்னாள்: "அப்படி எனக்கொரு அறிவுமில்லை; பூர்வ ஜன்ம நினைவு படைத்தவளல்லள் நான்; இங்கு அறிஞர்களான முனிவரெவருமில்லையே? அவர்கள் உண்மையைக் கண்டவர்கள்; அவர்களுக்கு ஒரு வேளை தம்முடைய முன் வினைகள் எல்லாம் தெரிந்திருக்கும்." இப்படி ஸோமப்ரபை சொல்ல, மேலும் அன்பினால் ஏற்பட்ட நம்பிக்கையில் மிருதுவாக வேறொருவருமில்லாத அத் தனியிடத்தில், தன் தோழியைப்பற்றி மேலும் தெரிந்து கொள்ள ஆவலுற்ற கலிங்கஸேனை கேட்டாள்: "தோழி, எந்த தெய்வத்தந்தையின் குலத்தை நன்முத்து போலிருக்கும் சிறந்த நடத்தையுள்ள நீ உன் பிறப்பால் அலங்கரித்திருக்கிறாய்? நல்ல லக்ஷணங்கள் படைத்தவளே! உலகத்தார் செவிக்கு அமுதாயிருக்கும் உன் பெயர் என்ன? இதென்ன பெட்டி? இதில்

என்ன இருக்கிறது?'' இப்படிக் களிங்கஸேனையின் அன்பு வார்த்தைகளை கேட்ட ஸோமப்ரபை, வரிசையாய் எல்லாவற்றையும் சொல்ல வாரம்பித்தாள்:

"மூவுலகிலும் புகழ் பெற்ற மஹாஸுரன் மயன் என்றவன் இருக்கிறானல்லவா, அவன் தன் அஸுரத்தன்மையை விட்டு விஷ்ணுவைச் சரணமடைந்தான். விஷ்ணு அவனுக்கு அபயம் அளிக்க, அதன் மேல் அம் மயன் இந்திரனுடைய ஸபையை நிர்மாணம் செய்தான். அது காரணம்பற்றி இவன் தேவர்பால் சேர்ந்து விட்டானென்று அஸுரர் சினந்தனர். அவ்வஸுரரிடம் பயந்து விந்தியமலையில் மாயையாலான பாதாள மாளிகை பொன்றை தனக்கு ஏற்படுத்திக் கொண்டான்; அது அஸுரர் அணுகமுடியாததும் பல விந்தைகள் நிரம்பியதுமாயிருந்தது; அம் மயனுக்கு நாங்கள் இரு பெண்கள். மூத்தவள் பிரம்மசாரணியாயிருக்கும் ஸ்வயம்ப்ரபை; அவள் கன்னியாக வீட்டிலேயே இருக்கிறாள்; நான் ஸோமப்ரபை என்ற இளையவள். நான் குபேரன் புதல்வன் நளகூபரனுக்கு அளிக்கப்பட்டேன். மாயாயந்திரப் பொம்மைகள் பல விதமாகச் செய்ய என் தகப்பனிடம் நான் கற்றுக்கொண்டேன்; உன்னிடமுள்ள அன்பினால் பொம்மை நிரம்பிய பெட்டியொன்றை இங்கு உனக்காகக் கொண்டுவந்தேன்.'' இப்படிச் சொல்லிவிட்டு, அப்பெட்டியைத் திறந்து ஆச்சரியமாய் மரத்தில் செய்த அந்த மாயாயந்திரப் பொம்மைகளை ஸோமப்ரபை களிங்கஸேனைக்குக் காட்டினாள். ஒரு மூளையைத் தட்டினவுடன் ஒரு பொம்மை மேலே குதித்துப்போய், ஸோமப்ரபையின் கட்டளைப்படி பூக்களைப் பறித்துக்கொண்டு வேகமாய் வந்தது; மற்றொன்று திடீரென, குடிக்கும் தண்ணீரைக் கொண்டு வந்தது; ஒன்று ஆடிற்று; இன்னுமொன்று கதைகளைச் சொல்லிற்று. இப்படிப் பெரும் விந்தைகளைக் காட்டிச் சிறிது நேரம் களிங்கஸேனையை விநோதப்படுத்தி, அந்த யந்திர பொம்மைப் பெட்டியை ஓரிடத்தில் பத்திரமாய் வைத்து விட்டு, தன்னோடு கூடவே இருக்க ஏங்கிக்கொண்டிருக்கும் களிங்கஸேனையிடம் விடைபெற்றுக் கொண்டு, தான் கணவனோடு கூடி வாழ்பவளாதலால் வந்த வான வழியே தன் வீட்டிற்குச் சென்றாள். அவ்விந்தைகளைக் கண்டதிலிருந்து பசியற்றுப்போய், களிங்கஸேனை ஏதோ களிப்புற்றவளாக அன்று முழுதுமே உணவொன்றும் வேண்டாதவளாக இருந்து விட்டாள். அதைக் கவனித்த அவளுடைய தாய் அவளுக்குப் பிணி ஏதாவது கண்டு விட்டதோ என்று பயந்து ஆனந்தன் என்ற வைத்தியனைப் பார்க்கச் சொன்னாள். வைத்தியன் களிங்கஸேனைக்கு பிணி ஒன்றுமில்லை யென்று கண்டு, அவள் தாயிடம் "ஏதோ களிப்பினால் இவளுக்குப் பசி யெடுக்காமல் இருக்கிறது. ரோகத்தாலில்லை; மலர்ந்த கண்களுடன் சிரித்தது போலிருக்கும் இவளுடைய முகமே இதைத் தெரிவிக்கிறதே!'' என்று சொன்னான். வைத்தியன் இப்படிச்சொல்ல, 'அக்களிப்புக்குக் காரணம் என்ன' என்று களிங்கஸேனையை தாய் கேட்டாள். நடந்ததை அப்படியே தாயிடம் களிங்கஸேனை சொன்னாள். அதைக் கேட்டு, சிறந்த தோழியின் நட்பு கிடைத்ததையறிந்து பெண்ணைப் போற்றி விட்டு, தாயார் தக்க உணவை பெண் ஏற்றுக் கொள்ளும்படி செய்தாள்.

மறுநாள் ஸோமப்ரபை வந்தாள்; நடந்தவற்றை களிங்கஸேனையிடம் தெரிந்து கொண்டு, தனிமையில் மெள்ள அவளிடம் சொன்னாள்: "நான் உன்னிடம் ஏற்பட்ட நட்பைத் தெரிவித்து, உன்னிடம் அனுதினமும் வருவதற்கு அறிஞரான என் கணவனிடம் அனுமதி பெற்றிருக்கிறேன். நீயும் உன் தாய் தந்தைகளிடமும் அனுமதியைப் பெறு; கவலையில்லாமல் என்னுடன் இஷ்டப்படி விளையாடலாம்.'' இப்படிச் சொன்ன ஸோமப்ரபையின் கையைப் பிடித்துக்கொண்டு, அவளுடன் தன் தாய் தந்தையிடம் வந்தாள். களிங்கஸேனை அங்கு தன் தந்தையான அரசன் களிங்கதத்தனுக்கு பெயரையும் குலத்தையும் சொல்லி தன் தோழி ஸோமப்ரபையை அறிமுகப்படுத்தி வைத்தாள்; அப்படியே தன் தாய் தாராதத்தைக்கும் தோழியை தெரியப் படுத்தினாள். சொல்லியதற்குத் தக்கப்படி களிங்கஸேனையின் தந்தையும் தாயும் ஸோமப்ரபையைப் போற்றினர். ஸோமப்ரபையின் தோற்றத்திலேயே திருப்தியடைந்து, தாய் தந்தையர் இருவரும் தம் பெண் அவளிடம் வைத்த அன்பினால் அந்தப் பெரிய அஸுரனின் அழகிய மகளைக் கௌரவித்துவிட்டு, அவளிடம் தெரிவித்தனர்: "பெண்ணே! இக்

களிங்கஸேனையை உன் கையில் ஒப்பித்திருக்கிறோம். நீங்கள் இருவரும் உம்மிஷ்டப்படி விளையாடிவரலாம்.'' இவ்வார்த்தையைப் போற்றிவிட்டு, களிங்கஸேனையும் ஸோமப்ரபையும் வெளியே வந்தனர். அரசன் கட்டிவைத்த விளையாட்டு மாளிகைக்கு இருவரும் வந்தனர். அவ்விடம் அந்த மாயாயந்திர பொம்மைப் பெட்டியைக் கொண்டுவந்தனர். அப்பெட்டியிலிருந்து ஒரு யக்ஷனுடைய யந்திர பொம்மையை எடுத்து, புத்தரை பூஜிப்பதற்கு வேண்டிய பொருளைக் கொண்டுவர தன் மாயையைக் கொண்டு அனுப்பினாள். அந்த யக்ஷ பொம்மை வானவழியே வெகு தூரம் சென்று, முத்து, நல்ல ரத்தினங்கள், தங்கத் தாமரைக் குவியல்கள் இவற்றுடன் திரும்பி வந்தது. அவைகளைக் கொண்டு புத்தரைப் பூஜித்து, தன் விந்தைகளையெல்லாம் காட்டித் தங்கள் தங்கள் இருப்பிடங்களோடுகூட புத்தர்களையெல்லாம் அவ்விடத்திலேயே தோன்றும்படி செய்தாள். அதைப்பற்றிக் கேள்விப்பட்டு, ராணியுடன் அரசன் களிங்கதத்தன் வந்து, அவற்றைக் கண்டு, வியந்தவனாய், யந்திரங்கள் நடத்தையைப்பற்றி வினவினான். அதன்மேல் ஸோமப்ரபை சொன்னாள்: 'அரசே! இப் பலவகைப்பட்ட யந்திரசிற்பங்கள் முன் என் தகப்பனால் ஸ்ருஷ்டிக்கப்பட்டவை. இவ்வுலகம் எப்படி ஐந்து பூதங்களால் ஆனதோ அப்படியே இந்த யந்திரங்கள் அனைத்தும். அவற்றைத் தனித்தனியே சொல்லுகிறேன், கேள்: ப்ருதிவியை முக்கியமாகக் கொண்ட யந்திரம் கதவு முதலியவற்றை மூடும்; அதால் மூடப்பட்டதை மற்றவர் திறக்க முடியாது. ஜல யந்திரத்தினால் உண்டான பொம்மை உயிருள்ளது போலிருப்பது. நெருப்பு ஜ்வாலைகளை வீசுவது தேஜயந்திரம்; வாயுயந்திரம் போய் வரும் செயலைச் செய்யும். ஆகாசயந்திரம் பேச்சை வெளிப்படுத்தும். இவற்றை நான் என் தகப்பனிடம் பெற்றேன். ஆனால் அமிர்தத்தைக் காப்பது சக்கரயந்திரமென்றுளது; அது என் தகப்பனாருக்கு மட்டுமேயன்றி, மற்றொருவருக்கு தெரியாது.''

இப்படி ஸோமப்ரபை சொல்லிக் கொண்டிருக்கும்போது மத்தியான்னமாக, ஸோமப்ரபையின் சொற்களை நம்பியவைபோல் சங்கங்கள் ஒலித்தன. தான் கொடுக்கத்தக்க உணவை களிங்கஸேனைக்கு அளிக்கவேண்டுமென்று களிங்கதத்தராஜனிடம் தெரிவித்து, அவனிடம் விடைபெற்று, யந்திரத்தாலான ஆகாயவிமான மொன்றில் களிங்கஸேனையை பரிவாரங்களுடன் ஏற்றிக்கொண்டு ஸோமப்ரபை வானவழியாய் தன் தகப்பனுடைய இருப்பிடத்தில் தன் அக்காளிடம் சென்றாள். ஒரு நொடியில் விந்தியமலையிலிருக்கும் தகப்பனின் பாதாள மாளிகையை யடைந்து, தன் அக்காள் ஸ்வயம்ப்ரபையிடம் களிங்கஸேனையை அழைத்துக்கொண்டு போனாள். அங்கு ஜடையுடனும், கையில் தொங்கும் ஜபமாலையுடனும் ப்ரம்மசாரிணியாயிருக்கும் ஸ்வயம்ப்ரபையை களிங்கஸேனை கண்டாள். வெண்ணுடை யுடுத்துக் கடுந்தவமிருக்குமவள் பார்வதியை பரிஹஸிப்பவள் போலிருந்தாள். ஸோமப்ரபை தன் அக்காளிடம் களிங்கஸேனையை யாரென்று தெரிவித்ததும், களிங்கஸேனை ஸ்வயம்ப்ரபையை வணங்கினாள்; ஸ்வயம்ப்ரபை அதிதி ஸத்காரம் செய்து தான் உட்கொள்ளும் பழங்களை களிங்கஸேனைக்கும் அளித்தாள். "தோழி, இப் பழங்களை உண்டால், உனக்கு மூப்பே வாராது; தாமரையைத் தாக்கும் பனிபோல் இந்த உன் அழகை கிழத்தனம் அழிக்கவே அழிக்காது; இதற்காகவே எனக்குன்னிடமுள்ள ஸ்நேகத்தால் உன்னை இங்கு அழைத்துக்கொண்டு வந்தேன்'' என்று ஸோமப்ரபை களிங்கஸேனையிடம் சொன்னாள். அதன்மேல் களிங்கஸேனை அப் பழங்களை புஜித்தாள்; உடனே அமிர்தவீழ்ச்சியில் நனைந்ததுபோலாயின அவளுடைய அங்கங்கள். குதூஹலத்தால் அம்மாளிகையைச் சுற்றிவந்த களிங்கஸேனை, அவ்விடத்தில் உத்யானமொன்றைக் கண்டாள்; அதில் பொற்றாமரை யோடையும் அமிர்தருசியான கனிகளையுடைய மரங்களும் பொற்சாயலும் பற்பலச்சாயலுமுள்ள புள்ளினங்களும் காணப்பட்டன. அங்கிருந்த நல்ல ரத்தினங்களாலான தூண்களால் மதிமயக்கம் ஏற்பட்டது. ஒன்றுமில்லாத இடத்தில் சுவர் தோன்றிற்று; சுவரிருக்குமிடம் வெளி தோன்றிற்று. ஜலத்தில் ஸ்தலபுத்தியும், ஸ்தலத்தில் ஜலபுத்தியும் உண்டாயிற்று. அபூர்வமானதாயும் வேறொரு உலகம்போலவும் தோன்றிற்று அந்த மயனுடைய

மாயையால் நிர்மாணஞ் செய்யப்பட்ட அவ்விடம். முன்பு இவ்வுத்தியானத்தில்தான் ஸீதையைத் தேடப் போன குரங்குகள் நுழைந்து பின்பு ஸ்வயம்ப்ரபையின் கருணையால் வெகு நாட்கள் கழிந்து வெளியேறின. அந்த அற்புதமான தோட்டமயமான பட்டினத்தை நன்கு பார்த்து வியந்தவளான களிங்கஸேனை மூப்பிற்கே ஆளாகாதவளான ஸ்வயம்ப்ரபையிடம் விடை பெற்றுக்கொண்டாள். மறுபடியும் ஸோமப்ரபை களிங்கஸேனையை யந்திர விமானத்தில் ஏற்றி, வானவழியாய், தக்ஷஸிலையில் அவளுடைய அரண்மனைக்கு கொண்டு வந்தாள். அரண்மனையில் தன் தாய் தந்தையிடம் தான் பார்த்ததை அப்படியே வர்ணித்தாள்; அதைக்கேட்ட தந்தையும் தாயும் ஸந்தோஷித்தனர்.

இப்படி இரண்டு தோழிகளுக்கும் நாட்கள் கழிந்து வருகையில், ஒருஸமயம் ஸோமப்ரபை களிங்கஸேனையிடம் சொன்னாள்: "நீ கல்யாணம் செய்துகொள்ளாத வரையில்தான் எனக்கு உன்னுடன் ஸ்நேகம்; நீ கணவன் வீட்டிற்குப் போனபிறகு நான் எப்படி உன்னிடம் வர முடியும்? தோழியின் கணவனை வந்து பார்க்கலாகாது; தோழியின் கணவனை எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ளக்கூடாது. ஓனாய் ஆட்டின் மாம்ஸத்தைக் கடித்துத் தின்பதுபோல் மாமியார் நாட்டுப் பெண்ணின் உடலைக் கடித்துத் தின்றுவிடுவாள். இவ்விஷயமாய் கீர்த்திஸேனையென்றவளைப் பற்றிய இக் கதையைச் சொல்லுகிறேன் கேள்:

உபகதை 1.

பாடலீபுத்திரம் என்ற நகரத்தில் தனிகருள் முதல்வனாய் உண்மையில் தனபாலிதன் என்ற பெயரோடுகூடிய வணிகன் இருந்தான். அவனுக்குக் கீர்த்திஸேனை யென்ற கன்னிகை பிறந்திருந்தாள். நிகரற்ற ரூபத்தோடு கூடிய அவள் அவ்வணிகனுக்கு உயிரினும் பிரியமாயிருந்தாள். மகததேசத்திற்கு அழைத்துப் போய் அங்கு மிகச் செழித்தோங்கியிருக்கும் தேவஸேனன் என்ற வணிகனுக்கு அவளைத் தனபாலிதன் கல்யாணஞ் செய்து கொடுத்தான். மிகவும் ஒழுங்காக நடந்து கொண்டுவரும் அந்த தேவஸேனனுக்கு தகப்பனில்லை; கெட்டவளான அவனுடைய தாயே வீட்டிற்கு யஜமானியாய் ஆண்டுவந்தாள். பிள்ளைக்கு தன் நாட்டுப் பெண் பிடித்திருப்பதைக்கண்டு அம்மாமி கோபம் ஜ்வலித்தவளாய் பிள்ளை யில்லாதபோது கீர்த்திஸேனையை துன்பப்படுத்தி வந்தாள். கீர்த்திஸேனைக்கு இத்துன்பத்தைக் கணவனிடம் சொல்லமுடியவில்லை; வக்கிரமாயிருக்கும் மாமிக்கு அடிமையாய் நாட்டுப்பெண் இருந்து வருவது மிகவும் கஷ்டமல்லவா?

ஒரு ஸமயம் அவளுடைய கணவன் தேவஸேனன் வியாபார நிமித்தமாய் தன் பந்துக்களால் தூண்டப்பட்டு வலபீயென்ற நகரத்திற்குப் போகக்கிளம்பினான். அப்பொழுது கீர்த்திஸேனை தன் கணவனிடம் சொன்னாள்: "*ஆர்யபுத்ரா! இது காறும் நான் இதை உம்மிடம் சொன்னதில்லை. நீர் இங்கிருக்கும்போது உம் தாய் என்னை ஹிம்ஸிக்கிறாள்; நீர் தேசாந்தரம் சென்றிருக்கும்போது அவள் என்ன செய்வாளோ தெரியாது." அதைக் கேட்டுக் கலக்கமுற்று அவளிடமுள்ள அன்பினால் தேவஸேனன் தாயிடம் பயந்தவனாய் மெள்ள அணுகி வணங்கினவனாய் சொன்னான்: "அம்மா, நான் கிளம்புகிறேன்; கீர்த்திஸேனை உன் கையில் ஒப்பிக்கப்பட்டிருக்கிறாள்; அவளிடம் ப்ரியமின்றி இருக்கக்கூடாது; அவள் நல்ல குலத்தில் பிறந்தவளல்லவா?" அதைக் கேட்ட தேவஸேனனின் தாய், கீர்த்திஸேனையைக் கூவிச் சொன்னாள்: "இப்படி உன்னை (ப்பேசும்படி) தூண்டினாளே, இவளை நான் என்ன செய்துவிட்டேன், கேள்; குழந்தாய்! எனக்கு நீயும் அவளும் ஸமமே; இவளோ வீட்டை இரண்டு பண்ணப் பார்க்கிறாள்." இதைக் கேட்ட தேவஸேனன் தாயாரின் பொருட்டு மனவமைதியடைந்தான்; போலியன்பு கொண்ட தாயின் மொழிகளால் எவன்தான் ஏமாற்றப்படமாட்டான்? திடுக்கிட்டவளாயும், இந்தப் பேச்சைக் கேட்டு சிரிப்பு

* 'ஆர்யபுத்ரா' என்பது கணவனை மனைவி யழைக்கும் சொல். அதற்கு 'பெரியோர் புதல்வா' என்றுபொருள்.

வந்தவளாயும் கீர்த்திஸேனை மௌனமாயிருந்து விட்டாள். தேவஸேனன் மறுநாள் வலபீக்குப் புறப்பட்டான். அதன் மேல் கீர்த்திஸேனை கணவனிடமிருந்து பிரிந்திருப்பதால் நோவுற்றாள்; அவள் மாமியோ வேலைக்காரிகளை அவளுக்குப் பணி செய்ய வேண்டாம் என்று நிறுத்திவிட்டாள். தனக்கு வேண்டியவளான ஒரு வேலைக்காரியுடன் கலந்து பேசிக்கொண்டு, மாமியார் கீர்த்திஸேனையை மறைவாய் உட்பக்கம் அழைத்து வந்து அவளை நக்கினமாக்கி, "அடி, பாவி, என் பிள்ளையைப் பிரிக்கிறாயா?" என்று கத்திக்கொண்டு, கீர்த்திஸேனையின் கூந்தலைப்பற்றிக்கொண்டு, தானும் தன் வேலைக்காரியுமாய் கால்களாலும், கை நகங்களாலும், பற்களாலும் ஹிம்ஸித்தாள். பிறகு கீர்த்திஸேனையைக் கெட்டியான கதவும் தாழ்ப்பாளும் போட்ட பூமிக்குள் உள்ள அறை ஒன்றில் தள்ளினாள்; அவ்வறையினுள் இருந்த பொருள்களையெல்லாம் வெளிப்படுத்தி விட்டாள். ஒவ்வொரு நாளும் அந்தி வேளையில் அவ்வறைக்குள் அந்த நிலையிலிருக்கும் நாட்டுப் பெண்ணிற்காக பாவி மாமியார் அரைத்தட்டு சோறு வைப்பாள். நாளடைவில் இவள் கணவன் தூரத்திலிருப்பதால் பிரிவாற்றாமையால் தானே மாண்டனள்; இவளை எடுத்துப் போ" என்று சொல்லிவிடுகிறேன் என்று நினைத்தாள் மாமி. இன்பத்திற்குரிய அக் கீர்த்திஸேனை இவ்வாறு பாபியான மாமியால் கீழறையில் தள்ளப்பட்டு, அழுதவண்ணம் யோஜித்தாள்: "பணக்கார அகமுடையான்; நற்குலப் பிறப்பு; மாங்கல்யம்; நன்னடத்தை-இவையெல்லாமிருந்தும் மாமியின் அருளால் எனக்கு இப்படிப்பட்ட துன்பம் நேர்ந்திருக்கிறது! இது காரணம்பற்றியே உறவினர் மாமி, நாத்திமாரின் பயத்தாலும் வைதவ்வியம் முதலியவற்றாலும் கொடுக்கப்பட்ட கன்னிப் பிறப்பைப் போற்றுகிறதில்லை."

இவ்வாறு நினைத்துக்கொண்டு இருக்கையில் திடீரென்று அவ்வறைக்குள் ஒரு மண்வெட்டியைக் கண்டெடுத்தாள்; தன் மனதினுள் தைத்த துன்பமே வெட்டியெடுக்கப்பட்டதோ என்று தோன்றிற்று அம்மண்வெட்டி! அவ்விரும்பு மண்வெட்டியால் கீர்த்திஸேனை சுரங்கமொன்றை வெட்டிக்கொண்டு, தன் தலைவிதி போலிருந்த அந்த அறையிலிருந்து வெளியேறினாள். வெளியேறி, தன் வீட்டிற்குள் வந்தவளுக்கு, அங்கு தான் முன் செய்த அறமே போல் குன்றாவொளியுடன் பழம் விளக்கொன்று எரிந்துகொண்டிருந்ததைக் கொண்டு வீட்டைச் சுற்றிப் பார்த்து வேண்டும் உடைகளையும் தான் வைத்திருந்த பொன்னையும் எடுத்துக்கொண்டு விடியும் வேளையில் மறைவாய் வீட்டைவிட்டு வெளியே வந்து நகரத்தை விட்டும் வெளியே சென்றாள். "இவ்வாறு இருக்கும் நான் பிறந்த வீடு செல்லலாகாது; அங்கு போய் என்ன சொல்வேன்? அங்குள்ளவரும் என்னை எப்படி நம்புவர்? ஆகையால் என் புத்தி பலத்தைக்கொண்டு என் கணவனிடமே போகவேண்டும்; இஹத்திலும் பரத்திலும் பதிவிரதைகளுக்கு பதியொருவனே கதியல்லவா?" என்று யோஜித்து, குளத்தில் ஸ்நானம் செய்து ராஜபுத்திரன் போல் முழுதும் வேஷம் போட்டுக் கொண்டாள். பிறகு கடைத்தெருவுக்குப் போய் பொன்னைக் கொடுத்துக் கொஞ்சம் பணம் வாங்கிக்கொண்டு அன்றுப்போதை ஒரு வணிகனுடைய வீட்டில் கழித்தாள். மறுநாள் ஸமுத்திரஸேனன் என்ற வர்த்தகன் வலபீ நகரத்திற்குப் போனான்; அவனுடன் பழக்கம் செய்துகொண்டு, முன் வலபீக்குச் சென்ற தன் கணவனை யடையும் பொருட்டு பல ஆட்களோடு செல்லும் அந்த ஸமுத்திரதத்தனுடன் தானும் வலபீக்குப் புறப்பட்டாள். "ஞாதிகளால் பீடிக்கப்பட்டு நான் வலபீயிலுள்ள என் உறவினரிடம் செல்லுகிறேன்" என்று ஸமுத்திரதத்தனிடம் சொன்னாள். அதைக் கேட்டு ஸமுத்திரதத்தனும் "நிச்சயம் ஏதோவொரு மேன்மை கொண்ட ராஜபுத்திரன்தான்" என்று வழியில் கீர்த்திஸேனையை உபசரித்தான்.

அவ்வணிகனுடைய கூட்டமானது காட்டுப்பாதையொன்றைக் குறித்துச் சென்றது. நேரான ரஸ்தாக்களில் சுங்கம் அதிகமாகக் கொடுக்கவேண்டுமென்று பல மார்க்கங்களில் போகும் ஜனங்களும் அக் காட்டுப்பாதை வழியே போவதுண்டு. சில நாட்களில் அவர்கள் காடு ஆரம்பிக்கும் இடம் வந்து சேர்ந்து அஸ்தமிக்கும் ஸமயம், அவ்விடத்தில் தங்கி

னார்கள். அப்பொழுது யமனுடைய தூதி என ஒரு பெண் நரி பயங்கரமாய் ஊளையிட்டது. இந்த அபசகுனத்தை அறிந்த வணிகர்கள் திருடர் முதலியவர் தாக்குவர் என்று பயப்பட, காவலர் நாற்புறமும் கத்தியை உருவிக் கொண்டு நின்றனர். இருளும் திருடருடைய முன்னணிச்சேனைபோல் திரண்டு வந்தது. இவற்றைப் பார்த்து ஆண் வேடம் பூண்டிருந்த கீர்த்திஸேனை யோஜித்தாள்: "அந்தோ, துரதிர்ஷ்டக்காரருக்குத் தீவினை தொடராக வளர்ந்து கொண்டே இருக்கிறது. மாமி விதைத்த விபத்து இங்கு வந்து எனக்குப் பலித்து விட்டது. முதலில் மிருத்யுபோல் என்னை மாமியின் கோபம் கடித்துத்தின்று கொண்டிருந்தது; மறுபடியும் கர்ப்பத்தினுள் வஸிப்பவள் போல் பூமிக்குள்ளே அறை யொன்றில் தள்ளப்பட்டேன். அதிர்ஷ்டவசத்தால் அவ்வறையிலிருந்தும் மறு பிறப்படைந்தவள் போல் தப்பிப்பிழைத்தேன்; இதோ இங்கு வந்தும் மறுபடியும் உயிருக்கு அபாயம் வந்துவிட்டதே! இங்கு திருடர்களால் நான் கொல்லப்பட்டுப் போனால் "கள்ளபுருஷனோடு எங்கேயோ ஓடிவிட்டாளவள்" என்று என் கணவனிடம் சத்துருவான என் மாமி சொல்லுவாள். என் உடையை விலக்கி, நான் ஸ்த்ரீ அல்ல என்று கண்டுபிடிக்கப்பட்டுவிட்டேனே, என் ஒழுக்கம் நிச்சயம் கெடுக்கப்பட்டுவிடும்; அதை விட நான் இறப்பதே மேல், ஆகையால் என் நண்பனான இந்த வர்த்தகனைக் கவனியாமல், நான் என் உயிரை மட்டும் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்; ஒழுக்கம் தவறாமல் ஒரு ஸ்த்ரீ தன்னைப் பார்த்துக் கொள்ளவேண்டியது, தோழன் முதலியவற்றின் சிந்தனையை விட அவச்யம்." இப்படி யோஜனை செய்து கொண்டு, தப்பும் வழியைத் தேடிய கீர்த்திஸேனை பூமிதேவியே கருணையால் திறந்த விட்டவழியோ வென்று தோன்றும்படியான வீடு போன்ற பெரும் பொந்து ஒன்றை மரம் ஒன்றினுட் கண்டாள். அப் பொந்தினுட் புகுந்து, புல், தழை முதலியவற்றால் தன்னை மறைத்துக் கொண்டு, கணவனுடன் கூடவேண்டும் என்ற ஆவல் ஒன்றினாலேயே தன் உயிரைத் தாங்கிக் கொண்டிருந்தாள்.

பிறகு நல்ல இருட்டில் தூக்கிய ஆயுதங்களோடு, திடீரென ஓடி வந்த பெரும் கள்ளர் படையொன்று வணிகர் கூட்டத்தைச் சூழ்ந்து கொண்டது. கருங்கார்போல் கள்ளர் இடித்தனர்; மின்னலென தீப்பறந்தன கத்திகள்; ரத்தம் மழையாய் கொட்டிற்று. இப்படி நடந்த போர் மழையில் வணிகத்தலைவனான ஸமுத்ரஸேனனையும் அவனுடன் வந்தவரையும் கொன்று விட்டு வலியவராயிருந்த அக் கள்ளர் பொருட்குவியல்களைப் பற்றிக்கொண்டு போயினர். பொந்திற்குள் இருந்தபடியே இந்தக் கோலாஹலத்தைக் கேட்ட கீர்த்திஸேனையின் உயிர் அவளைத் தானாகவே விடாமலிருந்தது, கேவலம் தெய்வ பலத்தினால் தான்.

பிறகு இரவு கழிந்து, சூரியன் தோன்றியதும், கீர்த்திஸேனை மரத்தினிடையே யிருந்த பொந்திலிருந்து வெளி வந்தாள். கணவனொருவனிடமே பக்தி கொண்டு, தம் ஒழுக்கம் நழுவாதிருக்கும் கற்பரசிகளை தேவதைகளே கஷ்டத்தில் வலிந்து வந்து காப்பாற்றுவர். நிர்மானுஷ்யமான அக்காட்டில் அவளைக் குறுக்கிட்ட சிங்க மொன்று ஒன்றும் செய்யாமல் அவளை விட்டுப் போனது பெரிதல்ல; அதற்குள் எங்கிருந்தோ ஒரு தபஸ்வியும் தோன்றி, அவள் வாலாற்றை விசாரித்து, அவளைத் தேற்றி, தன் கமண்டலுவிலிருந்து குடிக்கத் தண்ணீருமளித்து, போகவேண்டிய வழியையும் சொல்லிக் கொடுத்து விட்டு எங்கேயோ மறைந்தார். தபஸ்வி கொடுத்த நீரைப் பருகினதும், அமிர்தத்தைப் பருகியவள்போல் பசி தாகமொன்று மில்லாதவளாய், அவர் சென்ற வழியே சென்றாள் அந்த பதிவ்ரதை. "இன்னும் ஓரிரவும்கூடப் பொறுத்துக் கொள்" என்று தன் கரங்களை நீட்டவேண்டிக் கொள்பவன்போல் அஸ்தகிரியேறினான் சூரியன். அஸ்தமனமாவதைக் கண்டு கீர்த்திஸேனை பெருங் காட்டுமரத்தடியில் வீடுபோலிருந்த பொந்தொன்றினுள் நுழைந்து அதன் வாயை மற்றொரு மரத்தை யிழுத்து மூடிக்கொண்டாள். ஓட்டை வழியாய், தன் குழந்தைப் பிள்ளைகளுடன்கூட அவ்விடம் வரும் அரக்கியொருவளைக் கண்டாள். "மற்ற ஆபத்துகளிலிருந்து தப்பிய நான் இவளுக்கு இரையாகப் போகிறேன்" என்று கீர்த்திஸேனை பயந்ததற்குள் அவளிருக்கும் மரத்தின் மேலேயே

அவ்வரக்கி ஏறினள்; அவளுடன் அவள் பிள்ளைகளும் "அம்மா, எங்களுக்குத் தின்பதற்கு ஏதாவது கொடு" என்று அப்பொழுதே கேட்டன. அரக்கி தன் பிள்ளைகளுக்குச் சொன்னள்: "குழந்தைகாள், பெரிய ச்மசானத்திற்கும் போய் பார்த்தேன்; தீனியொன்றும் அகப்படவில்லை. அங்குள்ள * டாகினிகளைக் கேட்டும், அவர்கள் எனக்கொரு பங்கு கொடுக்கவில்லை; மனம் நொந்து பைரவரிடம் முறையிட்டு, யாசித்தேன். என் பெயர் குலம் முதலியவற்றை விசாரித்து பைரவக்கடவுள் கட்டளையிட்டார்: 'பயங்கரமானவளே, நீ நல்ல ராக்ஷஸ குலத்துதித்தவள்; கரதூஷணர்களுடைய பரம்பரை; இதோ இங்கிருந்து அருகாமையிலேயே இருக்கும் வஸுதத்தம் என்ற நகரத்திற்குப்போ; அங்கு சிறந்த தர்மிஷ்டனான அரசன் வஸுதத்தன் என்றிருக்கிறான். இக் காட்டு முனையிலிருந்து கொண்டு அவனே இக் காட்டு ராஜ்யம் முழுதும் ஆண்டு கொண்டிருப்பவன். சுங்கம் வாங்கிக்கொண்டு, அவனே கள்ளரை தண்டித்து வருபவன். (ஒரு ஸமயம்) இக் காட்டில் வேட்டையாடி, களைப்பில் உறங்கின அவ்வரசனுடைய காதில் தெரியாமலேயே கைவாய் ஒரு பெண் பூரான் புகுந்து விட்டது. நாளடைவில் அவனுடைய மண்டைக்குள் அப்பெண் பூரான் குஞ்சுப் பூரான்களை நிரப்பி விட, அந்த ரோகமூலமாய் அவ்வரசன் தற்போது நரம்புக்கூடாய் இருக்கிறான். வைத்தியர்களுக்கு அது என்ன பிணியென்று தெரியாது; மற்றவன் ஒருவனுக்கும் அது தெரியாமலிருந்தால் கொஞ்ச நாட்களில் அவ்வரசன் இறப்பான். இறந்ததும் அவன் மாம்ஸத்தை உன்மாயத்தைக் கொண்டு, நீ தின்றால், ஆறு மாதங்களுக்குப் பசி தீர்ந்தவளாவாய்.' இப்படி பைரவர் எனக்குப் பங்கு விடுத்தார். இப்பங்கும் கிடைக்குமோ கிடைக்காதோ? கிடைத்தாலும், இப்போதல்ல, வருங்காலத்தில் அரசன் இறந்ததும்தான் கிடைக்கும். பிள்ளைகளே, நான் என்ன செய்வேன்?" இப்படி அரக்கி உரைத்ததும் "அம்மா, அந்த ரோகத்தை இன்னதென்று தெரிந்து எடுத்து விட்டால், அரசன் பிழைத்து விடுவானே? அப்படிப்பட்ட அந்த ரோகத்தைதான் எப்படித் தீர்ப்பது, சொல்லேன்" என்று பிள்ளைகள் வினவ, அரக்கி பதிலளித்தாள்: தெரிந்து அந்த ரோகத்தை நீக்கினல், அரசன் நிச்சயம் பிழைத்து விடுவான்; அந்தப் பெரிய பிணியும் எப்படித் தீர்க்கப்படலாம் என்பதையும் கேளுங்கள். முதலில் சுடும் நெய்யை அவன் தலையில் தேய்க்கவேண்டும்; பிறகு வெகு நேரம் அவனை உச்சிவேளையில் கடும் வெய்யிலில் உட்காரவைத்து, அதன் மேல் அவன் காதுத் துவாரத்தில் ஒரு குழாயை வைக்க வேண்டும். குழாயின் மற்றொரு நுனியை குளிர்ந்த ஜலம் நிறைந்த பானை மீது வைக்கப் பட்ட தட்டுவொன்றின் நடுவே இட்ட ஓட்டைக்குள் நுழைக்கவேண்டும். தலை வெயிலில் கொதித்து, வேர்வை விட்டதும் அதனல் வாடி வதங்கிப்போய் பூரான்கள் மண்டையை விட்டு, காதுத்துவாரம் வழியே குழாய்க்குள் நுழைந்து, குளிர்ச்சியை வேண்டி குடத்திற்குள் விழுந்துவிடும். இப்படி அரசனை அந்தப் பெரும் பிணியிலிருந்து காப்பாற்றலாம்." இப்படியரக்கி தன்னுடன் மரத்தின் மேலிருந்த தன் மைந்தரிடம் சொல்லி முடித்தாள். பொந்திற்குள்ளிருந்த கீர்த்திஸேனை இதையெல்லாம் கேட்டு, "இந்த இடத்திலிருந்து தப்பினேனானல், இவ் வரக்கி சொல்லிய யுக்தியைக் கொண்டு அவ்வரசனைக் காப்பாற்றுவேன். இக் காட்டின் எல்லையிலிருந்துகொண்டு இருந்தால், இந்த ஸௌகர்யம் காரணமாகவே வர்த்தகர் இவ்வழியாகவே போவார்கள். இதைப் பரலோகமடைந்த அந்த ஸமுத்ரதத்தனும் எனக்குச் சொல்லியிருந்தான். ஆகையால் இந்த வழியாகவே என் கணவனும் திரும்பி வருவான். நான் இங்கிருந்து எல்லைப் புறம் சென்று அங்கே வஸுதத்த புரத்தில் அரசனைப் பிணியிலிருந்து கரையேற்றி, அங்கேயே தங்கினவளாய் என் கணவன் திரும்பி வருவதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்." இப்படி யோஜித்துக் கொண்டு, மிகவும் கஷ்டப்பட்டு அவ்விரவைக்கழித்தாள். காலையில் அரக்கர் மறைந்தனர். பொந்திலிருந்து வெளி வந்து, புருஷவேடம் பூண்டு, காட்டின் நடுவே போய்க் கொண்டிருக்கும் கீர்த்திஸேனை பிற்பகலில் இடையன் ஒருவனைக் கண்டாள். ஸாதுவான அவளது தாங்காமை

* ஒரு வகை பூதங்கள்.

யையும் அவள் நடந்து வந்திருக்கிற தூரத்தையும் கண்டு அவ்விடையன் மனதிளகிப்போக, கீர்த்திஸேனை அவனிடம் நெருங்கி "இது என்ன இடம்? என்று கேட்டாள். இடையன் பதிலளித்தான்:" "வஸூதத்தபுரம் என்று பெயர், இதோ நம் முன் இருக்கிறது. இங்கு அவ்வரசனும் பிணிபட்டு இறக்கும் தருவாயிலிருக்கிறுன்". அதைக் கேட்ட கீர்த்திஸேனை "என்னை யாராவது அவ்வரசன் முன்னழைத்துப் போனுல், எனக்கு அவனுடைய நோயைத் தீர்க்கத்தெரியும்," என்று அவ்விடையனிடம் சொல்ல, இடையன் "நான் அங்கு தான் போய் கொண்டிருக்கிறேன். என்னுடன் வா, உனக்காக முயற்சி செய்கிறேன்" என்றுன். "ஸரி" என்று கீர்த்திஸேனை சொல்ல அந்த ஆண் வேடம் பூண்ட பெண்ணை வஸூதத்தபுரத்திற்கு இடையன் அழைத்துப் போனுன். அங்கு துன்புற்றவனுய் நிற்குகும் வாசற்காப்போனிடம் சுபஸூசகமாயிருக்கும் அந்த ஸமாசாரத்தைச் சொல்லி, அப்பெண்ணை இடையன் ஒப்பித்தான். வாசற்காப்போனும் அரசனிடம் அதைத் தெரிவித்து, அரசன் கட்டளையின் மேல் தீங்கற்ற கீர்த்திஸேனையை அரசனிடம் போகச் செய்தான். வியப்புறத்தக்க அவளுடைய உருவைக் கண்டமாத்திரத்திலேயே நோயுற்ற அரசன் மனத்தேறுதலடைந்தான்; நடக்கப்போகும் நன்மை தீமைகளை உள்ளம் அறிந்து விடுமல்லவா? "நற்குறிப்புகளுள்ளோனே! எனக்கேற்பட்டிருக்கும் இப் பிணியை நீ போக்கடித்தால், என் ராஜ்யத்தில் பாதியை உனக்கு அளிக்கிறேன். ஒரு பெண் என் முதுகிலிருந்து போர்த்திருந்த கருப்புக் கம்பளியை எடுத்தெறிந்ததாய் ஸ்வப்னத்தில் கண்டேன்; அதிலிருந்து என் நோயை நீ தீர்ப்பாய் என்று நிச்சயம் அறிவேன்" என்று ஆண் வேடத்திலிருந்த கீர்த்திஸேனையிடம் அரசன் சொன்னுன். கீர்த்திஸேனை யதைக்கேட்டு "இன்று பொழுது போய்விட்டது; அரசே! நாளை இந்த ரோகத்தை நீக்குகிறேன்; அதைரியப் படவேண்டாம்" என்று சொல்லிவிட்டு அரசன் தலையில் பசு நெய்யைத் தேய்க்க வைத்தாள். அதனுல் அரசனுக்கு வலியும் குறைந்து தூக்கமும் வந்தது. "வைத்திய வுருவாய் ஏதோ தேவதைதான் ஒன்று நம் புண்ணிய வசத்தால் வந்திருக்கிறது" என்று அங்கு எல்லோரும் கீர்த்திஸேனையைப் புகழ்ந்தார்கள். பட்டமஹிஷியும் கீர்த்திஸேனையை பற்பல வுபசாரங்களைக் கொண்டு உபசரித்து, வேலைக்காரிகளோடு கூடிய தனி விடுதியையும் அவளுக்கு ஏற்படுத்தினுள். மறுநாள் உச்சி வேளையில் மந்திரிகளும், மகிஷிகளும் பார்த்துக்கொண்டிருக்க, கீர்த்திஸேனை அரசனுடைய மண்டையிலிருந்து காது வழியாய் நூற்றைம்பது பூரான்களை முன் அரக்கி சொன்ன ஆச்சரியமான முறையில் வெளியே இழுத்தாள். குடத்தில் அப்பூரான்களை வைத்துவிட்டு நெய், பால் முதலியவற்றைத் தேய்த்து அரசனுக்குத் தேறுதலை யளித்தாள். நோயிலிருந்து விடுபட்ட அரசன் மெள்ள மெள்ளத் தேறுதலடைந்ததும், குடத்தில் அப்பூச்சிகளைக் கண்ட எவர்தான் வியப்புறவில்லை? தன் மண்டையிலிருந்து வெளிவந்த அந்தக் கெட்ட பூச்சிகளை அரசனும் கண்ணுற்று, அப்படியே தியானத்தில் ஆழ்ந்தவனுய் நின்றுன்; மனதினுள் இன்புற்று, தனக்கு மறுபிறப்பு ஏற்பட்டதாய் நினைத்தான். பிறகு நீராடிக் கொண்டாட்டங்கள் கொண்டாடி அரசன் கீர்த்திஸேனையை கௌரவித்தான்; அவள் ராஜ்யத்தில் பாதி தனக்கு வேண்டாமென்று சொல்லிவிட, அரசன் அவளுக்கு கிராமங்களையும், யானைகளையும், பொன்களையும் அளித்தான். "நம் பிரபுவுக்கு உயிரை அளித்த இந்த வைத்தியரை நாம் பூஜிக்கவேண்டும்" என்று பிறகு ராணியும் மந்திரிகளும் பொன்னும் ஆடைகளும் வழங்கி கீர்த்திஸேனையை நிரப்பினுர்கள்.

கீர்த்திஸேனையோ "கொஞ்ச காலம் நான் ஒரு விரதத்தைக் கொண்டிருக்கிறேன்" என்று தன் கணவனை எதிர்பார்த்தவளாய் அப்போது தனக்களிக்கப்பட்ட பொருளனைத்தையும் அரசனிடமே கொடுத்து வைத்தாள்.

வஸூதத்தபுரத்திலுள்ள அனைவராலும் ஸம்மானஞ் செய்யப்பட்டு ஆண்வேடத்துடன் கீர்த்திஸேனை சில நாட்கள் அவ்வூரிலேயே தங்கியிருக்கையில், ஊராரிடமிருந்து அவ்வூர் வழியே வலபீயிலிருந்து தன் கணவனுன தேவ

ஸேனன் என்ற வர்த்தகன் வந்திருப்பதாய்க் கேள்விப்பட்டாள். அவ்வூரில் தேவஸேனனுடைய வாத்தகக் கூட்டம் வந்ததும், மயில் மேகத்தைக் காண்பதுபோல், கீர்த்திஸேனை தன் கணவனைக் கண்டாள், வெகு நாள் ஏக்கத்தாலும் தாபத்தாலும் உருகிப்போன தன் சித்தம் ஆனந்தக் கண்ணீர் என்ற அர்க்யத்தைக் கணவனுக்கு அளிக்க, அவனுடைய கால்களில் விழுந்தாள். கணவனும் பகலில் சூரிய கிரணங்களால் கண்ணுக்குத் தென்படாமலிருக்கும் சந்திரகலையைப் போல் வேஷத்தால் மறைந்திருந்த தன் மனைவியை உற்று நோக்கித் தெரிந்துகொண்டான். அவளுடைய முகமதியைக் கண்டு சந்திர காந்தக்கல் போலான அந்த தேவஸேனனுடைய ஹிருதயம் நழுவி விழாமலிருந்தது ஆச்சரியம்தான்.

பிறகு இவ்விதம் தன்னை யாரென்று கீர்த்திஸேனை வெளிப்படுத்திக் கொண்டதும், "இதென்ன?" என்று அவளுடைய கணவன் வியந்து நிற்கையில், வர்த்தகக் கூட்டமும் அப்படியே வியப்புற, இவற்றையெல்லாம் அறிந்த அரசன் வஸுதத்தனும் தானே அங்கு வந்தான். அரசனால் வினவப்பட்டு, தன் கணவன் முன் தன் மாமியார் கொடுமையாய் நடந்துகொண்டதிலிருந்து ஆரம்பித்த தன் வரலாற்றைக் கீர்த்திஸேனை சொன்னாள். அதைக் கேட்ட தேவஸேனனுக்கு கோபமும், பொறுமையும், வியப்பும் கடைசியில் களிப்பும் உண்டாயிற்று; தன் தாயிடம் பாராமுகமானான். "கணவனிடம் கற்பு என்ற தேரேறி, நல்லொழுக்கமென்ற கவசம் பூண்டு, அறத்தையே தேர்ப்பாகனாய்க் கொண்டு, தம் மதியையே கதியாய்க் கொண்டிருக்கும் கற்பரசிகள் வெற்றியையே பெறுவார்கள்" என்று அவ்விடமிருந்து அவ்வாச்சரியக் கதையைக் கேட்ட ஜனங்கள் எல்லோரும் ஸந்தோஷத்துடன் சொன்னார்கள். அரசனும் சொன்னான்: "கணவன் பொருட்டு துன்பத்தை யேற்றுக் கொண்ட இவள், துன்பங்களை யனுபவித்த ராமபத்னியான ஸீதா தேவியையும் வென்றனள் போலும்! எனக்கு உயிரையளித்த இவள் எனக்கு தர்மமுறையில் கூடப்பிறந்தவளே." கீர்த்திஸேனை அரசனுக்குச் சொன்னாள்: "அரசே! நீர் எனக்கு அன்பினால் அளித்த கிராமங்கள், யானைகள், குதிரைகள், ரத்தினங்கள் முதலிய பொருள்களை உம்மிடம் கொடுத்து வைத்திருந்தேனே, அவைகளை என் கணவனிடம் அர்ப்பணஞ் செய்துவிடும்." அரசனும் அப்படியே கிராமம் முதலியவற்றை அவளுடைய கணவன் தேவஸேனனிடம் கொடுத்து, பிரீதியடைந்தவனாய் கௌரவப்பட்டமொன்றையும் தேவஸேனன் தலையில் கட்டினான்.

பிறகு அரசன் கொடுத்த பொருட் குவியல்களாலும் தன் வர்த்தகத்தில் ஸம்பாதிக்கப்பட்ட பொருட் குவியல்களாலும் திடீரென நிரம்பிப்போன பொக்கிஷத்துடன், தாயைத் துறந்து, கீர்த்திஸேனையை மெச்சி, அவ்வஸுதத்தபுரத்திலேயே தேவஸேனன் தங்கிவிட்டான். கொடிய மாமி தொலைய, ஒப்பில்லாத் தன் செயல்களால் புகழ் பெற்று, அவ்வூரிலேயே எல்லா போகங்களும் செல்வங்களும் அடையப்பெற்று, கணவனுடன் அவனுடைய நல்வினையின் பயனே உடல் எடுத்தாற்போல் வஸித்து வந்தாள்.

இப்படியாக தெய்வத்தின் கட்டளையைப் பொறுத்துக்கொண்டு, ஆபத்துகளில் தம் ஒழுக்கத்தைக் காப்பாற்றிக்கொண்டு, கற்பரசிகள் தம் பெரும் மனோதிடத்தால் காப்பாற்றப்பட்டவர்களாய் தமக்கும் தம் கணவர்களுக்கும் நன்மையைச் செய்துகொள்ளுகிறார்கள்.

ராஜகுமாரியே! இதுபோல, மாமி நாத்தி இவர்களால் ஏற்படும் தீங்குகள் புக்ககம் புகுந்த பெண்களுக்குப் பலவுள. ஆகையால் மாமியில்லாததும் துஷ்டையான நாத்தியில்லாததுமான புக்ககம் ஒன்று உனக்குக் கிடைக்கவேண்டுமென்று நான் வேண்டிக் கொள்ளுகிறேன்."

இப்படியாக ஆனந்தமாகவும் அற்புதமாகவுமிருந்த கதையை அஸுர ராஜ குமாரியான ஸோமப்ரபையிடம் கேட்டு, மனுஷ்யராஜ புத்ரியான களிங்கஸேனை ஸந்தோஷப்பட்டாள். இந்த விந்தையான கதை முடியட்டும் என்று காத்திருந்தவன்போல் கதிரவனும் மறைவதற்கிருந்தபோது, ஏங்கும் களிங்கஸேனையை தழுவிவிட்டு, ஸோமப்ரபை தன் இருப்பிடம் சென்றாள்.

மூன்றும் அலை முற்றிற்று.

(360-ம் பக்கத் தொடர்ச்சி.)

துர்ஜ :—நாம் போவதற்கு பீமனிடம் சொல்வானேன்?

துரி :—பீமன் அனுப்பினுல் தான் சித்தப் பாக்கள் இருக்குமிடம் போகமுடியும். நானும் பீமனுதவியாலே தான் போகிறேன்.

துர்ஜ :—அப்படியானுல் வா, அப்பா, போவோம்.

துரி :—குழந்தாய! எங்கு கூப்பிடுகிருய்?

துர்ஜ :—என்ன அப்பா! பீமனிடத்திற்குத் தான்......நீங்கள் தானே சொன்னீர்கள்?

துரி:—குழந்தாய்! நீ நல்ல புத்திசாலிதான். (சிரித்துக்கொண்டு) என்னுல் வருவதற்கு சக்தியில்லையப்பா. நீ மாத்திரம் செல்.

துர்ஜ :—நான் உன்னை தூக்கிச் செல்கிறேனப்பா.

துரி :—நீ குழந்தையாயிற்றே! உன்னுல் முடியாது.

(துர்யோதனனது மற்றைய மனைவியர்கள் அவனைத் தேடிக்கொண்டு அழுதவண்ணம் வருகிருர்கள்.)

துர்ஜ :—(தனக்குள்) ஹா! என்ன இது? எனது தாய்மார்கள் இப்படி அழுதுகொண்டு வருகிருர்களே! (வெளிப்படையாக) தாய்மார்களே! வாருங்கள். இதோ நான் இருக்கிறேன்; இதோ அரசர் படுத்திருக்கிருர்.

துர். மனைவியர்:— ஹா! நாயக! மஹாவீர!! (துர்யோதனன் பாதத்தில் விழுந்து அழுகின்றனர்)

திரு: —ஐயோ! கஷ்டம். இனி என் அபிமான ஸ்திரீகளின் கதி என்னவோ!

காந் :—(கண்கள் துணியால் மறைக்கப் பட்டதுடன்) ஹா! எனக்கு இந்த பெரிய பாக்கியம் கிடைத்தது! எங்கே யிருக்கிருயப்பா துரியோதனு?

துர்ஜ :—பாட்டீ இதோ பூமியில் சுகமாக படுத்திருக்கிருர்.

திருத :—உலகமெல்லாம் ஒரு குடைக் கீழ் ஆண்டு சக்கிரவர்த்தியாய் விளங்கிய என் புத்திரன் அநாதையாய் பூமியில் கிடக்கிருனு? இதுவும் என் பெரிய பாக்கியமே!

காந் :—ஐயோ! துரியோதனன் மூர்ச்சையாய் இருக்கிருன் போலிருக்கிறது. அதனுல் தான் பதில் பேச வில்லை!

துரி :—உனது பிள்ளையான நான் உயிர்போகும் வரையில் சற்றும் மூர்ச்சையடையமாட்டேன்: இப்பொழுது யாரேனும் பகைவர் யுத்தம் செய்யினும், யான் என் சக்தி உள்ளதைக் கொண்டு இறுதி வரை போராடுவேன்!

திருத :—யாரது?

காந் :—நான்தான் பயமறியாத பிள்ளைகள் நூற்றுவரையும் பலி கொடுத்த பாக்கியவதி காந்தாரி!

துரி :—தாய் தந்தையர்களே! துர்யோதனன் நமஸ்கரித்துப் பேசுகிறேன். யான் இருக்கும் வரையில் நீங்கள் வருத்தப்படக்கூடாது. நான் இன்று பிறந்தவனென்று நினைந்து மகிழுங்கள்!

திருத :—எப்படியப்பா? நான் வருத்தப் படாமலிருக்க முடியும்? உன்னுடைய வீரத்தைப் பலமாகக் கொண்ட எனது 99 புத்திரர்களை இழந்தபோதிலும் நீ ஒருவன் இருப்பதைக் கொண்டு வருத்தமுருமல் இருந்தோம். உன்னுல் நூறு பேரும் இருப்பதாக எண்ணியிருந்தேன். இப்பொழுதோ நீயும் இறந்து போகின்றுய். இதனுல் நூறு பேரது துக்கமும் எங்களை பாதிக்கின்றது. இதை எப்படி எங்களால் தாங்கமுடியும்? (திருதராஷ்டிரன் கீழே விழுகிருன்.)

துரி :—ஐயோ! நான், எனது தந்தை பூமியில் விழுந்து கிடக்கப் பார்க்கும்படியாயிற்றே! தந்தையே! கவலை வேண்டாம், தாயாரை சமாதானப் படுத்துங்கள்.

திருத :—எப்படி, புத்ரா, சமாதானமடைய முடியும்?

துரி :—தந்தையே! நான் யுத்தத்தில் நேருக்கு நேராக சண்டை செய்தேன்! வீரஸ்வர்க்கம் போகிறேன். உயர்ந்த பதவியைப் பெற்றேன். இதோ உன் பாதத்தில் மாத்திரம் வணங்கிய தலையையுடைய நான் எந்த மானத்தோடு பிறந்தேனோ அந்த மானத்தோடேயே வீரஸ்வர்க்கம் செல்கிறேன்!

திருத: —இயற்கையிலேயே குருடனும், கிழவனும், உயிரில் பற்றில்லாதவனுமான என்னை புத்திரசோகாக்னியானது தகிக்கிறதே! ஹா! இந்தவிதம் என்னை சோகிக்கச்செய்த பாபியாவனோ.........? (அழுகிறான்)

பலரா :—என்ன! கஷ்டமிது? இந்த நிலையில் திருதராஷ்டிரனை சமாதானப்படுத்த யாரால் முடியும்? எவ்விதம் சாத்தியமாகும்?

துரி :—(காந்தாரியைப் பார்த்து) தாயே! உங்களிடம் ஒன்று தெரிவித்துக் கொள்கிறேன். தயவு செய்து கேட்கவேண்டும்!

காந் :—துரியா, விரும்பியதைச் சொல்.

துரி :—தாயே! நான் ஏதேனும் புண்ணியம் செய்திருப்பேனானால் அதன் பயனாக அடுத்த ஜன்மத்திலும் உங்களுக்கு நான் புத்திரனாகப் பிறக்கவேண்டும். யான் என்றும் வேண்டுவது இதுவே. இதோ வணங்காமுடிமன்னன் வணங்குகிறேன்.

(தலையை பூமியில் சாய்கிறான்)

காந் :—துரியோதனா? நான் சொல்ல எண்ணியதையே தெரிவித்தாய்.

துரி :—(பட்டத்து மனைவியைப் பார்த்து) மாலவி! நான் சொல்வதை நீயும் கேட்பாய் என்று நினைக்கிறேன். ஏ க்ஷத்திரியகுலப் பெண் ரத்தினமே!! தோள் வலியற்று துணை வலியும் போய், தொடையும் முறிக்கப்பட்ட நான் போரில் நேர் முகமாகக் கொல்லப்பட்டேனென்று வருந்தாதே.

மாள :—(அழுகையுடன்) பிராண நாயக! மஹாவீர!! ராஜாதி ராஜசிம்மமே!!! தாங்கள் இறந்துபோக நான் வருந்தாமல் எப்படியிருக்க முடியும்? என் உயிர் தங்களோடு போனதாகவே எண்ணுகிறேன்.

துரி :—பௌரவி! நீயும் கேள்; வேதத்தில் கூறியபடி யாகங்கள் பல செய்தேன்; பந்துக்களைக்காப்பாற்றினேன்; சத்துருக்களை அடக்கியாண்டேன்; பதினெட்டு அக்குரோணி ஸைந்யத்தை அதிகாரம் செலுத்தி ஆண்டேன்; எல்லா போகங்களும் அனுபவித்தேன். இனிமேல் இந்திரபோகமும் அனுபவிக்கப்போகிறேன்; ஆதலால் எனக்குச் சமானமானவர் இல்லை. இதனால் நீங்கள் என் வீர மானத்திற்காகப் புகழ்ந்து மகிழ்ந்து, மரணத்திற்காக வருந்தாதீர்கள்!

பௌரவி :—நாதா! தங்களுடன் உடன் கட்டை ஏறுவது என்று நிச்சயம் செய்து கொண்ட நான் ஏன் அழப்போகிறேன். தங்களை விட்டு நான் தனித்திருந்தாலல்லவா வருத்தம்?

துர் :—துர்ஜய! நீயும் இப்பொழுது நான் கூறியபடி வருந்தாமல் தாத்தாவுடனேயே வாழ்ந்துவருவாயாக. பாவம்! உனது சிறு வயதிலேயே தகப்பனுக்கு மரணம்! எல்லாம், பாண்டவர் செய்த தவமே!! குழந்தாய், நீ அபிமன்யுவின் தாயாகிய திரௌபதியை உனது தாயெனவே கொண்டு மரியாதையாய் நட. அவள் மஹா வீர பத்நி. எனது மரணத்திற்கு அவளே கூந்தல் அவிழ்த்தாள்.

திருத :—காந்தாரி! நமக்கு என்ன சொல்லப் போகிறான் துரியோதனன்?

காந் :—நாதா! நானும் அதையே எதிர்பார்க்கிறேன். ஆனால் நமக்கு இப்பொழுது இவன் சொன்னதை எல்லாம் வைத்துக் கொள்ளவேண்டியதுதான்.

துரி :—(துர்ஜயனை நோக்கி) குழந்தாய்! கடைசியாக ஒரு வார்த்தை சொல்கிறேன். நான் யுத்தத்தில் பகைவரால் நேர் முகமாகக் கொல்லப்பட்டேனென்று நினைந்து வருந்தாதே. தைரியமாயிரு! தருமபுத்திராது அகன்றதான வலது கையைத் தொட்டவனாய் அர்ச்சுனன் முதலானவர்களோடுகூட என் பெயரைச் சொல்லி நாளைக்கு தர்ப்பணஜலம்

விடுவாயாக! (வருத்தத்துடன் துர்ஜயனை கட்டிக் கொள்கிறான்).

துர் :—அப்படியே! அப்பா செய்கிறேன்.

பலரா :—(இதைப் பார்த்து) கஷ்டம்! வீரமானது பச்சாத்தாப மாகமாறிவிட்டது! (எங்கும் பெரும் சப்தம் கேட்கிறது) ஹா என்ன சப்தமிது! யுத்தம் முடிவடைந்த பிறகு ஆயுதம் முதலியவை சிதறுண்டு, துந்துபி வாத்தியமில்லாமல் இருக்கும் இந்த யுத்த பூமியில் எந்த வீரனுடைய வில்லானது நாணேற்றப்படுகிறது? இதோ பருந்துகள் காகங்கள் இவற்றின் கூட்டங்கள் சிதறிக்கொண்டு பறக்கின்றன. ஆம்; இது அசுவத்தாமன் என்று நினைக்கிறேன். இதோ அவன் தான் மிகுந்த கோபத்தோடு ஊழிகாலத்து ருத்திரன் போல் வருகிறான். கையில் மேருபோன்ற வில்லை வளைத்துக் கொண்டே வருகிறான்.

(அசுவத்தாமன் இவர்கள் இருக்குமிடம் வந்து நுழைகிறான்.)

அசு :—ஏ! அரசர்களே! யுத்தத்தில் புறங்காட்டி ஓடிய அரசர்களே, கேளுங்கள். கதா யுத்தத்தில் அடிபட்டுக் குத்துயிராய்க்கிடக்கும் துரியோதனனல்ல நான்! யுத்தத்தில் தன் கடமையைச் செலுத்தாதவனும் பிளக்கப்பட்ட அம்புகளையுடையவனுமான கர்ணனல்ல நான்? எதிரிகளைச்சிதற அடித்து, சரமாரி பொழிந்து செஞ்சோற்றுக்கடன் கழித்த துரோணரது புத்திரன் நான்! வில்லம்பு சொல்லம்பு இரண்டும் பொய்க்காது தைக்கும் வாய்மையையுடைய துரோணரது புத்திரன் நான். சீ! இது கிடக்கட்டும் துரியோதனனது ஏவலைப் பூர்த்தி செய்ய சித்தமாயிருந்த நான் எனது தந்தைக்குத் தர்ப்பணம் செய்து கொண்டிருக்கையில், மாயாவியான கிருஷ்ணனால், எனது கௌரவகுல ராஜன் வஞ்சிக்கப்பட்டான். இதை எவர் நம்புவர்? யான் இருந்திருப்பேனானால் இந்த துரியோதனனைத் திரிமூர்த்திகளிலும் எதிர்க்க வொட்டாது துரத்தி விடுவேன்! ஹா! யானே வஞ்சிக்கப்பட்டேன்!

பரசுராமரால் பிளக்க முடியாத கவசத்தையுடைய பீஷ்மர் சேனாபதியாக இருக்கும் சேனையை யுடையவன் எவனோ? பதினெட்டு அக்குரோணி சேனைகளுக்கு எவன் தலைவனோ? அந்த வணங்கா முடிமன்னனாகிய துரியோதனன் எங்கே கிடக்கிறான்?

(துரியோதனன் பக்கத்திற்போய்ப்பார்த்து) ஹா! இதோ இரத்தத்தால் ஸ்நானம் செய்யப்பட்ட இவன் ஸந்த்யா காலத்தில் கோபித்து விளங்கும் செவ்வானம் போன்று விளங்குகிறான். ஹா! (துரியோதனனைப் பார்த்து) ஏ! குருகுல மகிபா! இதுவோ உன் வாழ்க்கையின் இறுதி?

துரி :—குருபுத்திர சிகாமணியே! ஏன்? பழிக்குப் பழி வாங்கப்பட்டேன். "முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்" என்பது உறுதியாயிற்று. நீர் வருந்தாதீர். இது எனக்கு வேண்டியதே!

அச்வ :—(கோபத்தோடு கையில் வில்லை எடுத்து) துரியோதனா? உன் வார்த்தை என்னை அக்நிபோன்று தஹிக்கிறது! மறுமுறை பேசாதே, என்னை மறந்து விட்டாயா? அந்தப் பாண்டவர்கள் எங்கே? இதோ பழிக்குப் பழி ஒரு நொடியில் வாங்குகிறேன்.

துரி :—ஐயோ? இது என்ன! வேண்டாம்.

அச்வ :—அடே? நீ தோற்றுப்போனாய்? நான் தோல்வியடையவில்லை. உனக்காக நான் செய்யவேண்டிய கடமையைச் செய்கிறேன். உன் வீட்டில் உண்ட நன்றிக்காக பதில் நன்றி காட்டுகிறேன் என் தகப்பனைக் கொன்ற பழியை வாங்குகிறேன். என் மனம் கொதிக்கின்றது. ஹா? மஹாமாயாவியான கிருஷ்ணனையும் துவம்சம் செய்து விடுகிறேன். எல்லாம் அவனாலேதான். இதோ புறப்பட்டேன். (சுற்று முற்றும் பார்க்கிறான்).

துரி :—பிராமணோத்தமரே! கோபம் வேண்டாம். நீர் நினைத்ததை செய்யவல்லவரே! ஆனால் அதற்கு இது சமயமல்ல. தாதாவான கர்னன் போய் விட்டான்; பிதாமகரான பீஷ்மர் போய் விட்டார்; குருதேவரான உமது தந்தை துரோணரும் போய் விட்டார்; எனது சகோதரர்கள் எல்லோரும் போய் விட்டனர்; நானும் இதோ போய்க் கொண்டிருக்கிறேன். இன்னும் சில விநாடிகள் தான் என் உயிர் தங்கும். ஆதலால் இனி எனக்காக உமது வில்லை எடுக்காதீர். எனக்கு விருப்பமில்லை. தருமம்

என்பது பாண்டவர் பக்கமே. 'அறத்தைப் பாபம் வெல்லாது' என்பதை நீர் அறியாதவரா? வேண்டாம்! வேண்டாம்!!

அசுவ :—குருகுலாதிப! எனக்குப் புத்தி புகட்ட வேண்டாம். உன் நிலையைப் பார்க்க என் மனம் கொதிக்கின்றது. உன் உயிர் இருக்கும் போதே உனக்குப் பிரியமான காரியம் ஏதேனும் யான் செய்து தீரவேண்டும். பீமனால் உனது மானம் அபகரிக்கப்பட்டது என்பதை நீ உணரவில்லையா?

துரி :—வேதியரே! அப்படி நினைக்கவேண்டாம்; நான் மானம் இழக்கவில்லை. யான் அநுபவிக்க வேண்டியதை அநுபவிக்கிறேன். சிறிது ஆலோசித்துப்பாருங்கள்; பாஞ்சாலியின் கூந்தல் என்னாலேயல்லவா மலரிழந்து விரிக்கப்பட்டது. பாண்டவர்களின் சபதம் என்னாலேயல்லவா? தருமன் சூதில் தோற்றது என்னாலே யல்லவா? திரௌபதி சபையில் மானபங்கப்பட்டது என்னாலே யல்லவா? அபிமன்யு வஞ்சனையால் கொல்லப்பட்டது என்னாலே யல்லவா? இவைகள் யாவும் எனது கொடுமையல்லவா? அதற்குப் பிரதியாக பாண்டவர்கள் எனக்குச் செய்தது வெகு சொற்பமே! நான் இன்னும் தண்டிக்கப்படவேண்டும்.

அசுவ :—கௌரவகுல வீர! நன்று சொன்னாய். நீ சொல்லியது உனக்கேற்றவையே. ஆனால் எனது சபதத்தை நிறைவேற்றாமல் இரேன். உன் மேலும் எனது ஆத்மாவின் மேலும் வேதத்தின்மேலும், இந்த எனது வில்லின் மேலும் ஆணை செய்கிறேன். இன்றிரவிற்குள் பாண்டவர் ஐவர் தலைகளையும் அறுத்துக் கொண்டு வந்து உனக்கு மாலை போடுகிறேன். நீ இன்று உயிருடன் இருந்தாலும் ஸரி இல்லாவிடினும் ஸரி. பாண்டவர் யமனுலகு போவது திண்ணம்;

பலரா :—பலே அசுவத்தாமரே! நீர் நினைத்த காரியத்தை முடிப்பீர். உம்முடைய வீரமே வீரம். புலிக்குப் பிறந்தது பூனை யாகுமா?

அசு :—(திரும்பிப் பார்த்து) ஓஹோ? யாதவாதிபர் பலராமரா? நல்லது; வீரரே யான் பிராம்மண புத்திரனல்லவா? சொன்ன சொல் தவறமாட்டேன் என்பது நிச்சயம்.

திரு :—(சிரித்து) என்ன? இது நடக்கக் கூடியதா? இனி யார் எப்படி யானால் என்ன?

அசுவ :—(துர்ஜயனைப் பார்த்து) குழந்தாய் துர்ஜய! இப்படிவா! உன் தந்தையின் பராக்கிரமத்தால் ஆட்சிசெய்யப்பட்ட இந்த கௌரவராஜ்யத்திற்கு பட்டாபிஷேக மில்லாமலேயே உன்னை பிராமணனாகிய எனது வேத வாக்கால் அபிஷேகம் செய்தேன். நீயே இனி சக்கிரவர்த்தி, உனக்கு இடையூறு வாராதபடி நான் பார்த்துக் கொள்கிறேன்.

துரி :—ஹா? இது என்ன? ஆச்சரியம்! நான் எண்ணியதை அசுவத்தாமன் நிறைவேற்றி விட்டான்; எனக்குப் பலன் கிடைத்தது. இதோ? எனது உயிர் அகல்கின்றது. இதோ! கர்னன் கூப்பிடுகிறான். இதோ! எனது தம்பியர் அழைக்கின்றனர். இதோ ஊர்வசி முதலான அப்ஸரஸ்கள் வந்திருக்கின்றனர்! இதோ இதோ இந்திரன்! இதோ ஆயிரம் அன்னங்கள் சுமக்கும் வீரவாஹு விமானம் வந்து விட்டது. நான் எல்லோரிடமும் விடை பெற்றுக் கொள்ளுகிறேன். போகிறேன். ஹா! (துரியோதனன் இறந்து போகிறான்.)

திருத :—புத்திரனில்லாத ராஜ்யம் எனக்கு வேண்டாம். நான் காட்டிற்கு சென்று தவம் பண்ணப் போகிறேன்: வா! காந்தாரி!

காந் :—பெண்டிருக்குப் பதியே தெய்வமாதலால் நானும் உங்களுடனேயே வருகிறேன்.

(போகிறார்கள்)

அசுவ :—(கோபத்துடன்) துரியோதனன் இறந்தான்! ஸந்தியாகாலம் வந்து விட்டது. இதோ புறப்பட்டேன்; இரவுக்குள் பாண்டவர்கள் ஐவருடைய தலைகளையும் கொய்து பந்தாடுகிறேன். துரியனது பிணத்திற்குமாலை போடுகிறேன்.

(கையில் வில்லுடன் ஓடுகிறான்)

பலரா :—உன் காரியம் வெற்றியடைவதாக! நான் போய் வருகிறேன். (போகிறார்.)

பெண்டிர் பகுதி.

வாள்விழியார் வெற்றி.

"கை. சு. வே."

[ஆலிவர் வென்டல் ஹோம்ஸ் என்னும் அமெரிக்கப் புலவரது வழியிலாக்கப் பெற்றது.]

சிருஷ்டியில் காணப்படும் பல வகைப்பட்ட சக்திகளும் ஒருங்கேயும் பிரிந்தும் தோன்று மிடமொன்றேயுளதென அறிஞர் கூறுகின்றனர். அது தான் அம்பிகையின் கடைக்கண். அதன் செயல் 'சக்தி நிபாதம்' எனக்குறிக்கப் பெற்றது. இதனுண்மையை யறிந்தவர் தேவியை எவ்வகையேனும் நேரிற் கண்டவர் மட்டுமே யாவர். ஆயினும் நம் போன்ற சாமானியரும் அதனை ஒருவாறுணர வழியுண்டு. அம்பிகையின் திருவுருவங்களே யெனக் கருதி வழிபடத்தக்கவ ரெனும் உபமேசதத்திற் கிலக்காய் நிற்கும் மானிட மங்கையரின் கண்களிலும் இச் சக்தியின் ஓர் திவலையின் தோற்றத்தைக் காண்கிறோம். அஃது ஆடவருள்ளத்திற் கள்ளத்தனமாய்ப்பாய்ந்து அவனை வேண்டியவழி திருப்பவும், ஆங்கு மகிழ்வு, சோர்வு ஊக்கம் உயர்வு, பயம், துணிவு முதலிய கிளர்ச்சிகளை எழுப்பவும் தணிக்கவும்வல்லதெனக் கவியுலகம் முறையிடுகிறது. நொடிப் பொழுதில் அது தன் வேலையை முடித்துவிட்டு ஏழுலகையும் தாண்டிவிடுகிறது. வாயுவேகம், மனோவேகம். மின்னல் வேகம் எல்லாம் இதன் அம்சமே. மானவிழி, மீன்விழி, மின்விழி, சேல்விழி, வேல்விழி, வாள்விழி யெனவும், காமனுடைய கணைகளெனவும் கவிகள் வர்ணிப்பதும் இதுவே. ஆடவர் அதிகாரமெல்லாம் அடுப்பங்கரைக்கு வெளியேதான் என்பது யாரும் வாயை விட்டுச் சொல்லாமல் எல்லோரும் ஒப்புக்கொள்ளுகிற விஷயம். ஆடவர் பிடிவாதக்காரர் என்று பெயர் வாங்கிக் கொண்டு மகிழ்கின்றனர். ஆனால் முடிவில் நடை பெறுவதென்னவோ பெண் மக்களின் திருவுள்ளமே. ஆடவரின் வேலை யெல்லாம் நீராவியந்திரத்தின் புகை, சிறல், வியர்வை, படப்படப்பு இவற்றுடன் கூடிப்பெரிதும் வியப்புறுத்தும், தோற்றமாம். பெண் மக்களின் திறமையோ வந்தசுவடு போனசுவடு தெரியாமல் வேலையை முடித்துவிடும் மின்வொட்டாம்.

நவநாகரிகபுரம் நீதி மன்றத்தின் கொலைக் களத்தலைவன் கார்முகிற் காலதண்டனென்பான், கைத்திறனினும் கத்தி கூர்மையொத்த புத்தி கூர்மையினும் நிகரற்றவனெனப் பெயர் பெற்றவன். ஒரு நாள் நீதி முறையில் சிரச்சேத தண்டனை பெற்ற குற்றவாளியொருவன் இவனெதிரே மேடையில் மண்டியிட்டுத் தலைவணங்கி "நின் கையால் உயிர் துறப்பது இன்பமெனக்கருதுமாறு இன்று நின் கைத்திறனைக்காட்டின், உன்னை வாயாற வாழ்த்திச் செல்வேன்" என்று வேண்டினவனுக் கட்டைமேல் கழுத்து வைத்துப் படுத்தான். காலதண்டனும் எழும்பி நின்று வாள் பிடித்துக் கையோங்கி வீசினன். 'தெண்ணீர் கயத்துட்' புரண்டு கொடுக்கும் சேலுடல் போல் ஏதோவொன்று சற்றுப் பளிச் சென்று மறைந்தது. கத்தியை உறையிலிட்டுக் காலதண்டனும் திரும்பினன். எதிரே படுத்திருந்த உடம்பிலிருந்து 'ஏன் தாமதம்?' என்று (சற்று ஈனஸ்வரத்தில் ஒருமாதிரி இரட்டைக் குழல் போன்ற) ஒரொலி கேட்டது. "என் வேலை முடிந்துவிட்டதே!" என்றான் காலதண்டன். "வேண்டுமானல் இதோ உன் ஸந்தேகத்தைத் தீர்த்துக்கொள்" என்று சொல்லிக்கொண்டே காலதண்டன் தன் கையிலிருந்த பொடி டப்பியைப் படுத்திருந்தவனது மூக்கிற் காட்டினதுதான் தாமதம்—ஒரே தும்மலில் தலை கழுத்தைவிட்டுத் துள்ளிப் படிக்கட்டுகளிற் குதித்தோடிக் கீழே சேர்ந்தது.

மின்னைப் பழிக்கும் கடைவிழித் தெய்வங்காள்! காலதண்டனின் வாள் நாமறியாது நம் தலையைக் கொண்டுபோக வல்லது. உங்கள் விழியோ எமதுள்ளத்தையே அவ்விதம் பறிமுதலாக்கி விடுகிறது. நினைவையும் வெள்ளத்திலடித்துக்கொண்டு போய்விடுகிறது. அவ்விழி நோக்கிற் காலனை யொளிந்து நிற்பானுயின் ஆங்கவனுக் கிரையாதலென்னே யினிமை! இறந்தும் இறந்தோமென்றுணரா திருத்தல் என்னே பாக்யம்!

அனுஷ்டானப் பகுதி

சங்கரர் திருமொழி.

''சங்கரரடிப் பொடி.''

ஸமீபத்தில் சங்கரர் தோன்றிய திருநாள் நம் நாடெங்கும் கொண்டாடப்பட்டது. அந்நாளைக் குறித்து, ஆசாரியர் திருவாய் மலர்ந்தருளிய 'பஜகோவிந்தம்' அல்லது 'மோகமுத்கரம்' என்ற சிறு நூலிலிருந்து சில பாக்களை இங்கு அதே சந்தத்தில் தமிழ்ப்படுத்தி' சங்கரரின் அடிகளிலேயே அர்ப்பணஞ் செய்கிறேன்.

கோவிந்தனை பஜி, கோவிந்தனை பஜி
கோவிந்தனை பஜி, ஏ! மதி மூடா!
காலன் நெருங்கும் போதோவுன்னை
இலக்கண சூத்திரம் காக்காது.

மூடா! விடு பணச்சேகர வாஞ்சையை
கோடு மாசை விட்டு நன்மதியைக் கோள்.
எப்பொருள் உன்வினைப்பயனய் வருமோ
அப்பொருளால் நீ மனதினுள் இன்புறு.

எதுபோலோ ஜலம் தாமரையிலையில்
அது போல் உயிரும் நிலையற்றதுவே.
காண்! பிணி பற்றுகளால் பிடிபட்டு
மாண்டது துயரால் உலகமனைத்தும்.

சிறுவன் விளையாட்டினிலே ஆழ்ந்தான்
தருணன், அந்தோ, தருணியில் ஆழ்ந்தான்;
கவலையில் ஆழ்ந்தான் கிழவனும் அந்தோ
எவரும் பிரம்மத்தில் ஆழ்ந்தாரில்லை.

போவாய் கங்கா ஸேது யாத்திரை
செய்வாய் நோன்புகள் தானங்கள் எல்லாம்;
அறிவில்லாதவற் கெம்மதத்தாலும்
அரிதே வீடு பிறப்பினும் பன்முறை.

மறுபடி ஜனனம், மறுபடி மரணம்
மறுபடியும் தாய் வயிற்றில் சயனம்!
தாண்டவே முடியா பவக்கடலிதிலே
ஆண்டவனே அருள்செய்தென்னை ரக்ஷி.

உன்னிடம் என்னிடம் அவனிடமும் ஹரி
என்னிடமாகாமல் வீணுய்ச் சினந்தனை!
எல்லோரிடமும் காண் ஒரு ஆன்மாவை
எல்லாவற்றிலும் விடு வேற்றுமையை.

பாடு கீதையை ஆயிரம் நாமாவை
நாடு மனத்துள் ஸ்ரீபதி உருவை;
விடு நின்மதியை நல்லோர் சேர்க்கையில்
கொடு நின் பொருளை எளியோர்க் கெல்லாம்.